தம்பியர் இருவர்

கங்கை புத்தக நிலையம்



அ.ச.ஞானசம்பந்தன்

தம்பியர் இருவர்

அ. ச. ஞானசம்பந்தன்



கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை–600 017

கங்கை முதற் பதிப்பு : மே, 1995

விலை ரூ 25 - 00

அச்சிட்டோர் :
கண்ணா பழநி அச்சகம்
11, டாக்டர் நடேசன் ரோடு, முதல் தெரு,
சென்னை - 600 005

முன்னுரை

கம்பநாடன் கலைக்கோயில் பற்றிய திறனாய்வில் **'நாடும் மன்னனும்'** என்ற நூலில் தந்தை பற்றியும், **'அரசியர் மூவர்'** என்ற நூலில் தாயர் பற்றியும் பேசப்பட்டதாகலின், அவற்றையடுத்து வெளிவரும் இந்நூல் மக்கள் பற்றிப் பேசுதல் முறைதானே? தசரதன் அரசனாதலின், அவனுக்கு இருவகை மக்கள் உண்டு. அவர்கள், பெற்ற மக்களும், கீழ் வாழும் மக்களும் எனப்படுவார்கள். அவன் பெற்ற மக்களுள் ஒருவனாகிய பரதனும், அவன் கீழ் வாழும் மக்களுள் ஒருவனாகிய குகனும் இந்நூலிற் பேசப்படுகின்றனர். காப்பியத் தலைவனாகிய இராமபிரான் தந்தை மூலம் பெற்ற தம்பியாவான் பரதன்; தானே விரும்பி ஏற்ற தம்பியாவான் குகன். இவ்விருவருடைய பண்பாடுகளையும் புலவன் எவ்வாறு கூறுகிறான் என்பதைக் காண்டலே இந்நூலின் நோக்கம்.

'இராமனுக்கு உடன்பிறந்த தம்பியர் மூவரும் அவன் ஏற்றுக்கொண்ட தம்பியர் மூவரும் இருக்க, ஏன் குகனையும் பரதனையும் மட்டும் இங்குப் பேசவேண்டும்?' என்று வினவப்படலாம். தம்பியர் அறுவரினும் இவ்விருவருமே ஒற்றுமையுடையவர்; இராமனிடத்து ஆரவாரமற்ற முறையில் ஆழ்ந்த அன்பைச் செலுத்துபவர். இந்த முறையில் இருவருக்கும் ஒற்றுமை காணப்படுகின்றது. ஒரு வேற்றுமையும் இவர்களிடையே உண்டு. பரதன் கற்றறிவு நிரம்பப் பெற்றவன்; குகன் கல்வி வாசனை அற்றவன். இப்பெரு வேற்றுமை இருந்தும், இவ்விருவரும் ஒருநிகராகவே இராமனால் மதிக்கத்தக்கவர் ஆகின்றனர். ஆதலாலேதான் இவ்விருவர் பற்றியும் ஆய்தல் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நூலைச் செவ்விதின் பதிப்பித்து வெளிக்கொணரும் கங்கை புத்தக நிலையத்தாரிடைப் பெருநன்றியன்.

ஆசிரியன்

உள்ளுறை

குகன்:	பக்கம்
'நாவாய் வேட்டுவன்' ...	1
கூற்றின் ஆற்றலான் ...	30
பரதன்:	
'பரதன் எனும் பெயரான்' ...	60
'நேர்மையின் ஆணி' ...	99

நாவாய் வேட்டுவன்

இந்தப் பரந்த உலகில் பல்வேறு வகைப்பட்ட மனிதர் இருக்கின்றனர். ஒரு சிலரைப் பார்த்ததும் அவருடன் நட்புக்கொள்ள விரும்புகிறோம்; சிலரைக் கண்டதும் வெறுக்கிறோம்; அவருடன் நட்பினராய் இருந்தாலும், எப்பொழுது அவரிட மிருந்து விடுதலை பெறலாம் என்றே முயல்கி றோம். கூடுமான வரை இந்நியதி தவறுவதில்லை. சில சமயங்களில் ஒருவரைப் பார்த்த அளவில் விருப்பு வெறுப்புக் கொள்வது தவறாகவும் முடி கிறது. ஒருவர் உடல் அமைப்பு, முகத்தோற்றம், கண்கள் முதலியவற்றிலிருந்து அவருடைய குண நலன்களை முடிவு செய்யலாமேனும், சில நேரங்களில் இம்முறை பெரிதும் பிழைபட்டுவிடு கிறது. மிகக் கடுமையான புறத்தோற்றம் உடை யவர், மிக இனிய பண்புடையவராய் இருத்தலும், மிகவும் விரும்பத்தக்க புறத் தோற்றம் உடை யவர், மிகக்கேடான பண்பாடுடையவராய் இருத் தலும் உண்டு. எந்தப் பொது நியதிக்கும் புறநடை கள் உண்டு என்பதை மறத்தலாகாது. இவ் வுண்மை நம்முள் பலரும் உலகானுபவத்தில் அறிகிற ஒன்றாகும்.

இலக்கியத்திலும் இவ்விதப் படைப்புக்களைக் கவிஞன் படைக்கிறான். 'கொடுமனக் கூனி'யை எடுத்துக்கொள்

வோம். 'உள்ளமும் கோடிய கொடியாள்' என்று கவிஞன் அவளைக் குறிப்பிடுகிறான். 'உள்ளமும்' என்ற சொல்லில் காணப்பெறும் 'உம்'மை அவள் புற உடலும் அழகற்றுக் கூனலாய் வெறுக்கத்தக்கதாய் உளது என்பதைக் குறிக்கிற தன்றோ? அதேபோன்று, 'ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்' என்று இராமனை வாலி விளிக்கிறான். இத் துணைப் புற அழகுடைய இராமன் அக அழகும் உடையவ னாய் இருப்பதையும் அறிகிறோம். இவ்விருவரும் கவிஞ னுடைய படைப்புக்களே. இனி இச்சட்டத்திற்கு மாறாக வும் படைக்கப்படலாம். கைகேயி மிக்க அழகுடையவள் என அவளுடைய பகைவருங்கூடப் பேசுகின்றனர். தசரதன் அவளுக்கு அடிமையானதே அவளுடைய புற அழகைக் கண்டு மயங்கித்தானே? இத்துணை அழகிய அப்பெருமாட்டி—அரசரிற்பிறந்து, அரசரிற்புகுந்து, பேர ரசியான—அவள் இறுதியில் தீய பண்பு உடையளானா ளன்றோ? அழகெல்லாம் திரண்டு ஓர் உருவாய் அமைந்த கைகேயி. இவ்வாறு தீயவள் ஆனாள் என்ற காரணத்தால், அழகுடையவர் அனைவருமே தீயவர் என்ற முடிவுக்கு வருதல் நேரிதா? புற அழகு ஓரளவு மனப்பண்பைக் காட்டுவது உண்மையே எனினும், இதற்கும் புறநடைகள் மிகுதியும் உண்டு என்பதை மனத்தில் இருத்த வேண்டும்.

இந்த அடிப்படையில் கம்பநாடன் கலைக் கோயிலிற் காணப்பெறும் 'குகன்' என்ற பாத்திரத்தைக் காண்டல் வேண்டும். ஒரு வகையான 'முரண்' (Contrast) அணியுடன் கவிஞன் குகனை நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறான். கங்கைக் கரையில் இராமன் வனம் புகு கோலத்துடன் வந்து தங்கியுள்ளான். அவனைச் சுற்றிலும் முனிவர்களும், யோகிகளும், அந்தணர்களும் நிறைந்துள்ளார்கள். புறத் தூய்மை அகத் தூய்மைகளுடன் இருக்கிறார்கள் அப்பெரி யவர்கள். அவர்களுடைய முகத்தூய்மை போலவே அவரி கள் தங்கியுள்ள இடமும் தூய்மையாய் விளங்குகிறது. வழி பாடு செய்கின்ற இடம் நறுமணத்துடன் திகழ்வது போல,

இராமன் தங்கியுள்ள இடமும் நறுமணத்துடன் விளங்குகிறது. திடீரென்று அந்த இடத்தில் மீன்நாற்றம் வீசுகிறது. தவசிகள் கூடிய கூட்டத்தில் எவ்வாறு மீன் நாற்றம் வீச முடியும்? அனைவரும் திரும்பிப் பார்க்கின்றனர் வியப்புடன். இலக்குவன்மிக்க பணிவுடன் வந்து நின்று வாய் புதைத்துப் பேச முற்படுகிறான். ''அண்ணலே, கங்கையில் படகோட்டும் வேடர்கட்கெல்லாம் இறைவனான குகன் என்பவன் பெருங் கூட்டமான சுற்றத்தாருடன் வந்துள்ளான். அவன் உள்ளம் தூயவன்; தாயைக்காட்டிலும் நல்லவன்: உனது காட்சிக்காக வெளியே காத்து நிற்கிறான்.'' என்று கூறுகிறான்.

நிற்றிஈண் டென்று புக்கு நெடியவற் றொழுது தம்பி
'கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன் நிர்மிந்த கூட்டச்
சுற்றமும் தானும் உள்ளம் தூயவன் தாயின் நல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறைகுகன் ஒருவன்' என்றான்.

(கம்பன்—1964)

அப்பொழுதுதான் புதியவனாய் வந்துள்ளான் குகன். இலக்குவனை அவன் முன் பின் பார்த்ததில்லை. இருவரும் முதன்முறையாக இப்பொழுதுதான் சந்தித்தனர். இலக்குவன் குகனிடம் பேசியவை இரண்டே சொற்கள். 'நீ யார்?' என்பனவே அச் சொற்கள். இவ்வினாவிற்குக் குகன் கூறிய விடையும் சுருக்கமானதே. ''தேவா! நின்னைச் சேவிக்க வந்தனன், நாவாய் வேட்டுவன் நாயடியேன்,'' என்றான். (1962) இவ்வார்த்தைகளுடன் குகன் வந்திருப்பதை அறிவிக்க இராமனிடம் சென்றுவிட்டான் இலக்குவன். குகனிடம் இரண்டே சொற்கள் பேசியிருப்பினும், அவனைச் சில வினாடிகளே பார்த்திருப்பினும், அறிவாற்றல் மிக்க இலக்குவன் குகனை அளந்துவிட்டான்; முதற் பார்வையிலேயே குகன் தாயினும் நல்லவன் என்ற முடிபுக்கு வந்துவிட்டான். இலக்குவனுடைய கூர்மையான

அறிவாற்றலுக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும். குகனைப்பற்றி இலக்குவன் கொண்ட இந்த முடிபு எத்துணை உண்மையானது என்பதைப் பின்னரும் காணலாம். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், குகன் வந்திருக்கும் நிலைமைக்கும், அவன் வந்துள்ள இடத்திற்கும் சிறிதும் பொருத்தமே இல்லை. மீன் நாற்றம் மூக்கைத் துளைக்கிறது, அவன் சென்ற இடமெல்லாம். போதாக் குறைக்குப் பக்குவம் செய்த மீன் உணவையும் கையில் கொண்டுவந்துள்ளான். ஏன் தெரியுமா? தன் தலைவனாகிய இராமனுக்குக் காணிக்கையாம், பக்குவப்படுத்தப் பெற்ற மீனும் தேனும்! முனிவர்கள் தங்கியுள்ள பர்ணசாலைக்கு அணித்தேயும் கொண்டு வரக்கூடிய பொருளா மீன்? ஆனாலும், அதைப்பற்றிக் கடுகளவும் கவலைப் படாமல் கொண்டு வந்துவிட்டான் அத்தாயினும் நல்லானாகிய நாவாய் வேட்டுவன். இலக்குவனே வந்திருப்பவனை 'உள்ளம் தூயான்' என்றும் 'தாயினும் நல்லான்' என்றும் கூறிய பிறகு இராமன் அதுபற்றி அறிய வேண்டுவது யாது? ஒன்றுமின்று அன்றோ? எனவே, இராமன் அவனை உடனே உள்ளே அழைத்து வருமாறு பணிக்கிறான்.

இதோ குகன் உள்ளே வந்து இராமனை விழுந்து வணங்கிவிட்டு, வாய்புதைத்து நிற்கிறான். சுற்றிலும் உள்ள முனிவர் பெருமக்கள் அவனை வெறித்து நோக்குகிறார்கள். அவனது புறத்தோற்றம் அவ்வளவு வெறுப்பை உண்டாக்குவதாய் இருக்கிறது. மிக நல்ல உயரம் உடையவனாய் நிற்கிறான் குகன். நல்ல கறுப்பு நிறம். மையை உடல் முழுவதும் பூசினாற்போல இருக்கிறது. நாண் ஏற்றப் பெற்ற வில் இடத்தோளில் தொங்கிய அடையாளம் இருக்கிறது. அவ்வளவு பெரிய வில் தொங்குவதற்கு ஏற்றது அவனுடைய மலை போன்று திரண்ட தோள். கையில் துடி ஒன்றும் இருக்கிறது. இப்பொழுது அவனுடைய கால்களில் செருப்பு இல்லையாயினும், தோற்

செருப்பின் அடையாளம் அவனுடைய பாதங்களில் அழுந்தி யிருக்கிறது. அவன் புறப்படும் பொழுது ஒலிக்கும் வாத்தி யங்கள்கூட அச்சத்தை விளைக்கும் கொம்பு பறை முதலியனவாகும். பம்பை முதலிய சில வாத்தியங்கள் அவன் இடையைச் சுற்றியுள்ளன.

அவன் 'க்ாழம்' என்ற பெயரை உடைய அரைக்காற் சட்டையை அணிந்துள்ளான். அதன் இடையிலிருந்து கால் வரை ஒரு புலியின் வால் தொங்கிக் கொண்டிருக்கிறது. உடையை இறுக்குவதற்கும் புலி வாலையே கச்சையாகக் கட்டியுள்ளான். அவன் அணிந்திருக்கிற ஆபரணங்கள் உடையைக் காட்டிலும் விசித்திரமானவை. பற்களை ஒழுங்குறத் தொடுத்தாற்போன்று பலகறை(சோழி)களால் தொடுக்கப் பெற்ற மாலையை அணிந்துள்ளான். அவனுடைய கால்களைப் பார்த்தால், 'இவை கற்களோ!' என்னும் ஐயம் தோன்றும். ஆண் மக்களுடைய தலை மயிர் கறுப்பு நிறம் உடையதாகவேதான் இருக்கும். ஆனாலும், குகனுடைய தலையில் இருள் கவிந்திருப்பது போன்ற கரு நிறம் தங்கியிருக்கிறது. இந்த அழகான தலை மயிரில் இறகு வைத்து அலங்காரம் செய்து கொள்வதுபோல முற்றி யுள்ள ஒரு நெற்கதிரைச் செருகியுள்ளான்.

அவனுடைய கைகளே பார்ப்பதற்கு வேடிக்கையாய் உள்ளன. கமலம் என்று கூறத்தக்க கைகளையுடைய இராமபிரான் பக்கத்தில் நிற்கும் குகனுடைய கைளைப் பாருங்கள்! இராமனுடைய கையைப் பார்த்தால், தாமரை மலர் நினைவுக்கு வரும். குகனுடைய கையைப் பார்க்கும் பொழுது பனைமரத்தைப் பார்க்கும் எண்ணந்தான் தோன்றும். ஏன் தெரியுமா? பனை மரத்தில் வலிமையான சிறாம்புகள் மேல் நோக்கி வரிவரியாய் இருக்கக் காண் கிறோமல்லவா? அதே போல முழங்கைப் பகுதியெல்லாம் வலிமையான மயிர் கீழ் நோக்கித் தடித்து வளர்ந்திருந்தலி னால் அந்தக் கையைப் பார்க்கும் பொழுதும் பனை மரத் தின் நினைவு உண்டாகிறது. பிற வீரர்களுடைய மார்பைக்

'கல் போன்ற மார்பு' என்று கூறுவது மரபு. ஆனால், குகனுடைய மார்பைக்கூற வந்த கம்பநாடனுக்கு அந்த உவமை சரியானதாகத் தெரியவில்லை. எனவே, கூறும் முறையை மாற்றி விட்டான். ''கண் அகன் தடமார்பு எனும் கல்லினன்'' என்று கூறிவிட்டான். அதாவது, மார்பு என்ற பெயருடன் மார்பு இருக்க வேண்டிய இடத்தில் கல் இருந்தது என்று கூறுமுகத்தான் கம்பன் நம்முடைய மனத்தில் ஒரு தனி மதிப்பை உண்டாக்கிவிட்டான். எவ்வளவு தான் 'கல் போன்ற தோள்கள்' என்று கூறினாலும், ஏனையோர் தோள்களைப்போல இவையும் வலிமையான தோள்கள் என்ற பொருள் கிடைக்குமே தவிர, குகனுடைய தோள்களுக்கு என்று தனி மதிப்புக் கிடைக்காது. எனவே, கவிஞன் இப்புது வழியைக் கையாண்டு, 'மார்பு எனும் கல்லினான்' என்று உவமையை உருவகமாக்கி நம் மனத்தில் குகனுடைய மார்புக்கு ஒரு தனி மதிப்பைப் பெற்றுத் தந்து விட்டான். இந்த மார்பைத் தாங்கும் குகனது இடுப்பு இன்னுஞ் சற்றுக் காண்டற்குரியது. 'உண்டோ!' என்று ஐயுறும்படியான இடையை உடைய சீதை இருக்கும் அதே பர்ணசாலையில் இதோ குகனும் நிற்கிறான்! அவனுடைய இடையைப் பார்த்தவுடன் நாம் காணாததும், ஆனால் அதிகம் கேள்வியுற்றதுமான இந்திரனுடைய 'வச்சிரா யுதம்' நம் நினைவிற்கு வருகிறது. அவனுடைய இடையில் கட்டிய வாளில் இரத்தக் கறை படிந்திருக்கிறது. அதைத் துடைத்துத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணங்கூட அவனுக்கு இல்லை போலும்!

இவை அனைத்துமே அவ்வளவு விரும்பத் தக்கன அல்ல என்பது தெளிவு. என்றாலும், ஒரு மனிதனுடைய கண்களைக் கொண்டு அவனைப் பற்றி முடிபு செய்யலாம். இத்தனைபுறத் தோற்றமும் நன்றாய் இல்லை என்றாலும், அவனுடை பார்வையாவது குளிர்ந்ததாய் இருக்குமா என்றால், விடமுடைய பாம்புகளும் நடுங்கும் பார்வை உடையவன் என்று கூறப்படுகிறான். 'நச்சு அராவும்

நடுக்குறு நோக்கினான்' என்று கவிஞன் கூறி முடிக்கும் பொழுது குகனைப் பற்றிய முழு வடிவமும் நம் கண்முன் தோன்றி விடுகிறது. இன்னும் ஒன்றே ஒன்றுதான் எஞ்சி யுளது. அதாவது, 'இத்தகைய புறக்கோலம் உடையவன் எவ்வாறு பேசுவானோ!' என்று நாம் ஐயுறுவோம் அல்லவா? இதோ கவிஞன் விடை கூறுகிறான். பைத்தியக் காரனைப்போல முன்னுக்குப் பின் தொடர்பில்லாத சொற்களைப் பேசுகின்றான் என்ற கருத்தில் 'பிச்சராம் அன்ன பேச்சினன்' என்றே கூறுகிறான்.

இத்துணையும் போதாவிடில் அவன் அணிமையில் இருக்கும்பொழுது உண்டாகும் தீய நாற்றம் உறுதியாகவே வெறுப்பை விளக்கும். ஊனையும் மீனையுமே மிகுதியும் உண்பதால் அவற்றின் நாற்றமும் அவனுடனேயே வரு கிறது. இத்துணை வெறுக்கத் தக்கவை இருந்தும், அவனுடைய முகத்தில் ஓரளவு புன்சிரிப்பாவது இருக்கு மாயின், இப்வெறுப்பை மாற்றும் எனலாம். அதற்கும் இடம் தாராதபடி அவனுடைய முகத்தில் சிறிதும் புன் முறுவல் இல்லையாம். அது மட்டுமா? 'சீற்றம் இன்றியும் தீயெழ நோக்குகின்றனாம்!' எப்படி இருக்கும் அத் தோற்றம்? கோபம் இல்லா நேரத்திலுங்கூடத் தீயெழ நோக்கும் பழக்கத்தைப் பெற்று விட்டான் போலும்! வாய் திறந்து பேசத் தொடங்கி விட்டால்தான் எத்துணை இனிமையான குரல்! தென்திசைக் கோனாகிய எமதர் மனும் அஞ்சும்படியான இடிக்குரலுடன் பேசுகிறான். இத்தகைய வடிவழகுடன் விளங்கும் குகன், கங்கைக் கரை யில் இருக்கும் '**சிருங்கிபேரம்**' என்னும் நகரத்தைத் தலை நகராகக் கொண்டு, அதனைச் சுற்றியுள்ள பகுதியை ஆட்சி செய்கிறான்; பெரியவனாகிய இராமனைக் காண வரும்பொழுது காணிக்கைப் பொருளாக மீனையும் தேனையும் கொண்டு வந்துள்ளான்!

இத்தகைய வடிவையும் குரலையும் உடைய குகனை இலக்குவன் சில வினாடிகளே கண்டான்; இரண்டொரு

சொற்களே பேசினான். என்றாலும், என்ன? அவனுடன் பலகாலம் அறிந்து பழகியவன் போலச் சில கருத்துக்களை இராமனிடம் கூறுகிறான். இது எவ்வாறு முடிந்தது? புறத் தோற்றத்திற்கும் அகப்பண்பிற்கும் நேர் முரணாய் உள்ள பாத்திரப் படைப்பாகும் இப்படைப்பு. இது பலாப்பழத் தைப் போலப் புறப்பகுதி முள்ளாகவும் சுரசுரப்பாகவும் இருக்கிறது. காண்பதற்குப் பலாப்பழம் வெறுப்பைத் தருவதாயினும், அதனைப் பொறுத்துக் கொண்டு உள்ளே நோக்கினால் இனிய சுளைகள் காணப்படுகின்றன அல்லவா? அதே போலக் குகனது புறத்தோற்றத்திற்கு முற்றிலும் மாறாக அவனுடைய அகமும் பண்பாடும் காட்சி நல்கு கின்றன.

இதனைவிடச் சிறப்பான செயல் என்னவெனில், இலக்குவன் இவ்வுண்மையைக் கண்டு பிடித்ததாகும். எத் துணை அறிவாற் சிறந்தவர்களையும் பிறருடைய புறத் தோற்றம் ஓரளவு ஏமாற்றி விடுகிறது. மிகச் சில கூர்த்த மதியினரே இப்புறக் காட்சியால் மயங்கி விடாமல், உள்ளே ஊடுருவி நோக்கி, உண்மை காண்கின்றனர். அத்தகைய கூர்த்த மதியினருள்ளும் தலைசிறந்தவனாய் இருக்க வேண்டும் இலக்குவன் என்று உறுதியாகக் கூறலாம். தன்னைப் பெற்றெடுத்த தாய் அழகியா அல்லளா என்று யாரும் சிந்திப்பதில்லை. அதே போன்று குகனது புறத் தோற்றம் கவனிக்கப்பட வேண்டாதது என்பதைச் சுட்டிக் காட்டுவான்போல இளையவன் இராமனிடம் 'தாயினும் நல்லன்' என்று கூறுகிறான்.

தாய்போல உணவு தந்தது

குகனுடைய அன்புடைமை முதலிய பண்பாடுகளைக் கூறியதுடன் அமையாது அவன் வாழ்க்கையில் எந்தத் தரத்தில் உள்ளான் என்பதையும் இலக்குவன் குறிப்பது, அவனது நுண்மாண் நுழைபுலத்தையே குறிக்கிறது. 'எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை குகன்,' என்று கூறும்

பொழுது, குகன் பல படகுகளை வைத்து ஆளும் அரசச் செல்வம் படைத்தவன் என்பதையும் இலக்குவன் குறித் தமை காண்க.

இவ்வாறு இலக்குவன் கூறவேண்டிய இன்றியமை யாமை யாது? இராமன் காட்டில் வந்து தங்கியிருப்பினும் அவன் சக்கரவர்த்தித் திருமகன் என்பதும், இன்று இல்லா விடினும் ஒரு நாள் சக்கரவர்த்தி ஆக வேண்டியவன் என்பதும் மறக்கற்பாலன அல்ல. எனவே, அவன் ஒருவரை இன்னார் என்று அறியாமல் வரவேற்றல் இயலாது; ஒரு வரைப் பார்த்த பின்னரும் அவரது புறத்தோற்றத்தைக் கொண்டு மரியாதை முதலியன செய்தல் இயலாது. ஆனால், அரசனாய் உள்ளவன் வருபவர் தரம் அறிந்து சிலரை அமரச் செய்ய வேண்டும். சிலரை நின்றபடியே பேசி அனுப்ப வேண்டும். எனவே, வருபவனை இராமன் எவ்வாறு வரவேற்க வேண்டும் என்பதைக் குறிப் பால் உணர்த்துகிறான் இளையவன். குகன் வேடனா யினும், அவனது புறத்தோற்றம் நன்கு அமையாவிடினும், அவன் ஓர் அரசன் என்பதும், யாருக்கும் கட்டுப்பட்டவன் அல்லன் என்பதும் கருத்தில் இருத்த வேண்டுபவை. இராமனை வந்து பார்க்க வேண்டிய கடப்பாடு உடை யவன் அல்லன் குகன். பின்னர் ஏன் இவ்வளவு சுற்றத் தாரோடும் வந்துள்ளான் எனில், அவனுடைய அன்பு ஒன்றே காரணம் என்க. எனவே, உரிமையுடைய ஓர் அரசன், தன் நாட்டிற்குள் வந்து தங்கிய பக்கத்து நாட்டின் மன்னனைக் காணும் நிலையில் குகன் இப் பொழுது வந்துள்ளான். ஆகலின், அவனை வரிசை அறிந்து வரவேற்றல் இராமனுடைய கடமைகளுள் தலையாய ஒன்றாகும். எனவே, இலக்குவன் இதனைப் பலர் நடுவில், இராமனுக்கு நினைவூட்டல் ஆகாது என்ற கருத்தால் குறிப்பாக உணர்த்துகிறான். வந்திருப்பவனும் சுதந்தரமுடைய ஓர் அரசன் என்ற சொற்களை இறுதியில் கூறுவதால் இக்கருத்தைப் பெறவைத்து விட்டான்

இலக்குவன். தன்னிடம் தோற்றவனாயினும் 'புருடோத்தமனை' அரசமரியாதைகளுடன் நடத்திய அலெக்ஸாண்டரும் இவ்வுண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு அன்றோ? இன்று இங்கிலாந்தின் அரசியாராய் அமர்ந்துள்ளவவரும் தம்முடைய உலக யாத்திரையின்போது இவ்வாறு நடந்து கொண்டதைச் செய்தித்தாள்கள் மூலம் அறிந்தோம். அல்லவா?

இலக்குவன் கூறிய குறிப்பை அருகில் இருந்தவர்கள் அறிந்து கொண்டிருத்தல் இயலாது. எனினும், இராமன் அதனை உடன் உணர்ந்து கொண்டான் என்பதை இராமன் செய்த செயலால் அறியலாம். உடனே குகனை அழைத்து வருமாறு இலக்குவனை நோக்கி இராமன் கூறவும், அவன் சென்று அழைத்து வந்து விட்டான். உள்ளே வந்த குகன், 'கண்ணனைக் கண்ணில் நோக்கிக் களித்தனன்' உடனே கீழே வீழ்ந்து மண்ணுற வணங்கி எழுந்து உடலை வளைத்து வாய் புதைத்து நின்று விட்டான். அவ்வாறு குகன் தானும் ஓர் அரசன் என்பதையும் கருதாமல் கீழே விழுந்து வணங்கிவிட்டு அருகில் வாய் புதைத்து நின்றாலும், அவன் ஓர் அரசன் என்பதை இராமன் மட்டும் மறந்துவிடவில்லை. எனவே, இலக்குவன் கூறிய குறிப்பையும் மனத்துட்கொண்டு அக்கமலக் கண்ணன் வாய் திறந்து முதலிற்பேசிய சொற்கள் 'இருத்தி ஈண்டு' என்பனவாகும். இராமன் 'அமர்க' என்று கூறினாலும் குகன் உட்கார விரும்பவில்லை. ஒரு சிலரைக் கண்டவுடன் நம் மனம் அவர்களிடம் நம்மையும் அறியாமல் மரியாதை செலுத்தத் தொடங்கி விடுகிறது. அவர்கள் எவ்வளவு வற்புறுத்தினாலும் அவர்கள் எதிரே அமர மனம் இடம் தருவதில்லை. குகனும் இந்த மனநிலையில் இருப்பதால், அவன் இராமன் எதிரே அமர விரும்பவில்லை.

இனி அடுத்துக் குகன் பேசத் தொடங்குகிறான். இராமன் 'இருத்தி' என்று கட்டளையிட்டும் தான் அமரவில்லை என்றால், அதை இராமன் தவறாக எடுத்துக் கொள்ளக்

கூடாதபடி மிகுந்த அன்பைக் காட்டுபவனாய் பேசத் தொடங்குகிறான். 'ஐயனே, உணவுக்கு ஏற்ற முறையில் மீனும் தேனும் பக்குவப்படுத்திக் கொண்டு வந்துள்ளேன். உண்டருள்க!' என்று கூறியிருப்பின், இராமன்பாடு தர்ம சங்கடமாகிவிடும். ஆனால், பண்பாடுடைய குகன் வாயில் அத்தகைய சொற்கள் வாரா அல்லவா? 'உண்டருள்க!' என்பது சொல்லளவில் மரியாதையைக் காட்டினாலும் ஒரு வகையில் ஏவலாகவே அமைந்துவிடும். எனவே, அவ்வாறு கூறாமல், 'என்கொல் திருவுளம்?' என்கிறான் குகன்.

''இருத்திஈண்டு'' என்ன லோடும்
இருந்திலன்; எல்லை நீத்த
அருத்தியன் ''தேனும் மீனும்
அமுதினுக்கு அமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன்; என்கொல்
திருவுளம்?'' என்ன, வீரன்
விருத்தமா தவரை நோக்கி
முறுவலன் விளம்பல் உற்றான்.

(கம்பன்—1966)

குகனுடைய பேச்சில் அவனுடைய அன்பின் ஆழமும், வஞ்சகமற்ற மனப்பாங்கும் நன்கு வெளிப்படுகின்றன. 'என்கொல் திருவுளம்?' என்ற அடக்கமான வினாவில் அவனுடைய நயத்தகு நாகரிகமும் வியத்தகு பண்பாடும் வெளிப்படுகின்றன. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமாக அமைவது போல, குகனுடைய மனப்பாங்கை விளக்கச் சிலவாகிய இச்சொற்களே போதுமானவையாய் அமைந்துவிட்டன. இப்பண்பாட்டைக் கண்ட இராமன் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டுவிட்டான். அயோத்தியில் அவன் இத்தகைய ஆடம்பரமற்ற அன்பைச் சிலரிடம் மட்டுமே கண்டதுண்டு. அரசனுக்கு மூத்த மகனாகப் பிறந்துவிட்ட காரணத்தால் அவனிடம் தூய்மையான அன்பு பாராட்டுபவர்களுங்கூட ஆடம்பரத்துடனேயே இதனைத் தெரிவித்தனர். அவன் எங்குச் சென்றாலும்

அவனுக்காகவே அவ்னிடம் அன்பு பாராட்டுபவர் மிகவும் குறைவு. சக்கரவர்த்தியின் முதல் மகன் என்பதற்காக அல்லாமல் அவனுக்காகவே அவனிடம் அன்பு பாராட்டு பவர் குறைந்துள்ள இந்த உலகில் இத்தகைய கள்ளங்கபட மற்றதும் தூய்மையானதுமான அன்பு இராமனை முற்றிலும் கவர்ந்துவிட்டதில் யாதும் வியப்பில்லை. இவ்வாறு அவன் கவரப்பட்டான் என்பதை அடுத்த பாடல் நன்கு விளக்குகிறது. குகன் கொணர்ந்த உணவை இராமன் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. தவ வேடம் பூண்டு புலால் உண்ணாத 'கம்ப ராமன்' இப்பொழுது காய் கனிகளை மட்டுமே உண்பதாக உறுதி பூண்டு புறப்பட் டுள்ளான். அவன் குகன் கொணர்ந்த உணவை உண்பது இயலாது. எனினும், அவ்வுணவுடன் கலந்துள்ள தூய்மை யான அன்பை நோக்க அதனைப் புறக்கணிக்கவும் இயலாது. எனவே, குகனை நோக்கிக் கூறுகிறான். 'ஐயனே, உன் மனத்தில் உள்ள அன்பு முற்றிப் பத்தியாக மாறிவிட்டதை அறிவிப்பதுபோல நீ கொணர்ந்த உணவை மிகவும் கிடைத்தற்கரிய அமிழ்தமாகவே ஏற்றுக்கொள்ளு கிறோம். பரிவுடன் (Sympathy) கலந்திருத்தலின் அவ்வுண வைத் தூய்மையானது என்றே எம்போல்வார் ஏற்றுக் கொள்வர். நாம் அதனை உண்டதாகவே கருதுகிறோம்!'

" 'அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே?
பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனம் அன்றே?'
என்றான்."

(கம்பன்—1967)

செய்கின்ற செயலைப் பெரிதென மதியாமல் அச் செயலின் அடிப்படையில் உள்ள மனநிலையைமட்டும் பெரிதாகப் போற்றும் பெருமை இத்தமிழ்நாட்டில் உண்டு.

பல சமயங்களில் கடுமையான செயலைச் செய்தவர் அதன் பயனாக இன்பத்தைப் பெறுவதும், இனிய செயலைச் செய்தவர் அதன் பயனாகத் துன்பத்தைப் பெறுதலும் காண்கிறோம். சிவபெருமான்மேல் மன்மதன் கரும்பு வில்லை வளைத்து மலர் வாளிகளைச் சொரிந்தான். மலர்களை ஒருவன்மேல் எறிதலைக் காட்டிலும் சிறந்த செயல் ஒன்றும் இருத்தற்கில்லை. எனினும், அதன் பயனாக மன்மதன் எரித்துச் சாம்பலாக்கப்பட்டான். ஆனால், அச்சிவபெருமான்மீதே **சாக்கிய நாயனார்** கற்களை எறிந்தார். அதன் பயனாக அவர் வீடு பேற்றையே பெற்றுவிட்டார். ஒருவன் மழுவினால் தன் தந்தையின் காலை வெட்டுதல் சிறந்த செயல் என்று யாரும் கூறமாட்டார். எனினும், சந்தருப்பம் மனநிலை என்பவற்றை நோக்க, இவை இரண்டும் சிறந்த செயல் களாகவே கருதப்பட்டதும் உண்டு. சேய்ஞலூரிற் பிறந்த **சண்டேசுர நாயனார்** தம் தந்தையார் காலைத் தடிந்தார்; அதனால் வீட்டின்பத்தையே பெற்றார். நல்ல அனுபவம் மிக்க தமிழ்த் தாத்தாவாகிய திருநாவுக்கரசப் பெருந்தகை யார் இதனை நன்கு உணர்ந்துதான், 'கரும்பு பிடித்தவர் (மன்மதன்) காயப்பட்டார்; ஆங்கு ஓர் கோடரியால் இரும்பு பிடித்தவர் இன்புறப்பட்டார்' (திருமுறை: 4: 102: 5) என்று கூறுகிறார். விதி மார்க்கத்தில் வாழ்ந்தவ ராகிய **சிவகோசரியார்** மிகக் கொடியது என்றும். அருநரகில் கொண்டு செலுத்தும்' என்றும் கருதி வெறுத்து ஒதுக்கிய புலாலையே இறைவனுக்குப் படைத்து அச்சிவகோசரி யாருக்கு முன்பே வீடு பேற்றை அடைந்த **கண்ணப்பர்** செயலைப்பற்றிக் கவலை கொள்ளாமல், இறைவன் அவருடைய மனநிலை ஒன்றையே கண்டான் என்பதும் இந்நாட்டார் அறிந்த தொன்றாகும்.

இத்தகைய அடிப்படையை அறிந்தமையாலே தான் கம்பநாடன் குகன் மீனை இராமபிரானுக்குக் காணிக்கை யாகக் கொணர்ந்தான் என்று பாடினான். வான்மீகியார்,

'அப்பம், அன்னம், பாயசம் முதலியவற்றைக் குகன் கொணர்ந்தான்', என்று கூறி இருப்பவும், கம்பநாடன் முதனூல் கருத்துக்கு முரணாக இங்ஙனம் பாடியதற்குக் காரணம், அவன் தமிழ்ப் பண்பாட்டை நன்கு அறிந் திருந்ததே ஆகும். காட்டில் வாழும் வேடனாகிய குகன் பணியாரமும் பாயசமும் கொண்டு வந்தான் என்பதைக் காட்டிலும், மீனும் தேனும் கொண்டு வந்தான் என்பது சாலவும் பொருத்தமுடையதே. இனிக் குகனும் இராமனும் பழகும் விதத்தைக் காண்போம்:

குகன் கொணர்ந்த உணவை இராமன் உண்ணா விட்டாலும், அதனைத் தான் முழுமனத்துடன் ஏற்றுக் கொண்டதாகவே கூறிவிட்டான். அவன் கூறிய முறையா லும் காட்டிய பரிவாலும் குகனும் இராமன் அவ்வுணவை உண்ணவில்லை என்பதை மறந்து, இராமனிடம் தங்கி நின்றான். எனவே, இராமன் அவனை நோக்கி, 'ஐய, நாளை நாங்கள் இக்கங்கை யாற்றைக் கடந்து செல்ல இருக்கிறோம் ஆதலின், இன்று, உன் சுற்றத்தாரோடும் உன்னுடைய ஊருக்குச் சென்று, நாளைக் காலை இவண் நாவாயுடன் வந்து சேர்க', என்று கூறினான். தான் எவ்விதமான வசதியும் இல்லாத இடத்தில் தங்கியிருத்த லின் இராமன் இவ்வாறு கூறினான். தன்னைக் காண வந்தவன் அவனாக விடை பெற்றுக்கொண்டு போகக் கூச்சப்பட்டாலும் படலாம் என்று நினைத்துப் போலும் இராமன் தானே அவனுக்கு விடை தருகிற முறையிலும் அவனுடைய நட்பையும் உதவியையும் வேண்டி நிற்கும் முறையிலும் இவ்வாறு பேசி முடித்தான்!

இராமனுடைய இச்சொற்கள் இதுவரை அடைபட்டு நின்ற குகனுடைய உணர்ச்சி வெள்ளத்தை மடை உடைத்துவிட்டன. இராமன் எதிரே நின்றுகொண்டிருக் கும் குகனுடைய மணக்கண் முன்னர் இராமன் இருக்க வேண்டிய நிலைமையும், இப்போது இருக்கின்ற நிலைமை யும் மாறி மாறித் தோன்றுகின்றன. பீதாம்பரம் முடி

முதலியன அணிந்து அரசக் கோலத்தோடு விளங்க வேண்டியவனாகிய இராமன், இத்தவக்கோலத்துடன் விளங்குவது குகனுடைய கண்களில் நீரைப் பெருக்குகிறது. இக்கொடுங்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும் தன் மேலேயே குகன் கோபம் கொள்கிறான். எனவே, இராமனை நோக்கி, 'இவ்வுலக முழுதுக்கும் உரிமை உடையவனே, உன்னை இக்கோலத்திற்கண்ட யான் என் கண்களைப் பிடுங்கி எறிந்துவிடாமல் இருப்பதால் என் நட்பையே பொய்யானது என்று கருதுகிறேன். இனி இதற்குக் கழுவாயாக நின்னிடமே தங்கி ஏவல் செய்கு வன்,' என்கிறான்.

''கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்த்துவான், இப்
பார்குலாம் செல்வ! நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின் இருக்கைநோக்கித்
தீர்கிலேன் ஆனது ஐய! செய்குவன் அடிமை'', என்றான்.

(கம்பன்—1969)

சாவிற்சாதல், நோவில் நோதல், ஒண்பொருள் கொடுத்தல், பிரிவு நனிவருந்தல் முதலாயினவற்றை நண்பர்கட்கு இலக்கணமாகக் கூறுவர் நல்லோர். எனவே, நல்ல நண்பனாகிய குகன், தன் தலைவனாகிய இராமன் 'இங்ஙனம் அவதியுறும் நிலையில் தான் மட்டும் தன்னூரில் சென்று மகிழ்ந்திருப்பதை விரும்பவில்லை. தான் உண்மை யான நண்பனாய் இருந்தால், இராமனுடைய துன்பத் தைக் கண்டு இருந்தால், இராமனுடைய துன்பத்தைக் கண்டு அதனைப் போக்க முற்பட்டிருக்க வேண்டும் என்று குகன் கருதுகிறான். அவ்வாறு அவனுடைய துன்பத்தைப் போக்க முடியவில்லையாயின், தான் அத்துன்பத்தைப் பார்த்துக் கொண்டிருத்தல் கூடாது. இந்நிலையில் செய்யத் தகுவது யாது? 'பார்ப்பதற்குக் காரணமாய் இருந்த கண்ணை ஏன் பிடுங்கி விடக் கூடாது?' என்று கருதுகிறான் குகன். இக்கூற்றிலிருந்து அவனுடைய அன்பின் ஆழமும் அகலமும் வெளிப்படுகின்றன.

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்னோய்போற் போற்றாக் கடை? (திரு. 315)

கல்வியறிவிலனேனும் உண்மையறிவுடையவன் குகன்.

இதனை இராமன் நன்கு அறிந்துகொள்கிறான். உடனே தன் மனைவியை ஒரு முறையும் இளவலை ஒரு முறையும் நோக்கினான்; உடனே தன் கண்கள் மூலமாகக் குகனுடைய அன்பை உணர்ந்து கொண்ட குறிப்பைக் காட்டினானாம் அக்கமலக் கண்ணன்.

கோதைவில் குரிசில் அன்னான் கூரிய கொள்கை
கேட்டான்;
சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் 'தீராக்
காதலன் ஆகும்,' என்று கருணையின் மலர்ந்த கண்ணன்,
''யாதினும் இனிய நண்ப! இருத்திஈண்டு எம்மொடு,''
என்றான்.
(கம்பன்—1870)

'வாயால் வெளியிடாத அன்பே மிக உயர்ந்தது[1]', என்ற பழமொழிப்படி போலும், இராமன் தன் கருணையை வாய் விட்டுக் கூறாமல், கண்களில் தெரியக் காட்டி அமைந்து விட்டான்! எனினும், அவனுடைய விளி, இதற்கு ஈடு செய்வதாய் அமைந்துவிட்டது. 'யாதினும் இனிய நண்ப,' என்ற விளியிலேதான் எவ்வளவு அன்பைச் சொரிந்து விடுகிறான் இராமன்!

இராமனுடைய இந்த அன்புரைகளால் மிகுதியும் இன்பம் அடைந்த குகன், தன் சுற்றத்தாரை இராமன் தங்கிய பள்ளியைச் சுற்றிக் காவலுக்கு நிறுத்திவிட்டான்; தானும் நாண் ஏற்றிய வில்லுடனும் அம்புடனும் காவல் செய்யத் தொடங்கிவிட்டான். இராமனும் சீதையும் வெறுந்தரையில் படுத்திருக்கும் பான்மையையும் அவர்கள் இருக்க வேண்டிய இருப்பையும் மனத்தில் நினைந்த

---

1. Love unexpressed is sacred.

இலக்குவனுக்குக் கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. இந் நிலையில் குகன் நாடு விட்டுக் காடு வந்த வரலாற்றை வினவுகிறான்.

இவ்வினாவை இராம இலக்குவர் என்ற இருவர் மாட்டும் குகன் பொதுவாக வினவினாலும், இலக்குவனே விடை கூறத் துணிந்தான். காடு வருவதற்கான காரணத்தை இலக்குவன் கூறியதைக் கேட்ட குகன், மிக்க துன்பம் அடைந்து, கண்ணீர் பெருக்கினான். ஆனால், யார் மீதும் குற்றம் கூற அவனுடைய பண்பாடு இடம் தரவில்லை. கைகேயியையோ, பரதனையோ கொடுமை செய்தவர் என்று கூற அவன் துணியவில்லை. எனவே, தனது வருத்தம் முழுவதையும் வெளிப்படுத்தும் முறையில் 'பெருநிலக் கிழத்தி நோற்றும், பெற்றிலள் போலும்!' என்று கூறினான். நிலமகள் இராமன் இவண் வந்து பிறக்கக் கொடுத்துவைத்துங்கூட அவனால் ஆளப்படக் கொடுத்து வையாமல் போனது வருந்தத்தக்கது என்பான் போல இவ்வாறு கூறினான்.

இராமன் படுத்திருக்கும் நிலையில் துயில் துறந்த வீரனாகிய இலக்குவன், நயனம் இமைப்பிலனாகக் கங்குல் எல்லை காண்பளவும் நிற்கின்றான். ''தம்பி என்னும்படி யன்று; அடியரின் ஏவல் செய்தி,'' என்று அவனுடைய தாய் இட்டகட்டளையும், அவன் மனத்தில் கொண்டிருக்கும் குறிக்கோளும் ஒன்றாகலின், இலக்குவன் இவ்வாறு காவல் காத்தது முறையே. ஆனால், அப்போதுதான் இராமனுடைய நட்பைப் பெற்ற குகன் ஏன் காவல் புரிய வேண்டும்? இராமனிடத்துக் குகன் எத்தகைய அன்பு கொண்டான் என்பதை நன்கு அறிந்தால்தான் இதற்கு விடை கூற முடியும். இலக்குவனைக் காணு முன்னர் இராமனும் இலக்குவனும் ஒன்றாகவே இருந்தனர். அப்பொழுதும் இலக்குவன் இவ்வாறு காவல் பூண்டு நின்றானா என்பதுகூடக் குகனுக்குத் தெரியாது.

அவ்வாறாயின், ஏன் இப்பொழுது மட்டும் குகன் காவல் பூண வேண்டும்? 'ஈண்டு இருத்தி,' என்றுதான் இராமன் ஏவினானோ தவிரக் 'காவல் பூண்டு நிற்க வேண்டும்' என்று குறிப்பாகக்கூட அவன் தெரிவிக்கவில்லையே! எனவே, குகன் இவ்வாறு நின்றதற்குத் தக்கதொரு காரணம் இருந்திருக்க வேண்டும். இக்காரணம் யாதாய் இருக்கலாமென்று வைணவப் பெரியார்கள் நன்கு ஆராய்ந்து பல முடிபுகளைக் கூறியுள்ளார்கள். அவற்றுட் சில இங்கு நோக்கற்குரியன:

''இளைய பெருமாளை ஸ்ரீ குகப்பெருமாள் அதிசங்கை பண்ண, இருவரையும் அதிசங்கை பண்ணி ஸ்ரீ குகப் பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிரே! ஒரு நாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகுபடுத்தும் பாடா யிற்று இது,'' என்கிற **ஸ்ரீ வசன பூஷணம்** இங்கு நோக்கற் குரியது. இவ்வாக்கியம், ''இராமனுக்கு இலக்குவனால் யாது தீங்கு நிகழுமோ என்ற ஐயத்தால் குகன் தான் காவல் மேற்கொள்ளவும், இராமனுக்குக் குகன் இலக்குவன் என்ற இருவராலும் எத்தீங்கு நேருமோ என ஐயுற்றுக் குகனுடைய சுற்றத்தார் காவல் புரிந்தனர்.'' என்னும் பொருள் தருகிறது. இவ்வாறு கூற ஒரு காரணமும் கூறப் படுகிறது அதே அடியில். 'இராமனுடைய வடிவழகில் ஈடுபட்டவர் எவ்வாறாயினும் அவனுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற அதே நோக்குடன் வாழ்கின்றனர்.' என்ற காரணம் ஆய்தற்குரியது. இது வரை உடனிருந்த இலக்குவனை ஐயுற்றுக் குகன் தான் காவல் புரிந்தான் என்று கம்பநாடன் கூறவில்லை. கம்பநாடன் பாடல் இவ்வாறு பொருள் கூற இடந்தருகிறதா என்று ஐயப்பட வேண்டியுளது.

''தும்பியின் குழாத்திற் சுற்றும்
சுற்றத்தன்; தொடுத்த வில்லன்
வெம்பிவெந்து அழியா நின்ற
நெஞ்சினன்; விழித்த கண்ணன்

தம்பிநின் றானை நோக்கித்
தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவியிசோர் குன்றின் நின்றான்.''

(கம்பன்—1975)

இப்பாடலில் 'தம்பி நின்றானை நோக்கித் தலைமகன் தன்மை நோக்கி,' என வரும் அடியால் இவ்வாறு பொருள் கொண்டனர் போலும்! 'அரசர் செல்வத்தில் பிறந்து வளர்ந்த இவர்கள் இப்பொழுது படுகிற பாட்டைப் பார்த்த குகன், மாறி மாறி இருவரையும் பார்த்தான்', என்று கூறுவதே போதுமானது. 'அரண்மனையில் இனிய இன்பத்தில் கவலையின்றி உறங்கவேண்டிய இளையவன், கவலையே உருவெடுத்தது போல இப்பொழுது விடியு மட்டும் உறங்காமல் இருக்கிறானே!' என்ற எண்ணத்தால் குகன் இலக்குவனைப் பார்த்திருக்கலாம். 'முடி சூடும் தலைக்குள்ளே தான் கவலைகள் அனைத்தும் குடி புகும்,'[1] என்று கூறுவர். ஆனால், இளையவன் கவலையற்று உறங்க வேண்டிய நேரத்தில் இவ்வாறு காவல் புரிய நேர்ந்ததே! அதுவும், 'இற்றதோர் நெஞ்சினனாக இருகணீர் அருவி சோர, உற்ற ஓவியமாக ஒரு சிலை அதனின் நிற்கும்' நிலையைக் கண்ட குகன், எல்லை அற்ற துயர்க்கடலில் மூழ்கிவிட்டான்.

தன்பால் தோன்றும் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு வாழும் நாகரிகத்தில் பழகியவன் அல்லன் குகன். இளம்பிள்ளையாகிய இலக்குவன்—மன மகிழ்ச்சியோடு உறங்க வேண்டியவன்—இவ்வாறு நிற்றலும் காவல் செய்தலும் அவனுக்கு வருத்தத்தை உண்டாக்கியதோடு அவனுடைய 'தாய்மை உணர்ச்சி'யையும் தூண்டிவிட்டன. எனவே, அவனை நோக்கினான். உடனே இலக்குவன்

---

1. Uneasy lies the head that wears a crown. Shakes. Henry IV, Part 2. Act III. Sc I.

இவ்வாறு காவல் புரிவதற்குக் காரணமாய் அமைந்த இராமனை ஒரு முறை நோக்கினான். இவ்விருவரும் அண்ணன் தம்பியர். அரசை இழந்து அவதியுறுபவன் அண்ணன். ஆனால், அந்தக் கவலையோ வேறு கவலையோ ஒரு சிறிதுமின்றி அமைதியே வடிவாக உறங்கு கிறான் இராமன். இவ்வளவும் நடந்த பிறகு அரசையும் இழந்து, காட்டிற்கும் வரவேண்டிய நிலைமை ஏற்பட்டும், மன அமைதியை இழவாமல் இராமன் உறங்கும் அடிப்படை மனநிலை குகனுக்கு விளங்கவில்லை. இராமனுக்கு நேர்ந்த இன்னலைக் கண்டு இலக்குவன் விடியுமட்டும் அழுது தீர்க்கிறான். அவ்விராமன் பட்ட இன்னலை நேரே காணா விடினும், காதால் கேட்ட பாவத்திற்கு இதோ குகனும் அழுகிறான். இவை இரண்டும் சரி. ஆனால், இவை இரண் டிற்கும் காரணம் இராமனுடைய இன்னல்கள்தாமே? அந்த இன்னல்களையும் பொருட்படுத்தாமல் இராமன் மனவமை தியுடன் உறங்கும் நிலையை எவ்வாறு பெற்றான்? இந்நிலை குகனுடைய கற்பனைக்கும் அடங்காமல் விரிவ தொன்று. எனவே, இருவரையும் மாறி மாறிப் பார்க் கிறான் குகன். இருவர் நிலைக்கும் கண்ணீர் விடுவது தவிர அவன் செய்யத்தக்கது வேறொன்று இருப்பதாகத் தெரிய வில்லை.

அவ்வாறாயின், அவன் காவல் பூண முடிவு செய்தது ஏன்? வைணவப் பெரியார்கள் கூறும் முறையில் ஓர் அழகு இருக்கிறது. ஆனால், கம்பநாடன் கற்பித்த குகனுக்கு அது பொருந்துமாறு இல்லை. எனவே, வேறு கருத்து இருக்கிறதா என்று ஆய்வதே நலம். அவ்வாறு ஆய்ந்தால், மற்றொரு விடையும் கிடைக்கிறது. இலக்குவன் விடியு மட்டும் நிற்பது என்ற கொள்கையுடன் நிற்கிறான். அவன் இளமைக்கு ஏற்ற செயல் அன்று இச்செய்கை. அவ்வாறா யின், குகன் அவனை இச்செயல் செய்யாதிருக்க வேண்ட லாம். அவ்வாறு வேண்டினால் மட்டும் இலக்குவன் தன் கடமை என்று நினைந்து செய்கிற ஒன்றை விட்டுவிடு

வானா? உறுதியாக விடப்போவதில்லை. குகன் அன்றிக் கடவுளே வந்து இலக்குவனை உறங்குமாறு வேண்டினாலும் அவன் உறங்கப்போவதில்லை. ஆனால், மற்றொன்று செய்து பார்க்கலாம் அன்றோ? தன்னைப் போன்ற வீரன் ஒருவனும் அவனுடைய வீரர் பலரும் காவல் புரிகின்றனர் என்று அறிந்தால், ஒரு வேளை இலக்குவன் சற்றுக் கண் அயரலாம் அன்றோ? இலக்குவனை நேரடியாகப் பார்த்து, 'உறங்கச் செல். நானே காவல் புரிகின்றேன்' என்று கூறக் குகனுக்கு மனத்திடம் வரவில்லை.

ஒரு வேளை இலக்குவன் காவல் புரிவதில் முழு விருப்பம் காட்டாமல் கடமை என்பதற்காக மேற் கொண்டிருப்பின், குகனுக்கு இத்தகைய மனப்பான்மை தோன்றியிருக்கலாம். அப்பொழுது இலக்குவனை உறங்கப் போகுமாறு கூடக் கூறியிருப்பான். ஆனால், இலக்குவனுடைய அன்பின் ஆழத்தையும் அவன் தன் தமையனுடைய இப்போதைய நிலைக்கு வருந்துவதையும் கண்ட குகனுக்கு எவ்வாறு இலக்குவனைப் 'போ' என்று கூற மனம் வரும்? எனவே, அவன் வாயாற்கூறாமலே தானும் அத்தொழிலை மேற்கொண்டுள்ளான். இவ்வாறு அவன் செய்தசெயலுக்குக் காரணம் கூறாமல், பழையவர்கள் கூறுமுறையில் கூறினால் அதனால் குகனுடைய பெருமை வெளிப்படாமை கண்கூடு. இராமனுடைய கடவுட்டன்மையில் ஈடுபட்ட அவர்கள் இவ்வாறு கூறலாம். ஆனால், இவ்வாறு கூறுவதில் குகனுடைய பெருமை குறைவது கண்கூடு. குகன் பேசிய இரண்டே சொற்களால் அவனுடைய மனப்பண்பை அறிந்துகொண்டு இலக்குவன், 'தாயினும் நல்லவன்' என்று அப்பொழுதுதான் கூறியுள்ளான். அதற்குள்ளாக, 'அந்த இலக்குவன்மேல் சந்தேகம் கொண்டான் குகன், அவன் பங்காளி என்பதற்காக,' என்று கூறுவதன் பொருத்தமின்மை நன்கு விளங்கும்.

பொழுது விடிந்தது. உறக்கம் நீங்கி எழுந்த இராமபிரான் குகனை நோக்கி உடனே நாவாய் கொணருமாறு

ஏவினான். இந்த நிலையில் குகனுடைய மனம் மாறி விடுகிறது. இராமனையும் சீதையையும் ஒரு முறை நோக்கிய அப்பெருமகன், அவ்விருவரும் காட்டில் சென்று வாழ்வதை மனத்தாலும் கருத முடியாமல் வருந்துகிறான். தேவியின் மெல்லிய பாதங்கள் பரற்கற்களில் பட்டுத் துடிப்பதை அவன் மனக்கண்ணால் காண்கிறான். ஆனால், உடன் அழைத்து வருவதால் யாதும் தீங்கில்லை என நினைத்தே இராமன் மனைவியையும் உடன் அழைத்து வந்திருக்க வேண்டும். அவ்வாறு இருக்க, இடை வழியில் அதன் அருமையைக் கூறிக் காடு செல்ல வேண்டா என்று தடுப்பது மரியாதைக்குரிய செயல் அன்று. எனவே, குகன் வேறு வழியைக் கையாள்கிறான்.

இராமன் வனம் செல்லவேண்டுமென்பதுதானே குறிக்கோள்? தன் ஊராகிய சிருங்கிபேரமும் காட்டிலேதானே அமைந்திருக்கிறது? எனவே, தன் ஊரில் இராமன் தங்கி விடுவதும் காட்டில் தங்கியது போலத்தானே ஆகும்? இவ்வாறு சிந்திக்கிறது குகனுடைய அன்பு மனம். வனத்தில் வாழ்பவர் ஏவலரை வைத்துக்கொள்ளக் கூடாதா? இராமனை நோக்கி இவை அனைத்தையும் கூறுகிறான் குகன். தேனும் தினையுமே இராமன் உண்ண வேண்டும் எனில், அவை இங்கேயே கிடைக்கும். பொழுதைக் கழிப்பதற்கு ஆயிரக்கணக்கான வேடர் துணை உளர். ‘காட்டில் வாழ்கிறோம்,’ என்ற நினைவுண்டாகாமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ, அவை அனைத்தையும் செய்ய அவன் காத்து நிற்கிறான், ஒலிக்கின்ற ஆகாயத்தில் உள்ள பொருள் வேண்டுமென்று விரும்பினாலும் கொண்டுவரக்கூடிய வீரர் பலர் காத்து நிற்கின்றனர். இன்னோரன்ன பல காரணங் கூறியும், இராமனைத் தன் பால் நின்றுவிட வேண்டுகிறான் குகன்.

இவை அனைத்தையும் கேட்ட இராமன் புன்முறுவலுடன் மீண்டுவரும் போது குகனிடம் வருவதாகக் கூறவே,

குகனுக்கு மேலும் பேச வாய்ப்பு இல்லையாகிவிட்டது. இராமனை விட்டுப் பிரிய மனமில்லாத குகன் அவனை ஏற்றிக்கொண்ட நாவாயைத் தானே செலுத்திச் செல்கிறான்.

ஓடத்தை விட்டு மறுகரையிலிறங்கிய இராமன், 'சித்திரகூட மலைக்குச் செல்லும் வழி யாது?' என்று குகனை வினவினான். இக்கேள்வி குகனைத் திகைக்க வைத்துவிட்டது.

''பத்தியின் உயிர்ஈயும் பரிவினன் (குகன்) அடிதாழா,
'உத்தம! அடிநாயேன் ஓதுவது உளது,' என்றான்.
(கம்பன்—1989)

இத்துணை முன்னேற்பாட்டுடன் குகன் கூறத் தொடங்கிய செய்தி இராமனை வியப்பில் ஆழ்த்திவிட்டது. ''ஐயனே, உன்னுடன் வரும் பேற்றை எனக்கு நல்குவையாயின், இப் பக்கத்து வழிகளை நன்கறிந்த யான், செல்லுதற்கு அரிய வான வழிகளையும் நன்கு செல்லக்கூடியனவாக்கிவிடும் வன்மை உடையேன்; உங்கள் பசி நேரத்திற்கு வேண்டும் கனி கிழங்குகளைத் தேடித் தருவேன்; நீங்கள் தங்குவதற் குரிய பர்ணசாலை முதலின அமைப்பேன்; ஒரு விநாடியும் உங்களைப் பிரிந்திரேன்,'' என்னும் கருத்தில்,

''நெற்றியிடு நெறிவல்லேன்; நேடினென் வழுவாமல்
நறியன கனிகாயும் நறவுஇவை தரவல்லேன்;
உறைவிடம் அமைவிப்பேன்; ஒருநொடி வரைஉம்மைப்
பிறிகிலென் உடன்ஏகப் பெறுகுவன் எனின்நாயேன்.''
(கம்பன்—1990)

என்று கூறுகிறான்.

இவ்வாறு கூறியதுடன் குகன் அமையவில்லை; தன்னை உடன் அழைத்துச் செல்வதால் ஏற்படும் நலன்கள் அனைத்தையும் வரிசைப்படுத்திக் கூறுகிறான். 'தீயவற்றை

அழிப்பேன்; காடுகளில் வசிப்பதற்கேற்ற இடங்களைத் தேடித்தர வல்லேன்; கவலைக் கிழங்கு முதலியவற்றை மலையினிடத்தும் தோண்டித்தர வல்லேன். எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் சென்று குடிநீர் கொண்டு வர வல்லேன்; எதற்கும் அஞ்சேன்; அனேக வில் வீரர்களை உடையேன்; உன் திருவடி ஒருபோதும் பிரியாதிருக்க நீ அருள் செய்வையாயின்,' என்ற பொருள்பட மேலும் கூறுகிறான்:

"கல்லுவென் மலையேனும் கவலையின் முதல்யாவும்;
செல்லுவென் நெறி; தூரம் செறிபுனல் தரவல்லேன்;
வில்இனம் உளென்; ஒன்றும் வெருவலென் ஒருபோதும்
மல்லினும் உயர்தோளாய்! மலரடி பிரியேனால்."

(கம்பன்—1992)

இவ்வாறு குகன் அடுக்கிக்கொண்டே சென்றதைக் கேட்ட இராமன் மலைத்துப்போய்விட்டான். இத்தகைய அன்புடையாரை இராமன் இது வரை கண்டதில்லை, குகனுக்கு இவ்வளவு வன்மையும் உண்டு என்பதை, இராமன் அறியாமல் இல்லை. பின்னர் ஏன் குகன் இவ்வாறு வரிசைப்படுத்துகிறான்? அதுவே அவனிடம் உள்ள சிறப்பு. நகர மக்கள் இழந்துவிட்ட நாகரிகம் இது. வஞ்சகம் என்பதையும் போலித் தன்னடக்கம் என்பதையும் கனவிலும் கருதாத குகன், இச்செயல்களில் இவ்வரச குமாரர்களைவிடத் தனக்குப் பழக்கம் மிகுதி என்று நினைக்கிறான். யாரும் அதனை மறுக்க இயலாதன்றோ? அரண்மனையிற்பிறந்து வளர்ந்தவர்களால் கவலைக் கிழங்கை வெட்டி எடுக்க முடியுமா? ஆள் நடமாட்டம் அற்ற காட்டில் நீர் நிலை எங்குளதென்று அறியத்தான் முடியுமா? முதன்முறையாக வனம் புகுந்துள்ளனர். அதிலும் பெண் ஒருத்தியை உடன் கொண்டு புகுந்தனரே! என்ன அறியாமை! தனி மனிதனே வாழ்க்கை வசதி செய்துகொள்ள முடியாத காட்டில், அவ்வாழ்க்கை அனுபவம் ஒரு சிறிதும் இல்லாதவளும், அதற்கு மறுதலை

யான வாழ்க்கையே வாழ்ந்து பழகியவளும் ஆகிய ஒரு பெண்ணை அழைத்து வரலாமா? அவ்வாறு வந்துவிட்ட அவர்கட்குக் காட்டு வழிகளில் அனுபவம் உடையான் ஒருவன் உதவி தேவைப்படாதா? அவர்கள் ஒப்புயர்வற்ற வீரர்களாய் இருக்கலாம். ஆனால், நீர் வேட்கையால் வாடும்போது அவர்கள் வீரம் எவ்வாறு பயன்படும்? நீர் எங்குக் கிடைக்கும் என்ற அனுபவம் தேவைப்படுமே தவிர, வில் வீரம் இங்குப் பயன்படாதன்றோ?

'எடுத்த காரியத்தை எவ்வாறாயினும் முடித்து விட வேண்டும் என்ற கருத்தால் முன்பின் ஆராயாமல் பெண் ஒருத்தியையும் உடனழைத்துக்கொண்டு வனம் புகுந்து விட்டனர் இச்சோதரர்.' என்று கூடக் குகன் நினைந்து விட்டான்.

சித்திரகூடமலைக்கு வழி தெரியாமல் கேட்கின்ற இவர்கள் காட்டு வாழ்க்கையின் நுணுக்கங்களை எவ்வாறு அறிய முடியும்? பார்ப்பதற்கு ஒன்று போலக் காணப்படி னும் சில பகுதிகளில் தங்கலாம்; சிலவற்றில் நெருங்கக் கூடக் கூடாதே! இவற்றை இவர்கள் எங்ஙனம் அறிய முடியும்? குகன் இதைப் பற்றி நினைக்குந்தோறும், நினைக்குந்தோறும், 'இவர்களைத் தனியே விடுதல் தகாது.' என்ற முடிவிற்கு வந்துவிட்டான்.

இராமனுடைய வன்மையை ஓரளவு அறிந்தும் நன்கு கேட்டும் தெரிந்திருந்தவனாகிய தசரதனே இராமன் காட்டில் நன்கு வாழ முடியாது என்று நினைத்து விட்டானே! ஏன்? அவனுடைய அன்பு என்ற கண்ணாடி வழியாகக் காணும்போது இராமன் சிவனுடைய வில்லை ஒடித்தவனாகக் காட்சி நல்கவில்லை; பச்சைக் குழந்தை யாகக் கூனி கூன்மேல் வில் உருண்டை அடித்தவனாகவே காட்சி நல்குகிறான். கற்றறிவுடையவனாகிய தசரதனே அவ்வாறு இராமனைப் பற்றி அன்பு காரணமாக நினைப் பானாகில், குகன் அதே அன்பால் தூண்டப்பட்ட நிலையில் எவ்வாறு நினைப்பான்? 'இராமனால் இப்பரந்த காட்டில்

நன்கு வாழ முடியாது,' என்று குகன் கருதுவதில் தவறு யாது? 'அன்பு செய்யப்பட்டவர்களுடைய வன்மையை அன்புடையர்அ றிய முடியாது.' என்பது அனைவரும் அறிந்ததே. அதனாலேயே போலும் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் 'மலரடி பிரியேன்' என்று குகன் கூறுகிறான்!

இராமனுடைய வன்மையைக் குகன் குறைத்து மறைத்துவிட்டாலும், அதன் பின்னர் இருக்கின்ற அன்பை இராமன் நன்கு அறிந்து கொண்டான். எனவே, குகன் மனம் அமைதியடையும்படி விடையிறுக்க வேண்டுவது அவனுடைய பொறுப்பாகி விட்டது. மேலும், குகனுடைய அன்புக்கும் கைம்மாறு செய்யும் வகையில் இராமனுடைய விடை அமைந்து கிடக்கிறது. தன்னுடைய இரகு குலத்தின் பெருமையை அப்படியே மறந்து விட்டான் இராமன். குகன் வேடுவர் குலத்தில் தோன்றிய நாவாய் வேட்டுவன் என்பதையும் இராமனை மறக்கச் செய்துவிட்டது குகனுடைய தூய அன்பு. வேறுபாடுகள் அனைத்தையும் மீறித் தோன்றுகிற இந்த அன்பு வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்ட இராமன், குகனுடைய அன்புக்கு நன்றி பாராட்ட வேண்டியவனாகிறான். இரகு குலத்தில் தசரதன் பிள்ளையாய்த் தோன்றிய தன்னைக் குகனுடைய தமயனாக்கி, இளவல் இலக்குவனைக் குகனுடைய தம்பி யாக்கிவிடுகிறான். இவ்வளவிலும் இராமனுடைய அன்பு நின்றபாடில்லை. ஜனகன் மகளும், தசரதன் மருமகளும் தன் மனைவியும் ஆகிய சீதையை வேட்டுவக் குகனுடைய தோழியாக்கி விடுகிறான். மேலும், இவ்வுலகம் குகனுக்கே சொந்தமென்றும், அவனுடைய ஏவற்படியே தான் ஆள்வ தாகவும் கூறிவிடுகிறான்.

"அன்னவன் உரைகேளா அமலனும் உரைசெய்வான்:
'என்னுயிர் அனையாய்நீ; இளவலுன் இளையான்; இந்
நன்னுத லவள்நின்கேள்; நளிர்கடல் உலகெல்லாம்
உன்னுடை யது;நானுன் தொழில்உரி மையினுள்ளேன்."

(கம்பன்—1994)

குகனுடைய அன்பிற்கு முற்றிலும் ஏற்ற பாராட்டு இது என்று நம்மையும் அறியாமல் நம் மனம் மகிழ்கிறது! இங்குள்ளவரை மட்டும் தொடர்பு படுத்தியதுடன் நில்லாமல் ஊரில் வாழ்பவரையும் இவ்வுறவு முறைக்கு ஆளாக்குகிறான் இராமன்.

“துன்புளது எனின் அன்றோ சுகம்உளது? அதுவன்றிப்
பின்புளது இடைமன்னும் பிரிவுளது என உன்னேல்;
முன்புளம் ஒருநால்வேம், முடிவுளது எனஉன்னா
அன்புள; இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம்.”

(கம்பன்—1995)

இவ்வளவு கூறினாலும் குகனுடைய ஐயத்திற்கு இன்னும் விடை கிடைக்கவில்லையன்றோ? இராமன் மனைவியுடன் காட்டில் தனியே தங்குதல் தகாது என்ற குகனுடைய ஐயம் நீக்கப்படல் வேண்டும் அன்றோ? அதற்கெனவே அடுத்த பாடலில் இராமன், “நீ அஞ்ச வேண்டா. உன் தம்பியாகிய இலக்குவன் என்னுடன் இருக்கிறான்,” என்ற கருத்தில் “படர்உற உளன் உம்பி கானுறை பகல் எல்லாம்” (1996) என்று கூறுவது போற்றற்குரியது.

இவ்வளவு கூறியும் அக்குகனது மனம் அமைதி அடைந்ததாகத் தெரியவில்லை. எனவே, இராமன் அன்பே வடிவான குகனுக்கு அன்பால் கட்டளையிடுகிறான். “அயோத்தியில் தங்க விரும்பா விடினும் உன் தம்பி பரதன் என் கட்டளைக்குக் கட்டுப்பட்டு அவண் தங்கிவிட்டான். ஆளும் குலத்தில் பிறந்த நாம், எவ்வளவு அதனை விரும்பாவிடினும், கடமையைச் செய்ய வேண்டும் அல்லவா? எனவே, நீ புறப்பட்டுவிட்டால் இங்குள்ள நம் கிளைஞரைக் காப்பாற்றுவார் யார்? உன் சுற்றத்தார் என்னுடையவர் அல்லரோ?” என்ற கருத்தில் அன்பால் கட்டளை இடுகிறான்:

''அங்குள கிளைகாவற்கு அமைதியின் உளன்உம்பி
இங்குள கிளைகாவற்கு யாருளர்? இசையாய்நீ;
உன்கிளை எனதுஅன்றோ? உறுதுயர் உறலாமோ?
என்கிளை இதுகா என் ஏவலின் இனிது'' என்றான்.

(கம்பன்—1997)

இத்தகைய அன்புக் கட்டளை தவிர வேறு எந்த வழியில் இராமன் பேசியிருப்பினும், ஒன்று குகனை நிறுத்தியிருக்க முடியாது; அன்றேல், அவன் மனம் நோகுமாறு செய்திருக்க வேண்டும். இராமன் தனக்கே உரிய தனி முறையில் தன் கருத்தையும் நிறைவேற்றிக் குகனையும் அமைதி பெறச் செய்தான். அன்புக் கட்டளையை மீற முடியாத குகன், பிரியா விடை தந்து நின்றுவிட்டான்.

இராமன் குகனும் பழகிய முறையை இதுகாறுங் கண்டோம். தூய்மையானதும் பயன் கருதாததும் ஆழமானதும் ஆன அன்பிற்கு இதுவே இலக்கியம். இராமனுடைய உயர்ந்த பண்பாட்டை ஓரளவு குகன் அறிந்திருந்தானே தவிர, அப்பெருமகன் திருமகள் கேள்வன் என்பதைச் சற்றும் அறியவில்லை. இராமனைத் தன்னைப் போன்ற மனிதனாகவே மதித்து எவ்விதப் பயனையும் எதிர்பாராமல் அவனிடம் அன்பு பாராட்டியதே குகனிடம் நாம் காணும் சிறப்பு. இன்னுங் கூறப் போனால், அம்மூவரையும் மிகவும் இளையவர்களாகவே அவன் மதித்து விட்டமையின், ஒரு தாய், பிடிவாதம் செய்கின்ற குழந்தையிடத்துக்காட்டும் பரிவையே குகனும் அவர்களிடத்துக் காட்டுகிறான். அன்பை வெளிக் காட்டுவதில் எவ்வித நாணமும் அடையவில்லை குகன்;

'அன்பு இலார் எல்லாம் தமக்குஉரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.'

(திரு, 72)

ஆகலின், உடல், பொருள், ஆவி அனைத்தையும் தன்னால் அன்பு செய்யப்பட்ட இராமனிடம் ஒப்படைக்கத் தயா

ராய் இருக்கிறான். அறிவின் துணை கொண்டு ஆய்ந்து இன்னாருக்கு இத்தகைய உதவி தேவை என்று கருதாமல் உதவுவதே வள்ளன்மை* எனப்படும். பாரி வள்ளல் முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த செயல் இத்தகைய அன்பால் தூண்டப்பட்டது அன்றோ! அதே போலக் குகனுடைய அன்பும், அறிவு, ஆராய்ச்சி என்பவற்றால் காண இயலாத உயர்ந்த நிலையில் உள்ளதொன்றாகும். இராமகாதையில் வரும் பாத்திரங்கள் அனைத்தினுங் குகனுடைய அன்பு ஒப்புயர்வு அற்றதாய் விளங்கக் காண்கிறோம்.



* கவிஞர் குகனை வள்ளல் என்று குறிப்பார் 10, 250.

கூற்றின் ஆற்றலான்

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்,' என்பது பெரியோர் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை. பண்பாட்டினால் மேம்பட்ட ஒருவனை அதே பண்பாடு நிறைந்துள்ள மற்றொருவன் அறிந்து கொள்வது எளிதாகும். ஏனையோர் அறிவதன் முன் தன் இனத்தவனை ஒருவன் காண்டல் கூடும். பல சந்தர்ப்பங்களில் மிக நெருங்கிப் பழகியும் உறவு கொண்டாடியுங்கூட அறிய முடியாத பண்புகளை ஒரு வினாடியில் ஒருவர் அறிந்து விடுகிறார். சூழ்நிலை எவ்வளவு மாறுபட்டதாய் இருப்பினும், கவலை இல்லை; பண்புடையாளர் மற்றொரு பண்புடையாரை எளிதில் அறிவர். இதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குறகிறவர்களே பரதனும் குகனும்.

எண்ணுதற்கு எட்டாத நற்புண்புகளை உடைய பரதன், அயோத்தி மீண்டதும், இராமனுக்கு நிகழ்ந்த வற்றை அறிந்து பெரிதும் வருந்தினான். உடனே, 'வள்ள லைக் கொணர்வான் வேண்டி அனைவரும் காடு நோக்கிப் புறப்படுக!' என்று ஆணையிட்டுத் தானும் புறப்புட்டு வருகிறான்.

"தூண்டிய தேர்களும், துரக வெள்ளமும்,
காண்டகு கரிகளும் தொடரக் காலினே"

(கம்பன்—2302)

நடந்து வருகிறான்: வழியில் கங்கை தடுத்துவிட்டது அவனது முன்னேற்றத்தை. படைஞரும் பரதனும் கங்கையின் வடகரையில் தங்கிவிட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கரையிலிருந்த குகனைச் சிறிது காண வேண்டும். முன்னர் இராமனுடன் காணப்பட்ட குகன் அல்லன் இவன். சிருங்கிபேரத்தின் அரசனும், தன் உயிர்த் துணைவனாய இராமனைக் காக்கும் பொறுப்பை வலிய மேற்கொண்டவனும் ஆகிய குகனை இப்பொழுது காண்கிறோம். கை கட்டி வாய் பொத்திக் கண்ணீர் ஆறாய்ப் பெருக நிற்கும் குகன் அல்லன், இப்பொழுது கங்கைக் கரையில் நிற்பவன். இப்பொழுது அவன் நிற்கும் நிலை முன்னரே அவன் அன்புள்ளத்தை அறிந்த நமக்குக்கூட அச்சத்தை உண்டாக்குகிறது.

''நகைமிகக் கண்கள்தீ நாற நாசியில்
புகைஉறக் குனிப்புறும் புருவப் போர்விலான்

''மையுற உயிரெலாம் இறுதி வாங்குவான்
கையுறு கவர்அயில் காலன் என்னும்பேர்
ஐயுறு மாறுதான் உருவம் ஆயினான்
மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான்.

''கட்டிய சுரிகையன்; கடித்த வாயினன்;
வெட்டிய மொழியினன்; விழிக்கண் தீயினன்;
கொட்டிய துடியினன்; குறிக்கும் கொம்பினன்;

'கிட்டியது அமர்!' எனக் கிளரும் தோளினான்.''
(கம்பன்—2309, '10, '11)

குகன் நமக்குப் புதியவனல்லன்; ஆனால், இத்துணைக் கோபம் அவனுக்கும் வர முடியுமா என்றுதான் வியப்புத் தோன்றுகிறது. இத்துணைச் சினத்திற்கும் காரணம் கூறுவது போன்று கவிஞன் 'கிட்டியது அமர்எனக் கிளரும் தோளினான்' என்று கூறுகிறான். அப்பொழுதும் ஓர்

ஐயம் தோன்றத்தான் செய்கிறது. உண்மை வீரனாகிய குகனுக்குப் போர் என்று கூறியவுடன் மகிழ்ச்சி தோன்ற வேண்டுமே தவிரச் சினம் தோன்றக் காரணம் யாது? "போரெனில் புகலும் புனைகழல் மறவர்" என்பது புறப் பாடல். அத்தகைய பரம்பரையில் உள்ள குகனுக்குத் தோள்கள் கிளர்ந்து எழல் முறை. ஆனால், சினம் ஏன்? காரணம் எதிர்க்கரையிலிருக்கிறது. பரதனுடைய "தொகை முரண் சேனையை" அச்சேனை எழுப்பும் துகள் காரணமாகவே கண்டு கொண்டு பரதனே வருகிறான் என்பதையும் அறிந்து கொண்டான் குகன். ஆனால், அவன் மேல் சீற்றங் கொள்ளக் காரணம் யாது? காரணம் இருக் கிறது. குகனுடைய நிலைமையில் யார் இருப்பினும், பரதன்மேல் சினம் வரத்தான் செய்யும். அதில் தவறு ஒன்றும் இல்லை. இதன் காரணத்தைப் பின்னர்க் காண்போம்.

எல்லையற்ற சினத்துடன் எதிர்க்கரையைக் கண்ட குகன், தன் பரிவாரங்களை நோக்கிக் கூறத் தொடங்கி விட்டான். "பெருஞ்சூழ்ச்சியுடன் எதிர்ப்புறத்தில் வந் துள்ள பரதனையும் அவனுடைய படைகளையும் மேல் உலகம் அனுப்ப முடிவு செய்து விட்டேன்! போருக்கு உடனே நீங்கள் புறப்படவேண்டும்! நீர்த்துறைதோறும் காவல் நிறுவுங்கள்! ஒரு படகைக்கூட ஓட்டாதீர்கள்!" வேடர் குலத் தலைவனாகிய குகன் தன் படைகட்கு இட்ட நாள் ஆணையாகும்[1] இது.

உலகில் வாழும் புலிகள் அனைத்தும் ஒரு வழி வந்து கூடியது போல வீரர் அனைவரும் வந்து கூடிவிட்டனர். தலைவனாகிய குகன், "அமைதிர் போர்க்கு" என்று ஆணை இட்டுவிட்டான். வீரர் தத்தம் கடமையை அறிந்தவராதலின், தத்தம் தொழிலைச் செய்ய ஒரு பகுதி

1. Order for the day

யினர் சென்று விட்டனர். எஞ்சியவர் அனைவரும் குகனைச் சுற்றி நிற்கின்றனர். இவ்வளவும் கூற இத்தனை நேரம் ஆயிற்று எனினும், குகன் எவ்வளவு வேகமாக இவ்வளவு ஆணைகளையும் இட்டான் என்பதைக் கவிஞன் நன்கு கூறுகிறான். குகன் ஆணையிட்ட வேகத்தைப் பாடலில் காணப்படும் சொற்களால் கம்பன் கூறவில்லை. அவ்வாறு கூறியிருப்பின், அவன் சிறந்த கவிஞனும் ஆகான். பின்னர் எவ்வாறு கூறுகிறான்? கவிதைகளை அமைக்கும் ஓசை முறையால் இதனைக் கூறிவிட்டான். நான்கு சீர்களைக் கொண்ட விருத்தப் பாடல்களில் நூற்றுக்கும் மேலான ஓசை முறைகளை அமைத்த பெருமை கம்பநாடனையே சாரும். அவற்றுள் இங்குக் காட்டப் பெற்ற பாடல்கள் ஒரு வகை.

''எலியெலாம் இப்படை; அரவம் யான்!'' என
ஒலியுலாம் சேனையை உவந்து கூயினான்.

என்ற இப்பாடலுடன் முன்னர்க் கூறிய மூன்று பாடல்களையும் வாய்விட்டு உரத்துப் படித்துப் பார்த்தால், உண்மை விளங்கும். அவற்றில் உள்ள சொல் தொடர்களும் அவ்வாறே. ஒவ்வொரு பாடலிலும் பயன்படுத்தப் பெற்றுள்ள வல்லெழுத்துகள் அவனுடைய சினம் வெளிப்படும் முறையை நமக்கு ஓசையால் அறிவிக்கின்றன. ஒரு பாடல் முழுவதிலும் ஒரு சொற்றொடர் பேசும் கம்பநாடன் இப்பொழுது ஒரே பாடலில் மூன்று நான்கு வாக்கியங்களைப் பேசிவிடுகிறான். பொங்கி வரும் சினத்தால் சொற்றொடர் சிறியதாகவே அமையும். அதனையும் ஓசை மூலம் பெற வைக்கிறான் கவிஞன். இவை அனைத்தும் சேர்ந்து அவனுடைய ஆணைகள் மிக விரைவாகவும், மிக அழுத்தமாகவும் வெளி வந்தன என்பதைப் படிப்பார்க்கு உணர்த்தி நிற்கின்றன.

இதனையடுத்துக் குகன் தனக்குத்தானே பேசிக் கொள்வது போலவும், உடன் நிற்பவர்கட்குக் கூறுவது

போலவும் சில சொற்கள் பேசுகிறான். அச்சொற்களில் அவனுடைய நன்றியுணர்ச்சி, நட்பின் ஆழம் முதலியவை அனைத்தும் வெளியாகின்றன. எதிர்க்கரையில் நிற்கும் பரதனை அவன் இன்னும் காணவில்லை; எனவே, வந்தவன் பரதன் என்று அறிந்த மாத்திரத்தில் பேசத் தொடங்கிவிட்டான்.

"அஞ்சன வண்ணன்என் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனை யால்அரசு எய்திய மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீஉமிழ் கின்றன செல்லாவோ?
உய்ஞ்சுஇவர் போயிடின் நாய்க்குகன் என்றுஎனை ஓதாரோ?"

(கம்பன்—2316)

இப்பாடலின் முதல் இரண்டு அடிகளையும் கவனித்தல் வேண்டும். 'வஞ்சனையால் அரசு எய்திய மன்னர்' என்று குறிப்பிக்கப்படுகிறவன் பரதனாவான். இதனுடன் குகன் நிறுத்தவில்லை.

"முன்னவன் என்றும் நினைந்திலன்; மொய்புலி அன்னான்ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்; அன்னவை பேசானேல்
என்இவன் என்னை இகழ்ந்ததுஇவ் வெல்லை கடந்தன்றோ?
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ?"

(கம்பன்—2318)

இதனை அடுத்து வரும் பாடலில் குகனுடைய கற்பனையில் காட்சியளிக்கும் பரதன் இன்னும் ஒருபடி மேலே சென்று விடுகிறான்.

"பாவமும் நின்ற பெரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண்ணுலக ஆள்பவர் எண்ணாரோ?"

(கம்பன்—2319)

இம்மூன்று பாடல்களிலும் கூறியவற்றை நன்கு கவனித்தல் வேண்டும். இப்பாடற்பகுதிகளில் ஒரு வகையான பரதன்

காட்சியளிக்கிறான். பரதனைப் பற்றி இதற்கு முன்னர் அறிந்திருப்பவர்கட்குக் குகனுடைய இச்சொற்கள் வியப்பையும் ஓரளவு சினத்தையும் தருதல் கூடும். இதன் முற்பகுதியிலே தான் பரதனும் கோசலையும் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டோம். கோசலையால் 'நிறை குணத்தவன் நின்னினும் நல்லனால்' என்று புகழப்பட்டவன் பரதன். மேலும், கேகயத்திலிருந்து திரும்பிய பரதன் கைகேயி மூலந்தான் தந்தை உயிர் இழந்த செய்தியையும் தமையன் காடு சென்ற செய்தியையும் அறிந்தான்; தாயின் மேல் ஏற்பட்ட சினத்தையும் வெறுப்பையும் மாற்றிக் கொள்வதற்காகக் கோசலை கோயில் புகுந்தான். கோசலையோ, பரதன்மீதும் ஓரளவு ஐயம் கொண்டிருந்தாள். ஆனால், அவன் பேசிய பேச்சுக்களால் மனம் முற்றிலும் மாறிவிட்டாள் கோசலை. பரதனை நோக்கி மனம் குளிர்ந்து,

''முன்னை நின்குல முதலி னோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கு நீர்மையார்?
மன்னவர் மன்னவ!'' என்று வாழ்த்தினாள்.

(கம்பன்—2220)

இவ்வாறு கோசலையால் பாராட்டப்பெற்ற பரதனை ஏன் குகன் இவ்வளவு இழிவாக நினைக்கிறான்? பரதனை இதற்கு முன்னர்க் குகன் கண்டதும் இல்லையே! காணாதிருப்பவும், பரதன்மேல் இத்துணைக் கோபம் வரக் காரணம் யாதாய் இருக்கலாம்? மேலும் பரதன் எந்த நோக்கத்துடன் வருகிறான் என்பதையும் குகன் அறியவில்லை; அறிய முற்படவும் இல்லை. இராமன்மேல் போர் தொடுக்கும் விருப்பம் இல்லாமலும் படையுடன் பரதன் வரக்கூடும் என்பதை ஏனோ குகன் நினைந்து பார்க்கவில்லை? 'ஏன் படையுடன் வரவேண்டும்!' என்ற ஐயங்கூட அவன் மனத்தில் தோன்றியதாகத் தெரியவில்லை. அதற்கு மறுதலையாக, பரதனைப்பற்றியும் அவனுடைய வருகை பற்றியும் முற்றிலும் அறிந்தவன் போலக் குகன்

பேசுவது சற்று வியப்பையே தருகிறது. ''வஞ்சனையால் அரசு எய்திய மன்னர்,'' ''முன்னவன் என்றும் நினைந் திலன்'', ''புவி ஆள்பவன்'' என்பன பரதனைப்பற்றிக் குகன் கொண்ட முடிவுகள். ''தோழமை தந்தானாகிய இராமன்மேல் சேனைபோவது என் உயிர் போன பிறகல் லவா?'' என்பது பரதனுடைய படை வருகைக்குக் குகன் கற்பித்த காரணம். இராமன்மேல் படை எடுப்பதல்லாமல், அவனை அன்புடன் மீட்டும் அழைத்துச் செல்லும் நோக் குடனும் பரதன் வரக்கூடும் என்பது குகனுடைய மனத்தில் படவேயில்லை!

முன்பின் அறியாத பரதனைப்பற்றி இத்தகைய முடிவு கள் குகன் மனத்தில் தோன்றக் காரணம் யாது? காரணம் ஒன்றாகத்தான் இருத்தல் கூடும். பரதனைப்பற்றிய மிகத் தவறானவையும், மெய்ம்மைக்கு மாறுபட்டவையுமான கருத்துகளைக் குகன் முன்னமே பெற்றிருந்தான். இக் கருத்துகளைக் குகன் யாண்டுப் பெற்றான்? இராம னுடைய வரலாற்றை அவன் எப்பொழுது அறிந்தானோ அப்பொழுதுதானே பரதனைப்பற்றியும் அறிந்திருத்தல் கூடும்? ஆம்; குகனுக்கு இராமன் காடு வந்த வரலாற்றை யார் கூறினர்? இளையவனாகிய இலக்குவனே கூறினான். எனவே, பரதனைப்பற்றியும் இலக்குவனே கூறியிருத்தல் வேண்டும். பரதனைப்பற்றி இலக்குவன் எப்பொழுதுமே தவறான எண்ணம் கொண்டிருந்தான். எனவே, அவன் தான் கொண்ட தவறான கருத்தைத்தானே குகனுக்கும் கூறியிருத்தல் வேண்டும்? பரதனுடைய வருகை பற்றி அவனை முன்பின் தெரியாத குகன் கூறியன ஒரு புறமிருக் கட்டும். இளமையிலிருந்தே அவனுடன் பிறந்து வளர்ந்த இலக்குவன்கூட அன்றோ அறியமுடியவில்லை! பரதன் படை எடுத்து வருகிறான் என்றே இலக்குவனும் முடிவு செய்து போருக்குச் சித்தமாகிறான்.

எனவே, பரதன்மேல் இத்துணைத் தவறான கருத் துடைய இலக்வகுன் பரதனைப் பற்றிக் குகனிடம் கூறி

னான். குகன் அதை நம்பாமல் யாது செய்வது? அவன் கண் எதிரே இலக்குவன் நிற்கிறான். எவ்வாறு? **''வில்லை ஊன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும் கங்குல் எல்லை காண்பளவும் நயனம் இமைப்பிலனாக''** நிற்கிறான். இக் காட்சி மூலம் இராமன் மேல் இலக்குவன் கொண்டுள்ள அன்பின் ஆழத்தைக் குகன் நேரே காண்கிறான். இந்த நிலையில் இலக்குவன் சொற்களை நம்பாமல் இருக்க முடியுமா? மேலும் இராமன் காடு செல்வதால் உடனடியாகப் பயன் அடைபவன் பரதன் அல்லனோ? எனவே, பரதன் தீயவன் என்று இலக்குவன் கூறினால், குகன் அதனை ஏற்றுக் கொள்வதில் தடை யாது? தான் ஆளும் நாட்டின் எல்லையிற்கூட இராமன் இருக்கக் கூடாது என்ற காரணத்தாலேதான் அவனைக் காட்டிற்கு அனுப்பி விட்டான் பரதன் என்றுதானே குகன் நினைப்பான்? அதற்கு ஏற்றாற்போல இப்பொழுது பரதன் படையுடன் வந்தான் என்றால், அண்ணனை அழிக்கத்தான் புறப்பட்டு விட்டான் என்றே குகன் நினைக்கிறான். வேறு காரணம் பற்றியும் பரதன் வருதல் கூடும் என்ற நினைவே அவ் வேடர் தலைவனுக்குத் தோன்றக் காரணம் இல்லை.

அடுத்து அவன் பேசிய சொற்கள் படிப்படியாகப் பரதனைத் தாழ்த்திக் கொண்டே செல்லக் காண்கிறோம். ''வஞ்சனையால் அரசு எய்திய மன்னர்'' என்ற குகன் சொற்களால் இலக்குவன் நடந்தவற்றை எவ்வளவு திரித்துக் கூறியுள்ளான் என்பதை அறிகிறோம். தாய் வரம் கேட்டதும், தந்தை அதனை ஈந்ததும் முறைப்படி நடந்தன என்பதை இலக்குவன் உணரவில்லை. உணர்ந் திருப்பின், தாய் கொடியவள் என்று கூறுவானே தவிர, வஞ்சனை செய்தாள் என்று கூற முறை இல்லை. ஒரு வேளை வஞ்சனை செய்ததாகக் கூறினாலும், தசரதன் மேலேதான் அக்குறையைக் கூறமுடியும். அவன்தான் இராமனை அழைத்து முதல் நாள் முடி கவிப்பதாகக் கூறி விட்டு, மறுநாள் காடு செல்ல உத்தரவிட்டான். எனவே,

இலக்குவன் கூறுவதுபோல வஞ்சனை நடைபெற்றதாகவே வைத்துக் கொண்டாலும் அதற்கு முற்றிலும் தசரதனே காரணனாவான். கொடிய செயல் என்று அறிந்திருந்தும் மகனுக்கும் முடியைப் பெற்றுக் கொண்டு இராமனைக் காடு செல்ல வேண்டுமென்று கட்டளையிட்டது கைகேயி யின் செயல்தான். ஆனால், அது கொடுமை உடையது என்று கூறலாமே தவிர, வஞ்சனை ஆமாறு எங்ஙனம்? இது இலக்குவன் அறியாதது அன்று. இருந்தும், குகன் மனத்தில் (பரதன் வஞ்சனை உடையவன் என்னும்) இந்த எண்ணம் தோன்றுமாறு இலக்குவன் பேசினான் என்றால், அது யாருடைய தவறு? இலக்குவன் இராமன்மேல் கொண்ட அன்பால் தன்னையும் அறியாமல் பரதனாகிய உத்த மனுக்குத் தீங்கை இழைத்துவிட்டான். இலக்குவன் செய்த இந்தத் தவறு காரணமாகக் குகனும் பரதனைப் பற்றி ''வஞ்சனையால் அரசு எய்திய மன்னர்'' என்று முடிவு செய்துவிட்டான்.

இதனை அடுத்துக் குகன் கூறிய சொற்கள்,

''முன்னவன் என்றும் நினைந்திலன், மொய்புலி
அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்.''

(கம்பன்—2318)

என்பவை. இதனால், பரதனை மிகவும் தாழ்த்தி விடு வதுடன் அறியாமை உடையவனாகவும் செய்து விடுகிறான் குகன். இராமனை முன் பிறந்தான் என்ற கருத்தினாலாவது விட்டு வைத்திருக்க வேண்டும் பரதன். தன்னுடன் பிறந்த வனுக்குச் செய்ய வேண்டிய கடமையை மறுத்தலினும் தீங்கு யாதுளது? முன்னே பிறந்த தமையனுடைய உரிமையை மதியாமல் காடு செலுத்திய தம்பியாகிய பரதன் எங்கே, தன் உரிமையைத் தம்பியாகிய பரதனுக்கு விட்டுக் கொடுத்துவிட்டுக் காடு சேர்ந்த இராமன் எங்கே! இராமன் பண்பாட்டில் எவ்வளவு ஒப்புயர்வு அற்றவனாகக் குகன் கருத்தில் படுகிறானோ, அவ்வளவு பண்பு இல்லாத

வனாகப் பரதன் படுகிறான். முன்னவன் என்று நினைந்து கூடப் பார்க்கவில்லை என்ற சொற்களில் அவ்வளவு வெறுப்பையும் கொட்டி விடுகிறான் வஞ்சகம் அற்றவனாகிய குகன்! அடுத்த அடியில் பரதனை அறியாமையின் சிகரத்தில் இருப்பவனாவும் அல்லவா முடிவு செய்து விடுகிறான்! "மொய்புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றனன் என்றிலன்" என்ற அடியைக் கூர்ந்து நோக்க வேண்டும். குகனுடைய கண்களில் மனைவியை உடன் அழைத்துக் கொண்டு காடு வந்துள்ள இராமனைவிட இலக்குவன் வலிமையுடையவனாகக் காட்சி அளிக்கிறான் போலும்! இலக்குவனுடன் சிறிது நேரமே பழகிய போதிலும் அவனுடைய வீரத்தை ஓரளவு அறிந்து கொண்டுள்ளான் குகன். எனவே, அவனைப் புலிக்கு ஒப்பிடுகிறான். ஆனால், இராமனுடைய அமைதியே வடிவான முகமும் பேச்சும் குகனை ஓரளவு ஏமாற்றிவிட்டன போலும்! 'முன்னவன் என்றாவது இந்தப் பரதன் நினைந்து பார்த்தானா?' என்று அவன் கூறும்பொழுது இராமன் மேல் இரக்கம் கொண்டவனுடைய மனப்பான்மையை நாம் அறிகிறோம். 'இந்த ஒரு காரணத்திற்காகவேனும் அவனை விட்டுவிடக் கூடாதா?' என்ற ஓசைப் பொருள் அச்சொற்களில் ஒலிக்கின்றது. ஆனால், 'இலக்குவன் இருக்கிறான் என்பதைக் கூடவா பரதன் மறந்துவிட்டான்!' என்று வியப்படைகிறான் குகன்; 'இலக்குவனுக்குப் பதில்கூற இப்படை முழுவதும் போதாதே!' என்று நினைக்கிறான்.

அண்ணனை வென்றுவிடலாம் என்று பரதன் மனப்பால் குடித்துக் கொண்டு ஒரு வேளை வந்திருக்கலாம். ஆனால், இலக்குவனை அவன் நினைத்துப் பார்க்கவில்லை போலும்! 'பின்னவன் நின்றனன்' என்ற சொற்களில் ஓர் அழகு விளங்குகிறது. அந்த இலக்குவனும் எந்த நேரத்தில் எந்தத் தீங்கு வரும் என்று எதிர் பார்த்தே எப்பொழுதும் போர்க்கோலத்துடன் நிற்கிறான். அமர்ந்தோ, உறங்கியோ இருந்துவிட்டால், எழுந்து போருக்குத் தயார்

செய்து கொள்ளக் காலம் தாழ்க்கும் என்று அஞ்சிப் போலும் எப்பொழுதும் நின்று கொண்டே இருக்கிறான்! அவனைப் குறைத்து மதித்து விட்டே இந்தப் பைத்தியக் காரப் பரதன் வந்துள்ளான் என்று நினைக்கிறான் குகன். இலக்குவன் வன்மையைக் குறைத்து மதித்துவிட்ட பரதனது அறியாமையை நினைக்கும் பொழுது குகனுக்கு நகைப்புக்கூட வருகிறது. ஆனால், அடுத்த கணத்தில் அது சினமாக மாறுகிறது. பரதனுடைய உடன் பிறந்தவர்களே இலக்குவனும் இராமனும். இராமனிடம் அன்பில்லா விட்டாலும் இலக்குவன் வன்மையைக் குறைத்து மதித்து விட்டாலும் மதித்து விடட்டும். அதனால் தன்னையும் தன் படை வன்மையையும் குறைத்து மதிக்கப் பரதனுக்கு உரிமை ஏது என்று சீறுகிறான் குகன். தம்பியாகிய பரதன் இராமனையும் இலக்குவனையும் எவ்வாறு வேண்டுமாயி னும் மதிக்கட்டும். அது அவனுடைய பொறுப்பு. ஆனால், "என் இவன் என்னை இகழ்ந்தது? இவ்வெல்லை கடந்து அன்றோ?" என்கிறான் குகன். தன்னுடைய இருப்பையும், தான் இராமனுக்கு உற்ற துணைவனாய் இருப்பதையும் பரதன் அறியவில்லை போலும்! அறிந்திருந் தால், இவ்வாறு துணிந்து புறப்பட்டு வருவானா? பரதன் படையுடன் புறப்பட்டுவிட்டமையின் தன்னை இகழ்ந்து விட்டதாகவே நினைக்கிறான் அவ்வீரனாகிய வேடன். ஒருவேளை பரதன் அதிக வலிமை பெற்ற மன்னவனாயின், குகன் போன்ற சிற்றரசன் இருப்பதைப் பொருட்படுத்தா மல் புறப்பட்டு வரலாம். ஆனால், எத்துணை வலியுடைய ராயினும், 'காலம் அறிதல், இடன் அறிதல்' முதலியன அவரிடம் அமையாவிடின் பிழைதான் எஞ்சும்.

"கால்ஆழ் களரில் நரிஅடும் கண் அஞ்சா
வேல்ஆள் முகத்த களிறு."

(திரு. 500)

என்ற குறள் இடம் அறிதலின் சிறப்பைத்தானே கூறுகிறது? பாகனுக்கு அடங்காத யானை கூடக் கால்கள் அமிழ்ந்து

போகக் கூடிய சேற்றுநிலத்தில் நரியால் வெலல்ப்படுமாம். இந்த அடிப்படை உண்மை கூடவா பரதனுக்குத் தெரியவில்லை? அயோத்தியில் யானை போல இருக்கும் பரதன் கூடக் குகனுடைய எல்லையில் பூனையாக அல்லவா மாறிவிடுவன்? இதனை வலியுறுத்தவே போலும் குகன், "என்னை இவன் இகழ்வது இந்த எல்லையைக் கடந்து அன்றோ?" என்று கூறுகிறான்! பரதனாகிய மன்னவனுக்கு அரசியலின் அடிப்படைச் சூழ்ச்சிகள் கூடத் தெரியவில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான் குகன்.

பரதனைப்பற்றிக் குகன் கொண்ட இந்த முடிவுகள் பொதுவாக அரசர்களைப்பற்றியே சில தவறான எண்ணங்களை அவன் மனத்தில் தோற்றுவித்து விட்டன. அரசராக வருபவர் ஏனைய மனிதரினின்றும் தம்மை வேறு பிரித்துக் கொண்டு தம்மை உயர்ந்தவராக மதித்துக்கொள்ளுகின்றனர். "மன்னர்க்கு நீதி ஒரு வகை; ஏனை மாந்தர்க்கு நீதி ஒருவகை," (பாஞ். சபதம்) என்று வியாழ முனிவன் கூறியதை அவர்கள் உண்மையிலேயே நம்பிவிட்டார்கள். எனவே, ஏனைய மனிதர்கட்குரிய சட்டதிட்டங்களும் கடமைகளும் தமக்கு இல்லை என்றுகூடக் கருதத் தலைப்பட்டனர். சாதாரண மனிதர்கள் செய்வதற்கு அஞ்சக் கூடிய செயல்களை அரசர்கள் துணிந்து செய்வதன் கருத்து யாதாய் இருக்கும்? புண்ணியம், பாவம் என்ற இரண்டு உண்டு என்பதும், அவை தமக்கும் உண்டு என்பதும் இவ்வரசர்கட்குப் படுவதில்லை போலும்! அதுதான் போகட்டும் என்றால், பிறரால் பழிக்கப்படும் செயல்களைச் செய்யக் கூடாது என்பது கூடவா இவர்கட்குத் தெரியாமற்போய் விட்டது?

> **"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
> **சான்றோர் பழிக்கும் வினை"**

(திரு. 656)

என்ற குறளின் கட்டளை அரசர்கட்கு இல்லையா? ஆம்! சாதாரண மனிதராக உள்ளவரையில் ஒருவர் கடைப்

பிடித்து ஒழுகும் குறிக்கோளும் பண்பாடும், அதிகாரம் கைக்கு வந்த பொழுது மறந்துவிடுதல் உலக இயற்கைதான் அந்த நியதியைத்தானே குறளும் பேசுகிறது?

''எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுஆகும் மாந்தர் பலர்.''

(திரு. 514)

என்ற குறளில் எத்துணை நல்லவர்களாயினும், அதிகாரம் கையில் கிடைத்தபின் மனம் மாறிவிடுதல் உலக இயல்பு என்பது கூறப்பட்டுள்ளது. இதனைத் தான் கூனியும் கைகேயிக்கு எடுத்துக் கூறுகிறாள்.

''அறம்நி ரம்பிய அருளுடைய அருந்தவர்க் கேனும்
பெறல்அ ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்.''

(கம்பன்—1476)

பல பெரியார்களாலும் எடுத்துக் கூறப்பட்ட இந்த உண்மை அவர்கள் அனுபவ ஞானத்தால் கண்ட ஒன்று தானே! எனவே, பரதனும் முடி தனக்கு உறுதியானவுடன் பழி பாவம் என்பவற்றைக் காற்றிற் பறக்கவிட்டுவிட்டான் என்று கருதுகிறான் குகன். இந்த நினைவில் குகன் தானும் ஓர் அரசன் என்பதைக்கூட மறந்துவிட்டான். ஆம்! வேட்டுவர் குலத்தில் வந்து பிறர் நாகரிகம் என்று கருதுவதை அறியாத அவனுக்குப் பழி பாவம் என்பவை மிகவும் பெரியனவாகக் காட்சி அளிக்கின்றன. ஆனால், 'நாகரிகம் முதிர்ந்தவர்களிடம் பழி பாவம் என்ற இரண்டின் மாட்டும் கொண்ட அச்சம் இராது போலும்!' என்று குகன் அன்று வருந்தினான்! இன்றும் அது உண்மையாய் இருத்தலைக் காண்கிறோம். நாகரிகத்தில் தம்மை மேம்பட்டவர் என்று கூறிக்கொள்ளும் வெள்ளை இனத்தார் தாமே இன்று இரண்டையும் கண்டு அஞ்சாமல் வாழ்க்கை நடத்துகின்றனர்? இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்த குகன் இதோ பேசுகிறான்.

"பாவமும் நின்ற பெரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண்ணுலகு ஆள்பவர் எண்ணாரோ?
ஆவது போகஎன் ஆள்வினைத் தோழமை தந்தான்மேல்
போவது சேனையும் ஆருயி ரும்கொடு போயன்றோ?"
(கம்பன்—2319)

இப்பாடல்கள் பலவற்றிலும் வரும் ஒரு கருத்து நோக்குதற்கு உரியது. "செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன செல்லாவோ? மன்னவர் நெஞ்சினில் வேடர் விடும் சரம் வாயாவோ? என்ற சொற்கள் மூலம் குகனுடைய எண்ணம் ஒருவாறு புலனாகிறது. பரதன் தன்னையும் தன் படையையும் வேடர்கள் என்ற ஒரு காரணத்தால் குறைத்து மதித்துவிட்டான் என்ற எண்ணம் குகன் மனத்தில் வேர் ஊன்றிவிட்டது. எனவே, அவன் அடிக்கடி, 'வேடர்கள் கூட அரசர்களைக் கொல்ல முடியும்,' என்று கூறுகிறான். அன்றியும், அரசனாய்ப் பிறந்து அச்செல்வத்திற்கு உரிமை பூண்டிருந்த இராமனே தன்னை மதித்துத் தம்பி என்று உரிமை கொண்டாடுகையில், அரசச் செல்வத்தைப் பறித்துக் கொண்டு அதனால் அரசப் பதவியை அடைந்ததாகத் தன்னால் கருதப்பட்ட பரதன் தன்னை இகழ்ந்து படையுடன் புறப்பட்டதைக் குகனால் பொறுக்க முடியவில்லை. எனவே, மாறி மாறி, 'அவன் அரசனாகவே இருப்பினும், என் அம்புகள் அவனைக் கொல்லும்,' என்று கூறுகிறான் குகன்.

ஆற்றின் எதிர்க்கரையில் நிற்கும் பரதனுடைய சேனையைப் பார்க்கப் பார்க்கக் குகனுடைய கோபம் பன் மடங்காகப் பெருகுகிறது. இராமனையும் பரதனையும் மீட்டும் மீட்டும் தன் மனத்துள் ஒப்பிட்டுப் பார்க்கிறான் அப்புள்ளினூர் வேந்தன். ஆட்சி செலுத்தும் நாட்டை விருப்புடன் தந்துவிட்டுக் காடு புகுந்த இராமன் எங்கே, அவ்விராமனை இங்கும் இருக்க ஒட்டாமல் படை கொண்டு துரத்தும் பரதன் எங்கே! தன்னுடைய நாட்டில் இராமன் இருத்தல் கூடாது எனப் பரதன் இராமனைக் காட்டிற்கு

அனுப்பியது சரி. அனுப்பியது சரியானாலும் தவறானாலும் அது அண்ணன் தம்பி இருவரிடையே நடைபெற்ற போராட்டமாகலின் அது பற்றிக் குகன் கவலைப்படவில்லை. 'காட்டிற்குப் போய்விடு!' எனக் கட்டளை இட்ட தாயைவிடக் கொடியவன் போலும் இப்பரதன்! தாயாவது இராமனைக் காட்டில் வாழ அனுமதித்தாள். மகன் அக்காட்டையும் விட்டுத் துரத்த முடிவு செய்து வந்துவிட்டானே! ஆனால், காடு யாருடையது? இந்தக் காட்டிலும் இராமன் இருக்கக் கூடாது என்று கூறப் பரதனுக்கு என்ன உரிமை வந்துவிட்டது? அவனுடைய அதிகாரத்துக்கு உட்படாதது மட்டுமன்று இக்காடு! வேடர்கள் ஆணைக்கு உள்ளடங்கி இருக்கும் பகுதியாகும் இக்காட்டில் அல்லவா இராமன் வந்து தங்கினான்? இதனை மனத்துள் கொண்ட குகன், "நாம் ஆளும் காடு" என்று கூறுகிறான். இதனை அடுத்துக் குகனுக்கும் புதிய ஓர் ஆராய்ச்சி பிறக்கிறது.

இலக்குவன் குகனிடம் பேசினான்; இராமன் காடு வர நேர்ந்த வரலாற்றை விரிவாக எடுத்துக் கூறினான். அதனைக் கேட்ட குகனுக்கு இராமன்மேல் அன்பு பிறந்தது; அவனை (இலக்குவன் கூற்றுப்படி) வஞ்சித்த பரதன் மேல் வெறுப்பும் பிறந்தது. ஆனாலும், ஒரு தந்தையின் மக்களான இராமன் பரதன் இவருள் நடைபெற்ற உரிமைப் போராட்டத்தில் தலையிட அவன் விரும்பவில்லை. நியாயமும் உரிமையும் இராமன்பால் உள்ளன எனினும், தன்னை இராமன் ஒன்றும் வேண்டவில்லையன்றோ? அவ்வாறு இருக்கக் குகன் எவ்வாறு தலையிடுவது? மேலும், குகனுடைய ஆட்சி எல்லைக்கு அப்பால் உள்ள நாட்டில் நடைபெற்ற போராட்டமாகும் இது. எனவே, எவ்வளவு தான் கருணை ஒரு புறம் இருப்பினும், குகன் ஒன்றும் செய்ய இயலாமல் இருந்துவிட்டான். ஆனால், இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. பரதனால் துரத்தப்பட்ட இராமன் குகனுடைய

எல்லையில் இருக்கிறான். எனவே, தன்னுடைய நாட்டில் விருந்தினனாய்ப் புகுந்த அவனைக் காப்பது குகன் கடமை. அதனோடு நில்லாமல் இராமனுக்குத் தீங்கிழைத்த பரதனும் குகனுடைய எல்லைக்குள் வந்து விட்டான், இராமனுக்கு மேலும் தீங்கு செய்யும் நோக்குடன். இந்த நிலையில் குகன் தன் கடமையை நன்கு உணர்கிறான்.

இராமன் தன்பால் வந்ததிலிருந்து அவனுக்கு எவ்வாறாயினும் அயோத்தி அரசை மீட்டுத் தரவேண்டும் என்று குகன் விரும்பினான். சந்தர்ப்பம் சரியாக இன்மையின், அவன் எண்ணம் ஈடேறவில்லை. ஆனால், பரதன் தனது எல்லையில் இருக்கும்போது அவன் எதிர்பார்த்த சூழ்நிலை ஏற்பட்டு விட்டதாகக் குகன் கருதுகிறான். இந்த நிலையில் பரதனுடன் போர் தொடுத்து அவனை வென்றால் இராமன் கூடக் குகன்பால் தவறு கூற முடியாது. பரதனே வலுச் சண்டைக்கு வந்திருக்கும் பொழுது குகன் அவனுடன் போர் தொடுப்பதில் தவறு இல்லை. அன்றோ? அறமே வடிவான இராமன் நாட்டை இழந்தான்; மறமே வடிவான பரதன் அதற்குக் காரணனாவான். இப்போது அந்தப் பரதன் குகன் ஆளுகைக்குட்பட்ட எல்லையில் வாழும் இராமனைத் துரத்த வந்திருக்கிறான். குகன் எல்லைக்குள் வரப் பரதனுக்கு உரிமை ஏது? எனவே, குகன் இதனையே ஒரு வாய்ப்பாக வைத்துக் கொண்டு இராமனுக்கு அவனது அயோத்தி அரசை மீட்டுத் தர விரும்புகிறான்; அதிலும், 'இராமன் அரசை இழந்தான்; ஆனால், வேடர்கள் அவ்வரசை மீட்டுத் தந்தார்கள்,' என்ற புகழையும் அதன் மூலம் அடைய விரும்புகிறான். இத்தனைக் கருத்துக்களும் கம்ப நாடனுடைய ஒரு பாடலைப் படிக்கும்பொழுது தோன்றுகின்றன.

''ஆடு கொடிப்படை சாடி அறத்தவ ரேஆள
வேடு கொடுத்தது பார்எனும் இப்புகழ் மேவீரோ!
நாடு கொடுத்தஎன் நாயக னுக்குஇவர் நாம்ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி எடுத்தது காணீரோ?''

(கம்பன்—2324)

எதிர்க் கரையில் காணப்படும் படை மிகப் பெரிது என்பது அப்படை எழுப்பும் துகள் அல்லது தூசி யினாலேயே அறிந்து கொள்ள முடிகிறது. என்றாலும், ஒரு தூய வீரனுக்கு அது கண்டு அச்சம் தோன்றுவதே இல்லை. பகைவனது படைப் பலத்தைத் குறைத்து மதிப்பது தீமை என்பதும் அறநூல் கூறிய விதி.

"வினைவலியும், தன்வலியும், மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்."

(திரு. 471)

இத்தகைய அடிப்படையான உண்மையைக் குகன் மறந்து விட்டானா? மறந்து விடல்லை. பரதனின் படை வலிமையை நன்கு அறிந்து கொண்டுள்ளான். எனினும், இரண்டு காரணங்களால் அவர்களை வெல்ல முடியும் என்று நினைத்து முடிவு செய்கிறான். ஒன்று, பரதன் தன்னுடைய எல்லையைத் தாண்டி இப்பொழுது குகனுடைய" எல்லை யில் இருக்கிறான். எனவே, குகனுக்கு இது ஒரு வாய்ப்பு. இரண்டாவது, இரு படைகட்கும் நடுவே இயற்கை அரணாய் அமைந்துள்ளது கங்கையாறு. எத்துணைப் பெரிய படையைப் பரதன் பெற்றிருந்தாலும், கங்கை யாற்றைத் தாண்டாமல் யாது செய்ய இயலும்? கங்கை யைத் தாண்ட வேண்டும் எனில், அது குகனுடைய படகு இல்லாமல் இயலாதன்றோ? இவ்விரண்டு காரணங்களாலும் பரதனுடைய படையை எவ்வாற்றானும் வென்று விடலா மென்று குகன் நினைக்கிறான்.

"செஞ்சரம் என்பன தீஉமிழ் கின்றன செல்லாவோ?"

(2316)

"ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?'

(2317)

'என்இவன் என்னை இகழ்ந்ததுஇவ்
வெல்லை கடந்தன்றோ?" (2318)

"மருந்தெனின் அன்று உயர் வண்புகழ்
கொண்டது மாயேனோ? (2319)

"தும்பியும் மாவும் மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பியல் தாரிவர் வாள்வலி கங்கை கடந்தன்றோ?"
(2020)

என்ற இவ்வடிகள் பரதனுடைய படை வன்மையைக் குகன் நன்கு அறிந்திருந்தான் என்பதையும், கங்கை குறுக்கே இருத்தலின் இப்படை வலி பயனற்றுப் போவதையும் அறிந்திருந்தான் என்பதையும் அறிவிக்கின்றன.

இவ்விரண்டு காரணங்களுடன் குகனுக்குத் தன்னிடத்தும் தன் படையினிடத்தும் மிகுந்த நம்பிக்கை இருந்ததையும் அறிய முடிகிறது. பரதனுடைய படை எத்துணைப் பெரிதாயிருப்பினும், இராம இலக்குவர்களுடைய வில்லாற்றலின் முன்பு இப்படை ஒரு போதும் எதிர்த்து நிற்க இயலாது எனக் கூறுகிறான். அதனுடன் நிறுத்தாமல், மேலே அவன் பேசுவதிலிருந்து அவனுடைய தன்னம்பிக்கையை நாம் அறிய முடிகிறது. 'அவர்கட்கு இப்படை ஒரு பொருட்டன்று என்பது ஒரு புறம் இருக்கட்டும். தேவர்களே எதிர்த்துவரினும் அவர்களுடைய குடரைச் சூறையாட மாட்டேனா யான்?' என்று கூறும் முறையில்

"போன படைத்தலை வீரர் தமக்குஇரை போதாஇச்
சேனை கிடுக்கிடு; தேவர் வரின்சிலை மாமேகம்
சோனை படக்குடர் சூறை படச்சுடர் வாளோடும்
தானை படத்தனி யானை படக்கடை சாயேனோ"
(கம்பன்—2322)

அன்றியும்,

"நின்ற கொடைக்கைஎன் அன்பன் உடுக்க நெடுஞ்சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தைஎன் அம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை
கொண்டுஓடித்
துன்று திரைக்கடல் கங்கை மடுத்துஇடை தூராதோ?"
(கம்பன்—2323)

என்று குகன் கூறும் பொழுது தன் வலிமையின் மேல் அப் பெருமகன் கொண்டிருந்த பெருநம்பிக்கை வெளியாகிறது. மேலும், அவனுடைய வெற்றி உறுதி என்ற எண்ணத்தின் மற்றொரு பகுதியும் இப்பாடலில் வெளியாகிறது.

எத்துணைப் படை வலிமை உடையவராயினும் அற முறை பிறழ்ந்தவர்கட்கு வெற்றி இல்லை என்பது தமிழர் கண்ட பேருண்மை. இக்கருத்தை **மருதன் இளநாகனார்** என்ற புலவர் புறநானூற்றில் ஒரு பாடலில் நன்கு விளக்கு கிறார்:

''கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல்மறவரும்என
நான்குடன் மாண்டது ஆயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்.''

(புறம், 55)

'கோபத்துடன் கொல்லும் இயல்புடைய யானைப் படையுடன், வேகமாகச் செல்லும் செருக்கை உடைய குதிரைப் படையும், நெடிய கொடி கட்டிய பெரிய தேர்ப்படையும், நெஞ்சு வலிமையுடைய காலாள் படையும் மிகுதியாகப் பெற்றிருப்பினும், ஓர் அரசனுடைய வெற்றி அறத்தையே அடிப்படையாகக் கொண்டது,' என்கிறார் புலவர் இப் பாடலில். இதே காரணத்தைக் குகனும் குறிப்பால் கூறுகிறான். 'என் அன்பன் உடுக்க நெடுஞ்சீரை அன்று கொடுத்தவள் மைந்தர்' என்று அவன் பரதனைக் குறிப்பிடுவது கூர்ந்து நோக்கற்குரியது. என்று இராமனுக்கு மரவுரி கொடுத்துவிட்டு அவனுடைய அரசைப் பறித்துத் தன்மகனாகிய பரதனுக்குக் கைகேயி தந்தாளோ, அன்றே அயோத்தி அரசில் அறம் விடை பெற்றுக்கொண்டது என்று குகன் நினைக்கிறான். ''பாவமும் நின்ற பெரும் பழியும்...... ஏவமும் என்பவை மண்ணுலகு ஆள்பவர் எண்ணாரோ?'' என்று முன்னரும் குகன் குறிப்பிட்டது

பரதனைக் குறித்தேயன்றோ? எனவே, பரதனுடைய கட்சியில் அறமில்லையாகலின், அவனுக்கு வெற்றி கிட்ட முடியாது என உறுதியாக நம்புகிறான் குகன். இதனாலேயே 'தும்பியும் மாவும் மிடைந்த பெரும்படை' பரதனிடம் இருக்கிறது என்று அறிந்தும், தன்னிடம் யானை குதிரை முதலிய படைகள் இல்லை என்பது தெரிந்திருந்தும் குகன் பரதனை வென்றுவிட முடியும் என்று கருதுகிறான்.

'ஏழுனை உற்றிடில் ஏழு கடற்படை என்றாலும்
ஆழுனை யில்சிறு கூழெனு இப்பொழுது ஆகாதோ?''
(கம்பன்—2352)

என்று கூறும் குகனுடைய நெஞ்ச உறுதி போற்றற்குரியது.

பரதனைப்பற்றிக் குகன் இம்முறையில் நினைந்து பேசிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் எதிர்க்கரையில் பரதனும் சுமந்திரனும் பேசிக்கொண்டிருக்கின்றனர். புதியவனாய் வந்துள்ள பரதனுக்குக் 'குகனைப்பற்றி அறிமுகம் செய்து வைக்கிறான் சுமந்திரனாகிய அமைச்சன்.

''கங்கை இருகரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற்கு உயிர்த்துணைவன் உயர்
தோளான்
வெங்கரியின் ஏறுஅனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்குஅலரும் நறுந்தண்தார்க் குகன்என்னும்
குறியுடையான்

''கல்காணும் திண்மையான் கரைகாணாக் காதலான்
அல்காணிற் கண்டுஅனைய அழகுஅமைந்த மேனியான்''
(கம்பன்—2327, '28)

குகனைப்பற்றிச் சுமந்திரன் தந்த குறிப்புகளில் மிகச் சிறந்தது 'இராமனுக்குக் குகன் உயிர்த்துணைவன்', என்பது தான். இந்த ஒரு குறிப்பே பரதனை அவன் பக்கலில்

கொண்டு சேர்க்கப் போதுமானதாய் இருந்தது. தன்னுடைய நிலைமைக்குக் குகனைத் தான் சென்று காண்பது முறையா என்றுகூட ஆயாமல், பரதன், 'யானே சென்று அவன் காண்பேன்' என்று புறப்பட்டு, ஆற்றின் கரையோரம் வந்து விட்டான். குகன் தன்னை வந்து காணு முன்னர்த் தானே அவனைச் சென்று காணவேண்டும் என்று பரதன் புறப்பட்டுவிட்டான். அருமைத் தம்பி சத்துருக்கனனும் உடன் வந்துவிட்டான். ஆனால், கங்கை ஆறு தடை செய்துவிட்டது. அவ்வாற்றைக் கடந்து குகனைக் காண வேண்டும். எனினும், அதுவும் குகனுடைய உதவி இல்லாமல் இயலாததாய் இருந்தது. எனவே, பரதனும் இளவலும் ஆற்றின் எதிர்க்கரையில் நின்றுவிட்டனர். இக்கரையில் நிற்கும் குகன் எதிர்க்கரையில் நின்ற சோதரர்களை இப்பொழுதுதான் கண்களால் தெரியக் காண்கிறான்.

''நின்றவனை நோக்கினான் திருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி எயினர்கோன் துண்ணென்றான்.''
(கம்பன்—2330)

பரதனைப்பற்றி இத்துணை வன்கண்மையுடன் குகன் பேசினது அவனை நேரே காணும் முன்பே என்பது இப்பொழுது நன்கு தெரிகிறது. இலக்குவன் சொற்களால் வரையப் பெற்ற பரதவுருவமே இதுவரை குகனுடைய மனத்தின் ஆழத்தில் பதிந்திருந்தது. பரதன் இராமனை விரட்டியதுடன் அமையாது படை கொண்டும் வருதல் போல எதிர்க்கரையில் ஒரு படை வந்தும் தங்கிவிட்டது. எனவே, குகன் தன் எண்ணம் சரியானது என்று நினைத்து இவ்வளவு கடுமையாகப் பேசிவிட்டான். ஆனால், இப்பொழுது எதிர்க்கரையின் ஓரத்தில் வந்து நிற்கும் பரதனை நேரே கண்டுவிட்டான். 'இவன்தான் பரதன்,' என்று அவனிடம் யாரும் கூறத் தேவை இல்லை. இராமனுடைய வடிவம் அச்சு வார்த்தது போல நிற்கும் பரதனைக் கண்டு பிடிக்கக் குகனுக்கு நீண்ட நேரம் ஆக

வில்லை. பரதன் என்று அறிந்த பிறகுதான் அவனைக் கூர்ந்து நோக்கினான் குகன். என்ன வியப்பு! படை எடுத்து வருகிறவனுடைய தோற்றமாக இல்லை பரதனுடைய கோலம். குகனுடைய கற்பனையில் உறைகின்ற பரதனுக்கும் இப்பொழுது எதிர்க்கரையில் நிற்கும் பரதனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தொடர்பு இல்லாதது மட்டுமா! முரணான பண்புகள், பரதனுடைய வடிவமாக இங்குக் காட்சி அளிக்கின்றன. இந்த முதற்காட்சியே குகனை வெலவெலத்துப் போகுமாறு செய்துவிட்டது. இதனைத்தான் கவிஞன் 'எயினர் கோன் துண்ணென்றான்' என்ற சொற்களால் பெற வைக்கிறான்.

குகன் தன்னுடைய கண்களாற்கண்ட பரதனுடைய வடிவும் செயலும் இதோ தரப்படுகின்றன கவிஞனுடைய சொற்களால்.

''வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை
நற்கலையில் மதிஎன்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின்று இடைவீழ விம்முற்று நின்றுஒழிந்தான்.

''நம்பியும்என் நாயகனை ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்; தவவேடம் தலைநின்றான்
துன்பம்ஒரு முடிவு இல்லை; திசை நோக்கித்
தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு?''
(கம்பன்—2331, '32)

மரவுரியை ஆடையாய் அணிந்து தூசு படிந்த உடலை உடையனாய்க் கலையிழந்த மதிபோன்ற முகத்தினனாய்க் கல்லும் உருகும் வண்ணம் துயர் உறுகின்ற பண்பினனாய் உள்ள பரதனைக் கண்ணுற்ற குகனுடைய வில் தானே கீழே வீழ்ந்துவிட்டது. அவனையும் அறியாமல் இந்தப் பரதன் மேல் அன்பு பிறந்தது; விம்மத் தொடங்கிவிட்டான். பரதனுடைய வடிவம் இராமனைக் குகனுக்கு

நினைவூட்டியது. அணித்தே நிற்கும் சத்துருக்கனனுடைய வடிவம் இலக்குவனை ஒத்தேயிருக்கிறது. இருவரும் இராமன் சென்ற திசை நோக்கித் தொழுகின்றனர். உடனே குகனுக்குத் தன் செயலில் நாணம் பிறந்துவிட்டது. இத்தகைய பண்பாடு உடைய பரதனிடத்து ஐயங்கொண்டு படைகளை நோக்கிப் பேசிய தன்மேல் குகனுக்கே வருத்தம் உண்டாகிறது. இதுவரை பேசிய அனைத்திற்கும் கழுவாய் காண்பான் போலக் குகன், 'எம்பெருமான் பின் பிறந்தார் தவறு செய்வார்களோ?' என்று கூறுகிறான். பரதனைத் தூரத்தே இருந்து கண்ட அளவிற் பேசிய சொற்களாகலின், இவை மன்னித்தற்கு உரியனவே. குகன் பரதன்மேல் கொண்ட ஐயம் இன்னும் முற்றிலும் நீங்கிவிடவில்லை.

பரதன் உயர்ந்த பண்புடையவன் என்பது இன்னும் குகனுடைய சொற்களில் வெளிப்படவில்லை. அவனால் அறியப்பட்ட இராமனைப்பற்றியே அவன் மீட்டும் பேசுகிறான். 'இராமன்பின் பிறந்தார் தவறு செய்வார்களா?' என்று கேட்கையில் பரதனைக்காட்டிலும் இராமன் புகழே பேசப்படுதலை அறியலாம். பரம்பரையாக அரச உரிமை பெற்றிருந்தமையின், ஒரு மனிதனைப்பற்றி விரைவில் முடிவு செய்துவிட விரும்பவில்லை குகன். பரதனைப் பற்றிய தன் எண்ணங்களை அவன் மாற்றிக்கொண்டாலும், முழுவதும் அதை நம்பி நடந்துவிட அவன் விரும்பவில்லை; எனவே, தன் படைகளை நோக்கிப் புதியதொரு கட்டளை இட்டுச் செல்கிறான். இது வரையில் பகைவன் என்று கருதப்பட்ட பரதனுடைய கண்ணீரை மட்டும் கண்டு தன் முடிவை மாற்றிக்கொள்வது அரசனுக்கு அழகன்று. எனவே, குகன் கூறுகிறான்:

"உண்டு இடுக்கண் ஒன்றுஉடையான்
உலையாத அன்புடையான்
கொண்டதவ வேடமே
கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்

கண்டுணர்ந்து பெயர்கின்றேன்;
காமின்கள் நெறி'' என்னாத்
தண்துறையின் நாவாயின்
ஒருதனியே தான்வந்தான்.

(கம்பன்—2333)

'யான் பரதனுடைய குறிப்பெல்லாம் கண்டு வருகிறேன். அவ்வாறு வருகிற வரையில் நீங்கள் வழிகளை எல்லாம் காவல் செய்து நில்லுங்கள்,' என்று தன் படைகட்குக் கட்டளை இட்டுவிட்டுத் தான் மட்டும் தனியே வருகிறான்.

இதனை அடுத்துள்ள பாடல் ஆழ்ந்து நோக்கற்கு உரியது. பாடலின் பொருளைப் பலர் பலவாறு திரித்துத் தத்தம் மனநிலைக்கு ஏற்பக் கூறுகின்றனர். இப்பாடலில் பரதன், குகன் என்ற இருவரையும் நம் எதிரே நிறுத்துகிறான் கவிஞன்; இவர்களுடைய அன்பின் ஆழத்தை நமக்குக் காட்டுகிறான். இவ்விருவருள் யார் சிறந்தவர் என்று நாம் கூற முடியாதபடி செய்துவிடுகிறான் கவிஞன். நடுவு நிலைமையோடு பாடலைக் காண்க.

''வந்துஎதிரே தொழுதானை வணங்கினான்; மலர்இருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனும்அவன்
அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத் தழுவினான் தகவுஉடையோர்
சிந்தையினும் சென்னியினும்வீற்றிருக்கும் சீர்த்தியான்.''

(கம்பன்—2334)

முதற்பாடலில் 'நாவாயில் ஒரு தனியேதான் வந்தான்' என்று முடியும் அடியைத் தொடர்ந்து இந்த அடி வருதலை நன்கு கவனித்துப் பொருள் கூற வேண்டும். குகன், எதிரே வந்து, இராமன் சென்ற திசையை நோக்கித் தொழுது கொண்டு நிற்கின்ற பரதனை வணங்கினான். மலரின்மேல் வாழ்கின்ற நான்முகனும் தன்னை வணங்கத் தகுந்த அப் பரதனும் அக்குகனுடைய அடியில் வீழ்ந்து வணங்கினான்.

அவ்வாறு வணங்கிய பரதனை, மேலோர் சிந்தையிலும் சென்னியிலும் தங்கும்படியான மிக்க புகழையுடைய குகன் தந்தையைக்காட்டிலும் களி கூரத் தழுவிக்கொண்டான். இந்தப் பொருளை மனத்தில் நிறுத்திப் பாடலை மீட்டும் படித்துப் பார்த்தால் இப்பொருள் எவ்வளவு நேராகச் செல்கிறதென்பது நன்கு விளங்கும்.

இவ்வளவு நேரான பொருளை மாற்றி, பரதன் காலில் குகனை விழுமாறு செய்து மகிழ்கின்ற பெரியார் களும் உண்டு. அப்பெரியார்கட்கு வேடனாகிய குகன் காலில் திருமாலின் பகுதியாகிய பரதன் வீழ்ந்து வணங்குவது பிடிக்கவில்லை. பாவம்! தங்களுடைய காதற் பித்தைப் பரதன் குகன் ஆகியவர்களிடங்கூட ஏற்றிக் காணும் அவர்கள் கவிதையை அனுபவிக்கப் பிறந்தவர்கள் அல்லர்; அதற்கு மறுதலையாகத் தம்மைக் கவிதையில் ஏற்றி அங்கும் தம்முடைய விருப்பு வெறுப்புகளையே அனுபவிக்கப் பழகியவர்கள். ஆனால், மேலே கூறிய நேரிய பொருளைக் கூறியவர்களும் உண்டு என்பதை மறத்தல் ஆகாது.

இங்ஙனம் பரதனைக் குகன்தான் தழுவிக் கொண் டான் என்பதை அடுத்த பாடலின் முதலடியும், 'தழுவின புளிஞர் வேந்தன்' என்று வலியுறுத்துகிறது. தழுவிய குகன் மெள்ளத் தன் மனத்தில் உள்ள ஐயத்தை அகற்றிக் கொள்ள விரும்புகிறான்; ஆனால், மிகுந்த பண்பாட் டுடன், 'எய்தியது என்னை?' என்றுதான் கேட்கிறான். அதற்குப் பரதன் விடை கூறுவது குகனுடைய மனத்தின் மூலையில் ஒளித்து நிற்கும் ஐயத்தையும் நீக்கிவிடுகிறது.

''முழுதுஉலகு அளித்த தந்தை முந்தையோர்
முறையினின்றும்
வழுவினன்; அதனை நீக்க மன்னனைக்
கொணர்வான்'' என்றான்.
(கம்பன்—2335

இந்த விடையைக் கேட்ட குகன் எல்லையற்ற வியப்படைந்தவனாகி, மண்ணில் வீழ்ந்து வணங்கிப் பரதனுடைய கால்களைத் தழுவிக் கொள்கிறான். தூய்மையான அன்பினாலும் ஆர்வத்தாலும் குகன் இப்பொழுது பேசத் தொடங்குகிறான்.

''ஐயனே, தாயின் வரத்தால் தந்தை உதவிய இந்த உலக அரசைத் தீவினை என்று கருதி ஒதுக்கிவிட்டு, அண்ணனை அடையாத கவலையை முகத்தில் காட்டிக் கொண்டு இங்கு வந்தனை என்றால், புகழை உடையோய், ஆயிரம் இராமர்கள் கூடினாலும் உனக்கு ஒப்பாவார்களா? ஏழை வேடனாகிய யான் எவ்வாறு உன் புகழைக் கூறப் போகிறேன்! சூரியனுடைய ஒளியானது ஏனைய ஒளிகள் அனைத்தையும் விழுங்கித் திகழ்வதுபோல, (தசரதன், இராமன் உள்ளிட்ட) இரகு குல வேந்தர்கள் பெருமை அனைத்தையும் உன் புகழாக்கிக் கொண்டாய்!'' என்கிறான்.

''தாய்உரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!

''என்புகழ் கின்றது ஏழை எயினனேன்! இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் பெருமை எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத்து உரவுத் தோளாய்!''

(கம்பன்—3337, '38)

இப்பரந்த உலகில் பண்புடையாளரை எண்ணத் தொடங்கினால் அவருள் முதலில் வைத்து எண்ணப்பட வேண்டியவன் பரதனாவன். இராமனும் பெற முடியாத பெருமையைக் குகன் பரதனுக்குத் தந்து மகிழ்கிறான்.

அதிலும், இதுவரையில் இலக்குவனுடைய சொற்களை நம்பிப் பரதனை வேறு விதமாக எண்ணியிருந்த குகன் முற்றிலும் மாறிவிட்டான்; பரதனுடைய பண்பாட்டை நேரே கண்டுவிட்டான்.

''வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை;
யாண்டும் அஃதுஒப்பது இல்.''

(திரு. 363)

என்ற அறநூல் இல்க்கணத்திற்கு இலக்கியமாக அன்றோ அமைந்துவிட்டான் பரதன்! தந்தை சொன்ன காரணத்தால் அரசை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துவிட்ட இராமன் எங்கே! அதனை வேண்டா என மறுத்த பரதன் எங்கே! தனக்கு அதற்கு உரிமை உண்டா என்பதை ஆராய்ந்து பாராமல் அன்றோ இராமன் முடி சூட ஏற்றுக் கொண்டான்? அவன் அதை விரும்பவில்லை என்பது மெய்ம்மைதான். என்றாலும், தந்தை கேட்டவுடன் மறுத்துப் பேசாதது ஓரளவு குறைவுதானே?

பரதனுக்கு அயோத்தி அரசுக்கு உரிமை உண்டு. அந்த உரிமையை நினைவூட்டினாள் தாய். அதனை உணர்ந்த தந்தை கொடுக்க முடிவு செய்துவிட்டான். விரும்பி ஈந்தானா, விரும்பாமல் தந்தானா என்பது வினாவன்று. உரிமை என்று அறிந்திருந்தும், அதனை ஒதுக்கிவிட்ட பரதன், அதனை ஏற்றுக் கொண்ட இராமனிலும் மேம்பட்டவன் அல்லனோ? இராமனுக்குத் தர வேண்டுவது கடமை—என்று விட்டிருந்தால், அதில் சிறப்பு இல்லை. ஆனால், தனக்கு உரிமை இல்லை என்று நினைத்தது மட்டும் அன்றி, அதனால் பெரிதும் கவலையுற்று, அக் கவலையால் முகம் மாறியிருக்கும் பரதனைக் காணக் காணக் குகன் பெருமை கொள்ளுகிறான். பரதனுடைய புகழ் இராமனுடைய புகழையும் விழுங்கி நிற்றலைக் காண்கிறான் அவ்வேடர் கோமான்.

இதனை அடுத்துக் குகன் பரதனுக்கு இராமன் படுத்த இடம் முதலியவற்றைக் காட்டினான்; இறுதியாகப் பரதனுடைய படை முழுவதையும் அக்கரைக்கு ஏற்றிக் கொண்டுபோய் விட்டான்; அனைவரும் சென்ற பிறகு நடுப்பகலில் தசரதன் தேவியர் மூவரையும் பரதனுடன் ஏற்றிக்கொண்டு செல்லும்பொழுது பரதனைப் பார்த்துக் கோசலையைச் சுட்டி 'யார் இவர்?' என்று கேட்கிறான். இன்னாள் என்பதை அறிந்த குகன் அவள் திருவடிகளில் வீழ்ந்து கதறுகையில் அவனைப் பற்றி அப்பெருமாட்டி வினவுகின்றாள். உடனே பரதன் அவளுக்கு விடை கூறுகிறான்:

**"இன்துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்."**

(கம்பன்—2367)

என்ற அடியால் குகனைப் பற்றிப் பரதன் கொண்டுள்ள எண்ணம் முற்றிலும் வெளியாகிறது.

இனிக் கைகேயியைப் பரதன் மிகக் கடுமையான முறையில் அறிமுகம் செய்து வைத்துங்கூடக் குகன் அவளையும் தாய் என நினைத்து வணங்கினானாம்.

கைகேயியை இன்னாள் என்று அறிந்ததும் அவளையும் கையால் வணங்கினான் என்பதை நோக்குகையில் குகன் பரதனுடைய பண்பாட்டிலும் ஒரு படி மேலே சென்றுவிடுகிறான். இராமனையே முதலிற்கண்டு, அவனிடமே அன்பு செலுத்திப் பழகியவன் குகன். இராமனுடைய சுற்றத்தாரை இன்று அவன் தன்னுடைய சுற்றத்தாராக மதிக்கிறான் எனில், அதற்கும் இராமனே காரணம். இராமனுடைய தாய் என்பதற்காகவும், அவனுடைய சோதரர் என்பதற்காகவுமே பிறரிடம் அவன் அன்பு பாராட்டுகிறான். இராமனுக்கு வேண்டாதவர் அனைவரும் குகனுக்கும் வேண்டாதவர்களே. அவனுக்குத் தீங்கிழைத்தவர் அனைவரும் குகனுக்கும் தீமை புரிந்தவரேயாவர்..

பரதனைப் பொறுத்தவரை அவ்வாறன்று. எவ்வளவு தான் இராமனுக்குத் தீமை புரியினும் கைகேயியிடம் பரதன் காட்டும் வணக்கத்தைக்காட்டிலும் மிகுதியாகக் குகன் காட்டுகிறான் எனில், அது குகனுடையமதிப்பையே மிகுதிப்படுத்திக் காட்டுகிறது. இக்கருத்தையே மனத்துட் கொண்டு போலும் கவிஞன்,

''என்னக் கேட்டுஅவ் இரக்கம்இ லாளையும்
துன்நற் கையின் வணங்கினன் தாய்என''

(கம்பன்—2372)

என்று கூறுகிறான்!

பரதன், குகன் என்ற இருவருமே இராமனுடைய தம்பியர். ஒருவன் பிறப்பாலேயே தம்பியாய்ப் பிறந்தான். மற்றவன் பிறவாமலும் தம்பி ஆயினான். இராமனைப் பொறுத்த மட்டில் அவனால் தம்பியாக ஏற்றுக்கொள்ளப் படுவதற்குப் பிறப்பு ஒரு பெருங்காரணமாகவே கருதப்பட வில்லை. குகனைத் தம்பி என்று கூறுகிறானே தவிர, '**உடன் பிறவாவிடினும்** நீ தம்பிதான்,' என்று கூறவில்லை. இவ்வாறு கூறாதது குகனுடைய பிறப்பைப் பற்றி இராமன் கவலை கொன்ளவில்லை என்பதையே அறிவுறுத்துகிறது. ஒருவன் உடன் பிறந்த தம்பி; மற்றவன் உடன் பிறவாத் தம்பி. எனவே, தம்பியர் என்ற முறையில் இருவரும் ஒன்று தான்.

இருவரும் இராமனிடத்துப் பேரன்பு பூண்டவர். இருவருடைய அன்பும் மிகவும் ஆழமானது. ஆழ்ந்தும் பரந்தும் செல்லும் **கங்கை** ஆற்று வெள்ளத்தின் இயல்பே இவர்களுடைய அன்பின் இயல்புமாகும். ஆரவாரத்திற்கோ, படபடப்பிற்கோ இங்கு இடமில்லை. ஆற்றுள் இறங்கி மூழ்கிப் பார்த்தால் ஒழிய ஆற்றின் ஆழம் தெரியாதவாறு போல, இவர்களுடைய அன்பை அனுபவித்துப் பார்த்தால் ஒழிய அதன் சிறப்பை உணர முடியாது. இவர்களுடைய அன்பில் தன்னலமோ, அகங்காரமோ எதுவும் இல்லை.

இலக்குவனும் இராமனிடம் அன்பு கொண்டுள்ளான் எனினும், அதில் ஆணவத்தின் நிழலைச் சில சந்தர்ப்பங் களிலேனும் காணலாம். ஆனால், குகன், பரதன் என்ற இருவருடைய அன்பில் ஆணவத்திற்குச் சிறிதும் இடம் இல்லை. எவ்விதக் கலப்பும் இல்லாத தூய அன்பைக் காணவேண்டுமாயின், இவர்கள் இராமன் மாட்டுக் கொண்ட அன்பைத்தான் காண வேண்டும்.

நாம் காணும் முதல் சந்திப்பிலேயே குகன் பண் பாட்டின் முடியாகக் காட்சி நல்குகிறான். பரதன் இளமை தொட்டுப் பெறும் வளர்ச்சியை அடுத்துக் காண்போம்.



'பரதன் எனும் பெயரான்'

'இராமாயணக் காப்பியத்தின் தலைவன் இராமன்தான் என்றால், இதில் என்ன புதுமை இருக்கிறது?' என்று பலர் நினைக்கக் கூடும். அக் காப்பியத்தில் வரும் வேறு எந்தப் பாத்திரமும் இராமனளவு நம் மனத்தைக் கவரவில்லை என்பதும் உண்மையே. நம்மைப்போல மனிதனாய்ப் பிறந்த ஒருவன் பண்பாட்டால் உயர்ந்து, உயர்ந்து கடவுள் தன்மையை எய்திவிடுகிறான். கம்பநாடனுடைய சித்திரம் ஏறத்தாழ இந்த நிலையிலேதான் இருக்கிறது. எனவே, இராமனை ஒத்த மற்றொரு பாத்திரத்தை அப்பெருநூலில் காண்டல் அரிது.

என்றாலும், இராமனுடன் பெரும்போட்டி இட்டு அவன் பெறும் இடத்தையும் பெற்றுவிட்டான் என்று கூறக் கூடிய மற்றொரு பாத்திரத்தையும் கம்பநாடன் படைத்துள்ளான். இன்னும் கூறப்போனால், இராமனிலும் மேம் பட்டவன் என்று பலராலும் பாராட்டப்பட்ட பெருமையை உடையவன் இராமாயண முழுவதிலும் ஒருவனே உளன். இராமனுடைய செயல்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக எடுத்து அலசிப்பார்த்தால், அச்செயல் ஒவ்வொன்றிலும் அவனுடைய பண்பாடும் கருணையும் வெளிப்படக் காணலாம். ஆனால், அவனுடைய சில செயல்களின் உட்கருத்தை நம் போன்றோர் அறிய முடிவதில்லை.

மானாய் வந்தது உண்மையில் பொன்மான் அன்று என்பதை அறிந்திருந்தும், சீதையின் வேண்டுகோட்காக இராமன் அதன் பின்னே சென்ற செயலையும், சூர்ப்பநகை இராவணனுடைய தங்கை என்பதை அறிந்திருந்தும் அவளை ஓட்டிவிடாமல் அவளுடன் விளையாட்டாகப் பேசி அவளுடைய நம்பிக்கையை வளர்த்த செயலையும், வாலியை மறைந்து நின்று கொன்ற செயலையும் நம் போன்றார் எளிதில் அறியக்கூடவில்லை. பெரியோர்கள் இவற்றிற்கெல்லாம் தக்க முறையில் சமாதானம் கூற முயன்றும், பலர் சமாதானம் அடைய மறுக்கின்றனர். இவை மனிதச் செயலுக்கு அப்பாற்பட்டவை என்று கூறினால் ஒழிய, இவற்றிற்குத் தக்க விடை கூற முடியும் எனத் தோன்றவில்லை.

இத்தகைய ஐயத்திற்கிடமான செயல் ஒன்றையும் செய்யாத ஒரு பாத்திரத்தைப் படைக்க முயன்று படைத்தும் விட்டான் கவிஞன். அப்பழுக்கு அற்றவனும், மனிதப் பண்பாட்டின் முடியாய் விளங்குபவனும், பகைவனும் குறை கூற முடியாத பண்பாடுடையவனும் ஆகிய ஒரு பாத்திரத்தைப் படைத்துவிட்டான் கவிஞன். கவிதை உலகின் ஒப்பற்ற படைப்பாவான் **பரதன்**. 'ஆற்றல்சால் கோசலை என்று புகழப்படும் முதல் தேவி கோசலையும் புகழ்கிறாள் பரதனை! காப்பியத் தலைவனாகிய இராமனே வாயாரப் புகழ்கிறான் அச்செம்மலை! கல்வி வாசனையற்ற குகனும் புகழ்கிறான் அத்தோன்றலை! கல்விக் கடலின் கரைகண்ட சொல்லின் செல்வனாம் அனுமனும் புகழ்கிறான் அவ் வள்ளலை! அவையோர் புகழ்கின்றனர்! இம்மட்டோ! பரதனை ஆதி முதல் தவறாகவே உணர்ந்திருந்த இலக்கு வனும் இறுதியில் தன் பிழைக்கு இரங்கிப் புகழ்கிறான் அவ்வருமைத் தம்பியை!

இவ்வாறு அனைவராலும் ஒருசேரப் புகழ்மாலை சூட்டப் பெறும் பேறு அப்பெருங்காப்பியத்தில் வேறு

அஞ்ஞானமாகிய அகவிருளையும் ஒரு சேர ஓட்டிய பரதன் என்னும் பேரொளி தோன்றிற்று என்றான் கவிஞன். எத்துணைப் பொருத்தம்! திரி கருமை உடையதுதான்; ஆனால், திரியைப்பற்றி நிற்கும் ஒளி இருள் போக்குகிறது. பரதனும் கருமை நிறம் உடையவன்தான்; ஆனால் அவனைப் பற்றி நின்ற பண்பாடு, சால்பு என்பவை உலகிருளை ஒருசேர ஓட்டிவிட்டன. இதனை மனத்துட் கொண்டுதான் போலும் 'மற்றைய ஒளி' என்கிறான் கவிஞன்!

ஆதியிலிருந்தே இராமனுடன் இலக்குவனும் பரதனும் சத்துருக்கனனும் இணைபிரியாதிருந்து விட்டனர். அரசகுமாரர் அனைவரும் ஒரே ஆசிரியனிடத்துக் கற்றனராகலின், பிற்காலத்தில் இவர்களின் வாழ்க்கையில் காணப் பெறும் தனிப் பண்பாடுகள் இயற்கையாய் அமைந்தவைகளே என்று கருதுவதில் தவறு இல்லை.

விருப்பு வெறுப்புக்களால் கட்டுண்ணாத விசுவாமித்திர முனிவன் சனகனிடம் பேசுகிறான். இராமனும் இலக்குவனும் உடன் இருக்கின்றனர். இராமனுடைய பெருமையைக் கூறிய முனிவன், எதிரே இல்லாமல் அயோத்தியில் வாழும் பரதனைப் பற்றிப் பேசுகிறான் சனகனிடத்தில். இராமனை ஒத்த நிறமுடைய ஒரு தம்பியும் உண்டு ஊரில் என்று கூறிப் போயிருக்கலாம் அம்முனிவன். ஆனால், பரதனைப் பற்றி நினைத்தவுடனே விசுவாமித்திரன் மனம் குளிர்ந்துவிடுகிறது. ஆம்! பரதன் என்ற சொல்லும் 'அறம்' என்ற சொல்லும் ஒரே பொருளுடையன என்கிறான் தவத்தால் மேம்பட்ட அம்முனிவன்! 'அறிந்தவர்களும் விளக்க முடியாத சிறந்த நீதிகள் என்னும் ஆறுகள் வந்து மண்டும் கடல் போன்றவனும், பரதன் என்னும் பெயருடையவனும், இவ்விராமனை நிறத்தாலும் குணத்தாலும் ஒத்தவனுமாகிய ஒருவனைக் கைகேயி பெற்றெடுத்தாள்,' என்று சனகனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறான்.

"தன்னரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பன்னம்எனும் தகையானைப் பரதன்எனும் பெயரானை
என்னரிய குணத்தாலும் நிறத்தாலும் இவ்விருந்த
வன்னலையே அனையானைக் கேகயர்கோன் மகள்பயந்
தாள்."

(கம்பன்—657)

பரதனைப் பற்றி நினைந்தவுடன் அம்முனிவனுக்கு நீதி யாறுகள் வந்து புகும் கடலேதான் உவமையாக எதிரே நிற்கின்றது. பரதனை அவன் 'அறக்கடல்' என்றுதான் கூறுகிறான். விருப்பு வெறுப்பற்ற முனிவனாலும் இவ்வாறு புகழப்படும் வாய்ப்பு வேறு யாருக்குத்தான் கிடைக்கும்;

தசரதன் கண்ட பரதன்

இத்துணைச் சிறப்பு வாய்ந்த பரதனைப்பற்றி இராம காதையில் பிறபாத்திரங்கள் என்ன கூறுகின்றன என்று காண்பது பயனுடைய செயலாகும். முதலாவது பேச உரிமையுள்ளவன் தசரதனேயாவான். அவன் ஒருதலைப் பக்கமான விருப்பமுடையவனாகலின், அவனுடைய சொற்களைக் கொண்டு பரதனைப் பற்றி முடிவு செய்தல் ஆகாது என்பதை மனத்தில் இருத்திக்கொண்டு, அவன் சொற்களைக் காண்டல் வேண்டும். கைகேயியிடம் பேசும் மன்னவன் முதலில் மகிழ்ச்சியோடும் பின்னர்த் துயரத்தோடும் பேசுகிறான். எனவே, முதலில் இராமனை **'உன் மைந்தன்'** என்று குறிப்பிடுகிறான்; அடுத்துக் கோபம் வந்த நிலையில் அவனை 'என் மகன்' என்றும் பேசுகிறான். இவ்வாறு பேசும் அம்மன்னன் மறந்தும் பரதனை 'என் மகன்' என்றோ, 'நம் மகன்' என்றோ கூறாதது வியப்பே! கைகேயி விருப்பப்படியே தான் அரசை அளித்தாலும் பரதன் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று மட்டும் கூற அவனுக்கு எவ்வாறு எண்ணம் வந்ததோ, தெரியவில்லை! "கொள்ளான் **நின்சேய்** இவ்வரசு" என்று கூறும் பொழுது பரதனைப் பற்றி இயல்பாகவே ஒரு நல்ல எண்ணம் அவன்

மனத்தில் இருந்ததை அறிய முடிகிறது. என்றாலும், பரதனைக் குறிப்பிடும் இடத்தில் 'நின்சேய்' என்றது அவன் பரதன் மேற்கொண்ட அன்பு எத்தகையது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு!

கைகேயி அவன் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க மறுத்துவிட்டுத் தான் வேண்டிய வரங்களைக் கொடுத்தே தீரவேண்டும் என்று யிடிவாதம் பிடிக்கிறாள். தப்ப வேறு வழியே இல்லை என்பதைக் கண்ட மன்னன், மிகவும் ஆத்திரத்துடன் வரங்களில் ஒன்றைத் தருவதாகக் கூறு கிறான்; ஒரே பாடலில் பரதனையும் இராமனையும் குறிக் கிறான். ஆனால், எவ்வளவு வேற்றுமை!

" 'நின்மகன் ஆள்வான்; நீஇனிது ஆள்வாய் நிலம்எல்லாம்
உன்வயம் ஆமே ஆளுதி தந்தேன்; உரைகுன்றேன்
என்மகன் என்கண் என்உயிர் எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடுஇற வாமை நய!'' என்றான்.

(கம்பன்—1526)

பரதனைக் குறிக்கும் பொழுது 'நின்மகன்' என்றும், இராமனைக் குறிக்கும் பொழுது 'என் மகன்' என்றும் கூறுகிற தந்தையிடம் பரதனைப் பற்றிய செம்மையான கருத்துக்களை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இதனை யடுத்து அவன் பரதனைத் தன் மகன் அல்லன் என்றும் தனக்கு இறுதிக்கடனை அவன் செய்யக்கூடாது என்றும் கூறிவிடுகிறான்.

''மன்னே ஆவான் வரும்அப் பரதன் தனையும்
மகன் என்று
உன்னேன் முனிவா!''

(கம்பன்—1654)

எனப் பரதன்மேல் இவ்வளவு சினங்கொள்ளத் தசரதனுக்கு நியாயமே இல்லை என்பதை நாம் அறிவோம். ஆகலின்,

இதுபற்றிக் கவலை இல்லை. என்றாலும், இத்துணைச் சினத்திலும் பரதனைத் தீயவன் என்று தசரதன் கூறத் துணியவில்லை என்பதை மட்டும் அறிதல் வேண்டும்.

இலக்குவன் கண்ட பரதன்

இராமனும் இலக்குவனும் பருந்தும் நிழலும் போல இணை பிரியாது இருப்பவர்கள். எனவே, பரதனைப் பற்றி அறிந்துகொள்ள இராமனுக்கு எத்துணை வாய்ப்பு இருந் திருக்குமோ, அத்துணை வாய்ப்பு இலக்குவனுக்கும் இருந் திருக்கும் அல்லவா? என்றாலும், பரதனைப் பற்றி இராமன் அறிந்திருந்த அளவு இலக்குவன் அறியவில்லை என்பது மட்டுமன்றி, அவன் தவறாகவும் அறிந்திருந்தான். ஆழ்ந்து நோக்கின், இதன் காரணமும் விளங்காமற் போகாது. இராமனிடத்து ஈடுபட்ட இலக்குவன், தன்னைப் பற்றியும் தன்னுடைய இராமபக்தி பற்றியும் மிகுதியாகவே நினைத்துக் கொண்டான்; அதன் பயனாக ஒரு முடிவுக்கும் வந்துவிட்டான்; உண்மையில் இராம னிடம் ஈடுபட்டவர் எவராயினும் தன்னைப் போல இராமனைப் பிரியாமல் இருத்தல் வேண்டும் என்ற முடிபுக்கு வந்துவிட்டான்; அவ்வாறு இல்லாத பரதனு டைய இராம பத்தி மட்டமானது என்று கருதினான் போலும்! இந்த எண்ணம் உறுதிப்படத் தக்க முறையில் விளைவுகளும் விளைந்துவிட்டன. இராமனுக்குரிய பட்டத் தைப் பரதனுக்கும் பெற்றுக் கொண்டாள் கைகேயி என்று இலக்குவன் கேள்விப்படுகிறான். இதில் குற்றவாளி யார் என்று அவன் நடுவு நிலையுடன் ஆய்ந்திருத்தய் வேண்டும். அவ்வாறு பொறுமையுடன் ஆயாததற்குக் காரணம், அவன் இராமன்மாட்டுக் கொண்ட அன்பேயாகும். அவனால் வழிபடப்படும் இராமனுக்குரிய முடி இன்று அபகரிக்கப்பட்டுவிட்டது, 'யார் அபகரித்தார்? ஏன் அபகரித்தார்?' என்பவை பற்றி அவனுக்குக் கவலை இல்லை. 'அபகரித்தலாகிய நிகழ்ச்சி நடைபெற யார் யார் காரணர்? கைகேயி, தசரதன், பரதன் என்ற மூவருமே'

என அவன் நினைக்கின்றான். அவனுடைய ஆத்திரத்தில் பரதன் அயோத்தியில் இல்லை என்பதும், அவன் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருக்க இயலாது என்பதும் அறிவில் படவில்லை. போர் முழக்கம் செய்துகொண்டு புறப்பட்டுவிட்டான். ஏன் தெரியுமா? இராமன் இழந்த முடியை அவனுக்கு மீட்டுத் தரவாம். சினங்கொண்ட இலக்குவன் என்ன என்ன பேசுகிறான், நாவில் நரம்பின்றி ஏசுகிறான் அனைவரையும்!

இராமனுக்குரிய அரசைப் பரதனுக்குத் தருவது சிங்கக்குட்டிக்கு என்று வைத்திருக்கும் இனிய சுவையுடைய ஊனை நாய்க்குட்டிக்கு இடுவது போன்றதாம். இக் கருத்துப்பட இலக்குவன் இதோ பேசுகிறான்.

''சிங்கக் குருளைக்குஇடும் தீஞ்சுவை ஊனை நாயின்
வெங்கண் சிறுகுட்டனை ஊட்ட விரும்பி னளால்!''

(கம்பன்—1718)

இப்பாடலில் பரதனை 'நாய்க்குட்டி' என்று இலக்குவன் எள்ளிப் பேசுவதைக் காணலாம். இலக்குவனைப் பொறுத்தவரை இராமன், பரதன் ஆகிய இருவருமே மூத்தவர்தாம். என்றாலும், இராமனுக்குரிய அரசைக் கைகேயி பரதனுக்குப் பெற்றுவிட்டாள் என்று அறிந்தவுடன் இலக்குவன் சீற்றத்தால் இவ்வாறு பேசிவிட்டான். இராமனுடைய முடியைக் கவர்வதற்குச் செய்யப்பட்ட சூழ்ச்சியில் பரதன் நேரடியாகப் பங்கு கொண்டுள்ளானா என்பதை அறியாதிருக்கையிற்கூட இலக்குவன் பரதனை 'நாய்க்குட்டி' என்று ஏசிவிட்டான். ஆனால், இதே நேரத்தில் முடியை இழந்து நிற்கும் இராமன் பரதனைப் பற்றி இதோ பேசுகிறான். இலக்குவன் சீற்றத்தை அடக்கும் முறையில் இராமன், ஐயனே, மயக்கம் இல்லாத சன்மார்க்கத்தில் வாழும் தம்பியாகிய பரதனைப் போரில் தொலைத்தா உன் சீற்றம் அடங்கவேண்டும்?' என்ற கருத்தில் கூறுகிறான்:

"ஆன்றான் பகர்வான் பினும், 'ஐய! இவ்வையம் மையல்
தோன்றா நெறிவாழ் துணைத்தம் பியைப்போர்
தொலைத்தோ?"
(கம்பன்—1739)

குற்றமற்ற வழியில் (சன்மார்க்கத்தில்) வாழும் பரதன் என்று மட்டும் கூறாமல் இராகவன் 'துணைத் தம்பி' என்றும் கூறியது அறிந்து மகிழற்குரியது. இவ்வொரு சொல்லால் இலக்குவன் கொண்டுள்ள அகந்தைக்கு இராமன் நல்ல சாட்டையடி தருகிறான். இராமனிடத்து அன்பு செய்பவர்கள் தன்னைப் போலவே செய்யவேண்டும்; அவ்வாறு செய்யாதவர் அனைவரும் இராமனுக்குப் பகைவர்கள் என்பதே இலக்குவன் கருத்துப்போலும்!

ஒருவனிடம் காட்டும் அன்பு பல வகையில் காட்டப் படலாம். பெரிதும் படாடோபத்துடனும் ஆரவாரத் துடனும் தம்முடைய அன்பை வெளியிடுபவர் சிலர்; சிலர் வாய் பேசாமலே தம்முடைய முழு அன்பையும் செலுத் துவர். இவ்விரு வகையினரும் ஒருவரை ஒருவர் அன்பிலார் என்று குறை கூறுவது எவ்வளவு தவறானது! இலக்குவன் இராமனிடம் கொண்ட அன்பு முதல்வகையைச் சார்ந்தது. ஆடம்பரத்துடன் ஓரளவு தன் மதிப்பும் கொண்ட அன்பாகும் அது. எனவே, பரதனது ஆழ்ந்த அன்பை இலக்குவன் அறிந்துகொள்ளக் கூடவில்லை. பரதன் இராமனிடம் கொண்ட அன்பு பெரிய ஆற்றில் ஓடும் நீர் போன்றது; அதில் ஆரவாரமோ, சந்தடியோ இல்லை. ஆற்றின் ஆழத்தை இறங்கிப் பார்த்தால் ஒழியக் காண முடியாதது போலப் பரதனுடைய அன்பின் ஆழத்தை அறிந்து கொள்வதும் கடினம். இராமனுடனேயே நிழல் போலப் பரதன் இல்லாவிடினும், அவனும் அன்பு செலுத்தி னான்; இலக்குவனைவிட அதிகமாகக்கூட அன்பு செலுத்தி னான்; **'மில்டன்'** என்ற கவிஞர் பெருமான் தன் கண் ஒளியை இழந்து பாடிய கவிதை ஒன்றில் கூறும் அடிகள் நினைவிற்கு வருகின்றன.

'ஆயிரம் ஆயிரம் பேர்கள் கூடி
அவனுடைய ஆணை சிரமேற் கொண்டு
கடல்நிலம் காடுகள் கடந்தும் கதுமென
அவனுடைய ஆணை வழிநின்று ஒழுகுவர்;
இருந்த இடத்தில் நின்றும் கிடந்தும்
சலியாது இருப்பவர் தாமும் அவனுடைக்
குற்றேவல்தனைக் கொள்பவர் அலரோ?'[1]

[அவன்-இறைவன், சலியாது-அசையாமல்]

பரதனுடைய இராம பத்தி இலக்குவன் பத்தியைவிடக் குறைந்ததன்று என்பதை இலக்குவன் அறியாவிடினும், இராமன் நன்கு அறிந்திருந்தானாகலின், சமயம் வந்த பொழுது இலக்குவன் மனம் நோவாதபடி அதனை எடுத்துக் காட்டிவிட்டான். 'துணைத் தம்பி' என்ற அந்தச் சொற்றொடரிலேதான் எவ்வளவு பொருளாழம் அமையு மாறு கூறிவிட்டான் அப்பெருமகன்!

இவ்வாறு இராமன் கூறியும் இலக்குவன் மனந்திருந்திய தாகத் தெரியவில்லை. இராமன் தடுத்து நிறுத்தியதால் அவன் கைகேயிமேல் போர் தொடுக்காமல் அடங்கி விட்டானே தவிரப் பரதன்மேற்கொண்ட தவறான எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

சித்திரகூட மலையை அடுத்த ஓர் இடத்தில் இலக்குவன் கையால் அமைத்த பன்னசாலையில் இராம னும் சீதையும் இலக்குவனும் தங்கி வாழ்கின்றனர். கேகய நாட்டிலிருந்து அயோத்தி மீண்ட பரதன், 'மன்னனைக் (இராமனை) கொணர்வான்' தன் பெரும்படையுடனும் அருமைத் தாயாருடனும், குகனுடனும் வருகிறான்.

---

1. Is kindly; thousands at His bidding speed
And post o'er land and ocean without rest,
They also serve who only stand and wait.
—Sonnet 'On His Blindness' by J. Milton

பெரும்படை உடன் வருவதால் கடல் எழுந்து வருவது போல உள்ள அக்காட்சியை எப்பொழுதும் காவல் புரிபவனாகிய சுமித்திரை சிங்கம் கண்டுவிட்டான். அறிவிலும் வீரத்திலும் ஒப்புயர்வற்றனாகிய இலக்குவன், மீட்டும் ஒருமுறை தவறு செய்கிறான்; 'பரதன்தான் நிலத்தைத் தனக்கே ஆக்கிக்கொள்ளும் எண்ணத்தால் இப்பெரும்படையுடன் இராகவனை எதிர்க்க வந்துள்ளான். இது உறுதி', என்று கூறிக்கொள்கிறான். 'பரதன் இப்படைகொடு பார் கொண்டு ஆள்வது, கருதி...........வந்தான்; இது சரதம்' என்று அவன் ஒரு முடிபுக்கு வந்துவிட்டான்', ஐயப்படக் கூட இல்லை; ஒரே ஓட்டமாக ஓடி இராமனிடம் 'மதித்திலன் பரதன் நின்மேல் வந்தான்', என்று கூறி விட்டுப் போருக்குத் தயாராகிவிட்டான்; 'நான் எவ்வாறாயினும் பரதனையும் அவன் படைகளையும் வென்றுவிடப் போகிறேன்', என்கின்றான். இராமன் பாடு மிகவும் தருமசங்கடமாகிறது. எனவே, அவன் இலக்குவனை உயர்த்திப் பேசத் தொடங்குகிறான்.

''இலக்குவ! உலகம்ஓர் ஏழும் ஏழும்நீ
'கலக்குவன்' என்பது கருதி னால்அது
விலக்குவது அரிது; அது விளம்பல் வேண்டுமோ?
புலக்குஉரித்து ஒருபொருள் புகலக் கேட்டியால்.''

(கம்பன்—2416)

[புலக்கு உரித்து ஒரு பொருள்—அறிவுக்கு ஏற்றதொரு செய்தியை]

''நம்குலத்து உதித்தவர் நவையுள் நீங்கினார்
எங்குஉலப்பு உறுவர்கள் எண்ணின் யாவரே
தம்குலத்து ஒருவுஅரு தருமம் நீங்கினார்?''

(கம்பன்—2417)

இவ்வாறு மிக அழகான முறையில் இராமனுடைய வாதம் தொடங்குகிறது. 'இலக்குவ! நம் குலத்து உதித்த மன்னருள் யாரேனும் அறம் பிறழ்ந்ததுண்டா?' என்ற

முகவுரை வினா ஆய்தற்குரியது. பிறழ்ந்தார்கள் என்று இலக்குவன் விடை கூறினால் அவனும் அதில் அகப்பட்டுக் கொள்வான். ஒருவரும் பிறழ்ந்ததில்லை என்று கூறினால், 'பரதன் மட்டும் எவ்வாறு பிறழ முடியும்?' என்ற வினாத் தோன்றும். எனவே, இலக்குவன் விடை ஒன்றும் கூறாமல் நிற்கிறான்.

இப்பொழுது கோசல நாடுடை வள்ளல் ஆணித் தரமாகப் பரதனைப் பற்றிய தன் கருத்தைக் கூறுகிறான். 'வேதங்களும் நல்லொழுக்கத்திற்கு மேற்கோள் காட்ட வேண்டுமாயின், பரதனுடைய செய்கையையே எடுத்துக் காட்டும். நீ நினைக்கும் அவ்வளவு அற்பத்தனமான செயலைப் பரதன் நினைக்கவும் மாட்டான். ஆனால், என்மேற்கொண்ட அன்பு காரணமாக அதனை நீ அறிய முடியவில்லை', என்னுங் கருத்துப்படப் பேசுகிறான்:

''எனைத்துஉள மறைஅவை இயம்பற் பாலன
பனைத்திரள் கரகரிப் பரதன் செய்கையே
அனைத்திறம் அல்லன வல்ல வன்அது
நினைத்திலை என்வயின் நேய நெஞ்சினால்.''

(கம்பன்—2418)

'உலகம் முழுவதற்கும் நீதி புகட்ட வந்த வேதங்களும் நல்லொழுக்கத்திற்கு மேற்கோள் காட்டப் பரதனுடைய செயல்களையே காட்டும் எனில், பரதனுடைய பண்பாட்டிற்கு இதனினும் சான்று வேண்டுமா?'

''பெருமகன் என்வயின் பிறந்த காதலின்
வரும்என நினைகையும் மண்ணை என்வயின்
தரும்என நினைகையும் தவிரத் தானையால்
பொரும்என நினைகையும் புலமைப் பாலதோ?''

(கம்பன்—2419)

'பரதன் இவண் வருகிறான் என்றால், என்பாற் கொண்ட காதலாலும், அரசை மீட்டும் எனக்குத் தரவேண்டும் என்ற

நினைவாலும் ஆகுமே தவிர, வேறு காரணம் இருத்தல் கூடும் என்று நினைப்பதும் அறிவுடைமை ஆகுமோ?''

இவ்வாறு பரதனைப் பற்றியும் அவன் எதற்காக வருகிறான் என்பது பற்றியும் நினைக்க நினைக்க இராமனுக்குக் கருணை ஊற்றெடுக்கின்றது பரதன் மேல். உடனே அவன் பண்பாட்டைத் தொகுத்தும். தான் அவனைப் பற்றி என்ன நினைந்துள்ளான் என்பதையும் இதோ கூறுகிறான், 'மிகச் சிறந்த அறக்கடவுளின் வடிவு கொண்டவனாய பரதனை—நேர்மை என்னும் தேருக்குக் கடையாணி போன்றவனை—அவ்வாறு நினைக்கலாமா? அவன் செய்கையை நீயே காணப் போகிறாய்!' என்ற பொருளில் கூறுகிறான்:

''சேண்உயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை அன்னது நினைக்க லாகுமோ?
பூண்இயல் மொய்ம்பினாய்! போந்தது ஈண்டுஎனைக்
காணிய; நீஇது பின்னும் காண்டியால்.''

(கம்பன்—2421)

பரதனை 'அறவடிவினன்' என்று கூறுகிறான் அறத்தின் நிலையமான இராமன் எனில், அதனை மறுப்பார் யாருளர்? அம்மட்டோடு நிற்கவில்லை இராமன் சூட்டும் புகழ் மாலை. நேர்மையின் உரையாணியாம் பரதன். பொன்னின் மாற்று எத்தனை என்பதை அறிய வேண்டுமாயின், மக்கள் யாது செய்கின்றார்கள்? உரைகல்லில் உரைத்துப் பார்க்கின்றார்கள் அல்லவா? அதே போல, எது நேர்மையானது என்று யாருக்காவது ஐயம் வந்துவிட்டால், என் செய்வது? பல சந்தர்ப்பங்களில் இரண்டு வழிகள் காணப்படுவதுண்டு. உலக வாழ்க்கையில் இது சாதாரண அனுபவம். இரண்டில் எது நியாயமானது என்று ஆராயத் தோன்றுகிறது. 'நேர்மை வழி எது?' என்று ஐயுறத் தோன்றுகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் 'நேர்மை வழி எது?' என்பதை அறிய முடிவதில்லை. இம்மாதிரி நிலை

களிலேதான் நாம் பெரியவர்கள் கூறிய வழிகளைப் பின்பற்றுகிறோம்; அதுவே நேர்மையானது என்று கூறுகிறோம். எனவே, நல்லவர்கட்கு எது நேர்மை என்று ஐயுறவு தோன்றுமாயின், பரதன் இம்மாதிரி நிலையில் எவ்வாறு நடந்துகொள்வான் என்பதை ஆய்தல் போதுமானது. அதுவே, நேர்மை எனப்படும். 'நேர்மை சரியானதுதானா?' என்று அறியத்தக்க உரையாணி போன்றவன் பரதன். இதனைக் குறிக்கவே இராமன் 'செம்மையின் ஆணியை' என்று கூறுகிறான். (ஆணி-உரை ஆணி.)

இவ்வாறு இராமன் இலக்குவனிடம் இளவலாம் பரதனின் இயல்பை இயம்பிக் கொண்டிருக்கையில் பரதன் சேனையை நிறுத்திவிட்டுத் தம்பியுடன் வருகிறான். அவன் வரும் கோலத்தை இராமன் தாமரைக் கண்களால் காண்கிறான். பரதனைப் பார்த்த மாத்திரத்தில் 'துன்பத்தின் வடிவம் இதுதான்!' என்று கூறத்தக்க நிலையில் உள்ளானாம் அப்பெருமான்.

> **''தொழுதுஉயர் கையினன் துவண்ட மேனியன்**
> **அழுதுஅழி கண்ணினன் அவலம் ஈதுஎன**
> **எழுதிய படிவம்ஒத்து எய்து வான்தனை**
> **முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான்.''**
>
> (கம்பன்—2423)

மூத்தவன் என்ற முறையிலும், பரதனுடைய ஆரவாரமற்ற அன்பின் ஆழத்தை நன்கு அறிந்தவன் என்ற முறையிலும் இராமன் பரதன் வரும் கோலத்தைக் கண்டான்—கண்ணொடு மனம் பொருந்தக் கண்டான். அவனையும் அறியாமல் இராமன் மனம், இலக்குவன் பரதன் இருவருடைய அன்பையும் ஒப்பிட்டுப் பார்க்கிறது. ஒன்று, காட்டாற்று வெள்ளம் போன்றது; ஏனையது, ஏரி நிறைந்துள்ள நீர் போன்றது. ஒன்று, அடித்துவரும் வேகத்தில் நல்லவை தீயவை என்ற இரண்டையும் அடித்து

வருவது; மற்றொன்று, கரை உடைத்துக் கொண்டு வரும் பொழுதும் ஆரவாரம் இல்லாமல் வெளிவருவது. கமலக் கண்ணனுடைய கண்கள் பரதன் வடிவைக் கண்டன. அவன் மனம் பரதன் அகமனத்தைக் கண்டு களிப்புற்றிருக் கிறது. 'செம்மையின் ஆணியாகிய இந்தப் பரதனைக்கூட இலக்குவன் ஐயுற்றுவிட்டானே!' என்ற எண்ணம் இராமன் மனத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். தன்னைப் போலவே இலக்குவனும் பரதனை வைத்த கண் வாங் காமல் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான் இராகவன். உடனே தக்க சமயத்தில் இலக்குவனுக்கு அறிவு புகட்ட வேண்டும் என்ற நினைவு வந்தது. இலக்குவனை நோக்கினான்; 'ஆரவாரத்தோடு கூடிய வில்லை ஏந்திய இளையோய்!' என்று விளித்தான் அவனை! 'தேர்ப் படையை மிகுதியும் உடைய பரதன் மிகவும் கோபத்துடன் நம் மேல் படையெடுத்து வரும் முறையை அமைதியாகவும் நன்றாகவும் பார்.' என்கிறான்.

''கார்ப்பொரு மேனிஅக் கண்ணன் காட்டினான்,
ஆர்ப்புறு வரிசிலை இளைய ஐய!நீ
தேர்ப்பெருந் தானைஅப் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு!''எனா.
(கம்பன்—2424)

இராமனுடைய இந்தச் சொல் அம்பு, அஞ்சாத இலக்குவ னையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. வீரருள் வீரனாய அவ் இலக்குவன் அழுதேவிட்டான்.

இனி மற்றொரு சந்தர்ப்பத்திலும் பரதனுடைய பெருமையை இலக்குவற்கு அறிவு கொளுத்தும் முறையில் எடுத்துக் காட்டுகிறான் இராமன். அண்ணனுக்கு எதிராகத் துணை தேடும் சுக்கிரீவனைக் கண்டு வெறுக்கிறான் அண்ணனிடம் உயிரையே வைத்திருக்கும் இலக்குவன். தன் வெறுப்பை வாய்விட்டு இராமனிடம் கூறியும்விட்டான். இந்நிலையில் இராமன் கூறுகிறான். 'ஐய, விலங்கினமாகிய இவர்களுள் இந்த உறவு முறை நியாயத்தை எதிர்பார்க்க

வேண்டா. பகுத்தறிவுடைய மனிதரிடங்கூட இவ்வொற்றுமை காணவில்லையே!' என்பானாகிப் பரதனைப் பற்றிப் பேசுகிறான்.

> "எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்
> ஒத்தாற் பரதன் பெரிதுஉத்தமன் ஆவது உண்டோ?"
> (கம்பன்—3977)

எனவே, பரதன்மேல் இராமன் கொண்ட அன்பு இணையற்றது.

கூப்பிய கையொடு மட்டும் வரவில்லை பரதன். 'அறத்தை மறந்தாய்! மனிதருக்கு மிகவும் தேவையான கருணையையும் மறந்துவிட்டாய்! அரசனுக்கு மிகுதியும் வேண்டப்படுவதாய நீதியையும் நீத்துவிட்டாய்!' என்று இராமனைப் பார்த்துக் கூறிக்கொண்டே வந்தான் அப் பரத வள்ளல். வந்தவன் அவன் திருவடிகளில் வீழ்ந்து விட்டான். 'உண்டுகொல் உயிர்என ஒடுங்கி' இருக்கும் அவனைப் புனல் சொரி கண்களால் கண்டான் புண்டரிகக் கண் புரவலனாம் இராமபிரான். தன்னைப் பிரிந்த பரதன் எவ்வாறு வருந்துவான் என்பதை நன்கு அறிந்துதான் இருந்தான் இராமன். ஆனால், அவ்வளவு அறிந்திருந்த இராமனையும் மருட்டிவிட்ட ஒன்று பரதனிடம் இருந்தது. அதுவே அவனுடைய தவக்கோலம். தன்னை அழைப்பதற்காகவே பரதன் வந்துள்ளான் என்பதை இராமன் அறிவான். ஆனால், இவ்வாறு தவக்கோலம் கொள்ளக் காரணம் யாது? இராமனுக்கும் புரியாத புதிராய் இருந்தது பரதனுடைய இக்கோலம். இவ்வேடத்தைப் பன்முறையும் பார்க்கிறான் இராமன். 'புல்லினன் நின்று அவன் புனைந்த வேடத்தைப் பன்முறை நோக்கினன்' (56) என்றதால், பரதன் கொண்ட இக்கோலம் இராமனும் எதிர்பாராத ஒன்று என்பதை அறிய முடிகிறது. இருவரும் பேசிக் கொள்ளும் பொழுதுதான் தசரதன் இறந்த செய்தியை இராமன் அறிய முடிகிறது. இதன் பின்னரே பன்னசாலையி

லிருந்த சீதையைப் பரதன் சென்று காண்கின்றான். பல சேடியரும் பணிபுரிய அரண்மனை இன்பத்தில் ஆழ்ந்திருக்க வேண்டிய அப்பெருமாட்டி, நடுக்காட்டில் மண் குடிசையில் கற்பே காவலாய் இருக்கும் நிலையைக் கண்ட பரதன் அக் கொடுமையைக் காணச் சகியாதவனாய், ''கைகளின் கண் மலர் புடைத்து'' அவள் திருவடிகளில் வீழ்ந்தழுகிறான். இதன் பின்னர் இராமனை மீட்க வேண்டிப் பரதன் கூறியவைகளைப் பின்னர்க் காண்போம்.

காட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இதுகாறும் பரதனுடைய உண்மை நிலையைப்பற்றிச் சரியாக அறிந்து கொள்ளாமல் இருந்த இலக்குவன் கண்களை நன்கு திறந்து விட்டன. பரதனுடைய இராம பக்தியை வேண்டும் அளவு அறிந்துவிட்டான் இளையோன்; தக்க சமயத்தில் இதைப் பயன் படுத்தவும் செய்கிறான்.

திருந்திய இலக்குவன்

மாயா சீதை ஒருத்தியை உண்டாக்கி அவளை அனுமன் எதிரே வெட்டி வீழ்த்திவிட்டு, 'இதோ அயோத்தி சென்று பரதனையும் ஒழித்துவிடுகிறேன்!' என்று கூறிப் போய்விட்டான் மாயம் வல்ல இந்திரசித்தன். கல்விக் கடலின் கரை கண்டு உணர்ந்த அனுமனும் இவற்றை மெய் யென்று நம்பி இராமனிடம் வந்து அழுது அரற்றி நடந்த வற்றையும் கண்டவற்றையும் கூறினான். சீதையைப் பற்றித் தான் கொண்ட பெருவருத்தம் தணியுமுன்பே பரதன் தவஞ்செய்யும் அயோத்தியை நோக்கி இந்திர சித்தன் சென்றான் என்ற சொற்கள் இராமனை மருட்டி விட்டன. பரதன் மாட்டு இராமன் கொண்ட காதல் மிகப் பெரியதாகலின், இந்நேரத்தில் பரதனுடைய வன்மையைக் கூட மறந்துவிட்டான் இராகவன்; உடனே அயோத்தி நோக்கி விரைவாகச் செல்ல ஏதேனும் வழியுண்டா என்ற ஆராய்ச்சியில் புகுந்துவிட்டான். அந்நேரத்திலேதான் இலக்குவனது அறிவு தொழிற்படத் தொடங்குகிறது.

பரதன் மாட்டு இலக்குவனும் பேரன்பு கொண்டிருந்தானாயினும், இதனால் பரதனுடைய வன்மையை அவன் மறந்துவிடவில்லை. மேலும், இராமனுக்கு இளையவன் பரதனாகலின், அவனை இன்னும் குழந்தையாகவே கருதுகிறான் இராமன். மேலும், அரசாட்சியை விட்டு நந்திக்கிராமத்தில் தவம் புரியும் பரதன் எவ்வாறு மாயம் வல்ல இந்திரசித்தனை எதிர்த்து நிற்க முடியும்? இராமனுடைய கண் முன்னர்ப் பரதன் குழந்தையாகவே இருக்கிறான்; எனவே, அயோத்திக்கு விரைந்து செல்ல வழி தேடுகிறான். ஒரு காலத்தில் பரதனை வெறுத்துப் பேசிய இலக்குவன், இதோ இப்பொழுது பேசுகிறான். 'ஐயனே, பரதனைப் போரில் வென்று பிணிக்க இவ்விந்திரசித்தனால் இயலாது! பரதன் போர்க்களம் செல்வானாயின், மூவுலகும் தீய்ந்து விடாவோ?' என்ற கருத்தில் பேசுகிறான்.

''அவ்விடத்து இளவல், 'ஐய! பரதனை அமரின் ஆர்க்க
எவ்விடற்கு உரியான் போன இந்திர சித்தே அன்று
தெவ்விடத்து அமையின் மும்மை உலகமும் தீய்ந்து
அறவோ?''
(கம்பன்—2089)

இம்மட்டோடு நிற்கவில்லை இலக்குவன். இந்திரசித்தனுடைய பிரமாத்திரம் என்னும் பாசத்தால் கட்டுண்ட தன்னைப் பரதனுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கூறுகிறான்; 'யான் கட்டுண்டு வீழ்ந்துவிட்டது போலப் பரதனும் வீழ்வானா? ஒருநாளும் அது நடைபெறாது!' எனக் கூறுகிறான்.

''தீக்கொண்ட வஞ்சன் வீசத் திசைமுகன் பாசந் தீண்ட
வீக்கொண்டு வீழ யானோ பரதனும்? வெய்ய கூற்றைக்
கூக்கொண்டு குத்துண்டு அன்னான் குலத்தொடு
நிலத்தன் ஆதல்''
(கம்பன்—8921)

சென்று காண்பாய்' என்கிறான். பரதன் எப்பொழுது யாருடன் போரிட்டதை இலக்குவன் கண்டான்? பரதன் யாருடனும் போரிட்டதை யாருமே கண்டதில்லை. அவ்வாறு இருக்கப் 'பரதன் பிரமாத்திரத்தாலும் கட்டுண்ணமாட்டான்,' என்று இலக்குவன் கூற ஆதாரம் யாது? தூய வீரனாகிய இலக்குவன், பரதன் போர் புரியா விட்டாலும் ஆற்றல் மிக்கவன் என்பதை அறிந்திருந்தான்; தானும், ஆற்றல் மிக்கவனாய் இருந்தும், தவ வலிமை இன்மையாலும், படபடப்பு உடைமையாலும் பிரமாத் திரத்தின் எதிரே நிற்கமுடியவில்லை என்பதை இப்பொழுது உணர்ந்துவிட்டான். பரதனுக்கும் தன்னை யொத்த வலிமையுண்டு. இதனினும் மேலாக, அவனிடம் தவ வலிமையும் சேர்ந்துவிட்டதன்றோ? எனவே, பரதனுடைய வலிமையைக் கணக்கிட்டே அவனை வெல்ல இந்திரசித்த னால் முடியாது எனக் கூறுகிறான் இளையவன்.

இதனையடுத்து இவ்விருவரையும் மீட்சிப் படலத்தில் சந்திக்கிறோம். இராமன் வருவதற்கு முன்னர்ப் பரதன் செய்த செயல்கள் பின்னர் ஆயப்படும். அவை அனைத்தும் தீர்ந்து இராமன் வந்தவுடன் பரதன் அவனை வணங்கு கிறான்.

> **''பூவடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி**
> **நாவிடை உரைப்பது ஒன்றும் உணர்ந்திலன் நின்ற நம்பி**
> **ஆவியும் உடலும் ஒன்றத் தழுவினான்**
> **அழுதுசோர்வான்''**
> *(கம்பன்—10278)*

இராமன் பரதனது அன்பென்னும் சுழியிலகப்பட்டுப் பேச்சற்றுவிட்டான். உணர்ச்சியின் உச்ச நிலையில் சோதரர் இருவரும் ஆறத் தழுவி நிற்கும் பொழுது பேச்சுக்கு இடமேது? இராமன்—தன் உணர்ச்சிகளை நன்கு அடக்கப் பழகியிருந்த இராமன்—இப்பொழுது தம்பியைத் தழுவி நின்று விட்டான். அவன் கண்ணீர் மட்டும் ஆறாய்ப்

பாய்கிறது. ஆம்! இளமையுடைய பரதன் உருவத்திற்கு ஏலாத தவக்கோலம் கொண்டு சடைமுடியைச் சேர்த்துக் கட்டி இருக்கிறானல்லவா? எத்தனை ஆண்டுகளாய் வளர்த்த முடி அது! அது நீரால் நனைத்துத் தூய்மைப் படுத்தப்படாமல் புழுதி படிந்தல்லவா இருக்கிறது! அப் புழுதியை இப்பொழுது இராமன் தன் கண்ணீரால் தூய்மைப்படுத்துகிறான். எத்தனை புண்ணிய நதிகளில் ஆடினாலும் தூய்மை அடையாத சடைமுடியை அன்புக் கண்ணீர் தூய்மைப்படுத்துகிறது. இறைவனும் விரும்புவது இந்த அன்புக் கண்ணீரை அன்றோ?

"என்பாவும் ஆறுகடல் ஏழுஇருந்தும் என்அன்னை
அன்பாளர் கண்அருவி ஆடுவது திருவுள்ளம்."

(பாசவதைப் பரணி—184)

என்னும் இக்கூற்றை மெய்ப்பிப்பான் போல இராமபிரான் பரதனது சடையைக் கண்ணீரால் தூயதாக்கினானாம்.

"மாசுண்ட சடையின் மாலை கழுவினன்." (10279)

இதுகாறுங் கூறியவற்றால் இராமனும் இலக்குவனும் பரதனைப்பற்றிக் கொண்டிருந்த கருத்தையும் அன்பையும் ஒருவாறு கண்டோம்.

குகன் கண்ட பரதன்

இனி அடுத்துக் காண வேண்டுவது, 'உடன் பிறவாத சோதரனாகிய குகன், பரதனைப்பற்றி என்ன நினைந்தான்?' என்பதாகும். இப்பகுதி குகனைப்பற்றிப் பேசும் முதற்கட்டுரையில் விரிவாக ஆயப்பட்டிருக்கிறது. என்றாலும், பரதன் குகனிடம் உரையாடிய சில பகுதிகளை ஆழ்ந்து காண்டல் வேண்டும்.

பரதனை நேரே காணுமுன்னர்க் குகன் பரதனைப் பற்றிய மிக இழிவான எண்ணம் கொண்டிருந்தான் என்பது முன்னரே பேசப்பட்டது. ஆனால் தூரத்தே கண்ட பொழுதே தன் எண்ணம் எவ்வளவு தவறானது என்பதைக்

கண்டுகொண்டான். உடனே அவனது மனம் இராமனது குடிப் பெருமையை நினைக்கிறது.

''எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ
பிழைப்பு?'' என்றான். *(2332)*

இக்கருத்துடன் பரதனிடம் அவன் வரவும் பரதன் அவனை வீழ்ந்து வணங்கவும் குகனும் வீழ்ந்து வணங்கினான். உடனே அவனையும் மீறிப் பரதன் (படையுடன்) வந்திருக்கும் காரணத்தை அறிய விரும்புகிறான். 'ஏன் இவ்வாறு புறப்பட்டாய்?' என்ற குகனது வினாவிற்குப் பரதன் கூறும் விடை ஆய்தற்குரியது.

''முழுதுஉலகு அளித்த தந்தை முந்தையோர்
முறையினின்றும்
வழுவினன்; அதனை நீக்கி மன்னனைக் கொணர்வான்''
என்றான். *(கம்பன்—2325)*

பரதனைக் காணு முன்னர் அரசர்களைப் பற்றியே ஒரு கருத்தைக் குகன் வெளியிட்டான் அல்லனோ?

''பாவமும் நின்ற பெரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண்உலகு ஆள்பவர் எண்ணாரோ?''
(கம்பன்—2391)

என்று குகன் நினைத்ததற்கும், தன் சுற்றத்தாரை நோக்கிக் கூறியதற்கும் விடை கூறுபவன் போலப் பரதன் பேசியது அறிதற்குரியது. 'தந்தை, முன்னோர்கள் வழியி னின்றும் தவறினான்,' என்று அவன் கூறுவதில் எவ்வளவு பொருளாழம் அடங்கியிருக்கிறது! 'முழுது உலகு அளித்த **மன்னன்**' என்று கூறாமல் 'தந்தை' என்று குறிப்பிட்டது நினைத்து இன்புறற்குரியது. மன்னன் தவறிழைத்தால் அதனை யார் திருத்த முடியும்? மைந்தனாய் இருப்பினும் மன்னன் தவறிழைத்தான் என்று கருதிவிட்டால், திருத்த உரிமையும் வாய்ப்பும் இல்லையாய்விடும். எனவே, பரதன் மிகவும் கவனத்துடன் 'தந்தை' என்ற சொல்லையே பயன்

படுத்துகிறான். 'வழுவினன்' என்ற சொல்லும் வேண்டுமென்றே பயன்படுத்தப் பெற்றது. 'வழுக்கல்' என்ற சொல்லை நாம் அறிவோம். நடந்து செல்பவன் கவனக் குறைவாக இருக்கையில் கால் வழுக்கி நிலை குலைவதையே 'வழுக்கி விழுந்தான்' என்று கூறுகிறோம். அந்தப் பொருளின் மணம் 'வழுவினன்' என்ற சொல்லிலும் இலங்கக் காண்கிறோம். தந்தை கவனக் குறைவால் அவனையும் மீறி நிகழ்ந்த பிழை என்பான்போல் 'வழுவினன்' என்றான் பரதன். இதனைக் கேட்ட குகன் கூறியனவாய் அமைந்த பாடல்கள் பலரும் அறிந்தவைகளே.

> **"தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்**
> **தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்**
> **போயினை என்ற போழ்து புகழினோய்! தன்மை கண்டால்**
> **ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!**
>
> **"என்புகழ் கின்றது ஏழை எயினனேன்! இரவி என்பான்**
> **தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல்**
> **மன்புகழ் பெருமை நுங்கள் மரபுளோர் பெருமை எல்லாம்**
> **உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத்து உரவுத் தோளாய்!"**
>
> (கம்பன்—2337, '38)

செம்மையின் ஆணி என்றும் தருமத்தின் வடிவமென்றும் மூத்தவனாய இராமனாற் புகழப்பட்ட பரதன், இராமனின் அடுத்த இளையவனாய குகனால் 'ஆயிரம் இராமர்களும் உனக்கு ஒப்பாவதில்லை,' என்றும், 'மரபுளோர் பெருமை அனைத்தையும் உனதாக்கிக் கொண்டாய்,' என்றும் புகழப்படுவதில் வியப்பொன்றும் இல்லை அல்லவா?

இதனையடுத்துப் பரதன், இராமன் சென்ற திசையை நோக்கித் தொழுதுகொண்டு, "எவ்வழி உறைந்தான் நம்

முன்?'' என்று உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில் கேட்பது அவ்வளவு குறுகிய நேரத்துள் குகனுடைய அன்பின் ஆழத்தைக் கண்டுகொண்டு இராமனைப் போலவே அவனுடன் சோதர உரிமை கொண்டு பேசு கிறான் என்பதை விளக்கி நிற்கிறது. குகன் இராமன் படுத்த இடத்தைக் காட்டியவுடன் பரதவள்ளல், பார்மிசைப் பதைத்து வீழ்ந்து, அம்மண்ணைக் கண்ணீரால் நீராட்டினான். அரண்மனையில் அனைவரும் ஏவல் கேட்ப அரச இன்பத்தில் இருக்கவேண்டிய இராமன், புழுதி படிந்த உடலுடன் காட்டில் வாழ்வதை நேரே கண்டு விட்டால், அஃது ஆறாத் துயரைத் தரும் காட்சிதான். ஆனால், அவனை நேரே காணாமலும் அவன் இருந்த தாகக் கூறப்பெற்ற இடத்தைப் பிறனொருவன் காட்டக் கண்ட மாத்திரையில் இத்துணை அன்பு பெருக வேண்டு மாயின், இது தலையாய தாயன்பாகவே இருத்தல் வேண்டும். தாயன்பு ஒன்றிற்குத்தான் பொருள் இல்லா விடத்தும் நினைவு தோன்றிய வழி அன்பு பெருகுதல் கூடும். எனவே, குகன் காட்டிய இடத்தைக் கண்ட மாத்திரத்தே பரதனுக்கு இத்துணைத் துயரம் ஊற் றெடுக்க வேண்டுமாயின், அவனுடைய பண்பட்ட மனம், தாயன்பைப்பெறும் அளவிற்குப் பண்பட்டது என்றே கொள்ளல் வேண்டும், அவ்வன்பில் ஏற்பட்ட துடிப்பினால் சொற்கள் வெளி வருகின்றன. 'என்னால் உனக்கு இவ் விடர் வந்ததன்றோ? 'கிழங்கையும் காயையும் அமிழ்து போல உண்டனை! வலிய புல்லில் துயின்றனை!' என்றறிந்த போதும் என் உயிர் பிரியவில்லையே! மகுடஞ் சூடும் செல்வத்தை அன்றோ யான் பெற்றுள்ளேன்!' என்னும் கருத்தில்,

''இயன்றதுஎன் பொருட்டி னால்இவ் விடர்உனக்கு என்ற
போழ்தும்,
'அயின்றனை கிழங்கும் காயும் அமிழ்துஎன! வலிய
புல்லில்

துயின்றனை!' எனவும் ஆவி துறந்திலேன்; சுடரும் காசு
குயின்றுயர் மகுடம் சூடும் செல்வமும் கொள்வன்
யானே!'' (கம்பன்—2342)

என்றே அரற்றுகிறது அவனுடைய தாயன்பு.

இதனையடுத்து இலக்குவன் இருந்த நிலையையும், செய்த தொண்டையும் வினாவி அறிந்தவுடன், 'இராமனுடன் பிறந்தவர்களுள் முடிவிலாத துன்பத்துக்கு ஏதுவானேன் நான்; அவன் அதைப் போக்கின பெருமையுடையான்,' என்று அரற்றுகிறான் பரதன். இலக்குவன் இராமன்மாட்டுக் கொண்ட அன்பையும் தான் கொண்டுள்ள அன்பையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான், ஆயிரம் இராமர்கட்கு நிகரான பரதன். அவ்வொப்புமையில் தன் அன்பு எங்கோ சென்று மறைந்து விடுவதாகத் தெரிகிறது அவனுக்கு. தாயர் மூவரையும் படகில் ஏற்றிச் செல்கின்ற குகன் கோசலையை யார் என்று வினவினவுடன் பரதன் பதில் கூறுகிறான்.

''கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல்தேவி; மூன்றுலகும்
ஈன்றானை முன்ஈன் றானைப்
பெற்றத்தால் பெறும்செல்வம் யான்பிறத்த
லால்துறந்த பெரியாள்'' என்றான்.
(கம்பன்—2366)

இப்பாடலினால் பரதன்தான் பிறந்ததற்கு எத்துணை வருந்துகிறான் என்பது புலனாகிறது. தான் ஒருவன் பிறந்ததாலல்லவா கைகேயி இவ்வரங்களைக் கேட்டுப் பெருந்தீங்கு நிகழுமாறு செய்து விட்டாள்? தான் இல்லாத பொழுது நடந்ததாகலின், இப்பெரும்பிழைக்குத் தான் பொறுப்பாளியல்லன் என்று எளிமையாகத் தன் குற்றத்தைப் போக்கிக் கொள்ளலாமேனும், பரதன் அதனைச் செய்யத் துணிய இல்லை. இதுவே அவனிடம் நாம் காணும் பெரியதொரு பண்பாடாம். இனிக் கோசலைக்குக் குகனை

அறிமுகம் செய்து வைத்தலிலும் அவன் அன்புள்ளம் வெளியாகிறது.

> **''இன்துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும்
> இளையவற்கும் எனக்கும் மூத்தான்.''**

என்று கூறுகிறான். நான்கு பேர்களைக் குறிப்பிட்டுக் கூற வேண்டியிருந்தால், மூவரை முதலிற் கூறிவிட்டு இறுதியில் யானும் என்று கூறும் முறையை ஆங்கிலேயர் நமக்குக் கற்றுக்கொடுத்ததாகப் பலரும் நினைக்கின்றனர். ஆனால், தன் இளையவர்களை முதலிற் குறிப்பிட்டுவிட்டுப் பிறகே தன்னை 'எனக்கும்' என்று குறிப்பிடும் பரதன், பண்பாட்டின் சிகரமாய் விளங்குகிறவன் அல்லனோ?

இத்துணை நற்குணம் உடைய பரதன்கூடக் கைகேயியைக் குகனுக்கு அறிமுகம் செய்து வைக்கையில் கடுஞ்சொற்கள் பேசுகிறான். அவளை இழித்துப் பேசும் பொழுதுகூட அவன் தன்னைத்தான் மிகுதியும் இழித்துக் கொள்கிறான். 'படர்எலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும் செவிலியை' என்ற அடைமொழிகளே பரதன் கைகேயிக்குத் தந்தவை. திறக்கக்கூடாது என்று கட்டளை இடப்பட்டும் பெட்டியைத் திறந்து துன்பங்களை எல்லாம் உலாவ விட்ட 'பண்டோரா'[1]வைப் போல உலகில் துன்பங்களை எல்லாம் படைத்துவிட்டாளாம் கைகேயி; மாந்தர் அனைவரும் வெறுத்து ஒதுக்க வேண்டிய 'பழியை'ச் செவிலித் தாயாய் இருந்து போற்றி வளர்த்தாளாம். இவை இரண்டு குற்றச்சாட்டுக்களும் முற்றிலும் பொருத்தமானவை கைகேயியைப் பொறுத்தமட்டில் என உணர்கிறோம். இதனை அடுத்த அடிகளில் பரதன் தன்னைத் தானே குறைவாகப் பேசிக்கொண்டு, அத்தகைய தன்னை உலகில் பிறப்பித்தவள் என்கிறான்.

---

1. Pandora opening the forbidden box and letting out all the evils into the world.

பரத்துவாசன் கண்ட பரதன்

இராமனை அழைத்து வரக் காடு சென்ற பரதனைப் பரத்துவாச முனிவன் எதிர்கொள்கிறான். முனிவன் என்ற முறையில் அவனுக்குச் செலுத்த வேண்டிய வணக்கத்தைச் செலுத்துகிறான் பரதன். அவனை வாழ்த்திவிட்டு முனிவன், 'இத்தவக்கோலத்துடன் நீ காட்டை அடையக் காரணம் யாது?' என்கிறான். இவ்வினாவைக் கேட்டவுடன் பரதன் சீற்றம் கொள்கிறான். மிக்க கோபத்தையும் மனக் கொதிப்பையும் கொண்ட பரதன், 'ஐயனே, நான் இவ்வாறு வந்தது ஏன் என்று நீ வினவியது உன் தவ வடிவத்திற்குப் பொருத்தமில்லாத வினாவாகும்,' என்கிறான்.

இதே வினாவைத்தான் சற்று முன்னர்க் குகனும் கேட்டான். ஆனால், அதற்குச் சீற்றமில்லாமல் விடை இறுத்த பரதன், பரத்துவாச முனிவனிடம், மட்டும் சீற்றங் கொள்ளக் காரணம் யாது? பரதனுடைய அறிவு நுட்பத்தையே காட்டுகின்றன இச்செயல்கள். குகனுடைய அன்பின் பெருக்கை அறியத்தான் பரதனுக்கு வாய்ப்பு இருந்தது; ஆனால், அவனுடைய அறிவின் திறம் எத்தகையதோ என மருண்டான். மேலும், வேடனாகிய குகன் அறிவாற்றல் படைத்திருக்க முடியாது என்றுங் கருதியிருத்தல் கூடும். எனவே, குகன் கேள்வியில் பரதன் தவறு காணவில்லை. அன்றியும், இராமன் மாட்டுக்கொண்ட பேரன்பில் இருவரும் (பரதனும், குகனும்) ஒன்றாகவே திளைப்பவராகலின், குகனது வினாவைப் பரதன் வேறு விதமாகக் கருதவில்லை. இம்மட்டோடும் அன்றி, குகன் கேட்ட வினாவையும் பரத்துவாசன் வினாவையும் ஒப்பு நோக்குகையில் ஒரு வேறுபாடும் காணப்படுகிறது. 'எய்தியது என்னை?' என்று மட்டுந்தான் குகன் வினவுகிறான். ஆனால், முனிவனோ, 'எடுத்த மாமுடி சூடிநின் பால் இயைந்து, அடுத்த பேரரசு ஆண்டிலை ஐய நீ?' என்று வினவியதுதான் பரதனுடைய சினத்திற்குக் காரணமாகி

விட்டது. தான் அரசாட்சியை மறுத்துவிட்ட காரணத்தைக் குகனும் புரிந்துகொள்ளவும், இம்முனிவன் இவ்வாறு கேட்பது பரதனுக்குப் பெருந்துயரத்தை விளைத்து விட்டது. 'பரதன் எதனைச் செய்வான், எதனைச் செய்ய மாட்டான்?' என்பதை இம்முனிவன் அறியவில்லையே! எனவே, பரதன் முனிவனிடம் விவரமாகத் தான் வந்த கருத்தை அறிவிக்கிறான். 'இராமபிரானை மீட்டும் அழைக்க வந்துளேன். அவன் வராவிடில் யானும் அவனுடனே தவம் இயற்றுவேன்,' என்கிறான். இது நிற்க.

கோசலை கண்ட பரதன்

தானே பெறாவிடினும் பரதனை முழுவதும் வளர்த்த கோசலை கண்ட பரதனைக் காண வேண்டும். நீல மேனியை உடைய ஒரு பெருமகனைப் பெற்றெடுத்த அப்பிராட்டி அவனை வளர்க்க முடியவில்லை; இராமன் கைகேயி மாட்டு வளர்ந்தான். என்றாலும், கோசலைக்கும் நீலமேனியையுடைய ஒரு மைந்தன் கிடைத்துவிட்டான் வளர்ப்பதற்கு. பரதனை வளர்க்கும் காலத்தில் அவனுடைய ஒப்பற்ற குணநலங்களில் ஈடுபட்ட கோசலை, பலகாலும் இராமனையும் பரதனையும் ஒப்பிட்டுப் பார்த்திருப்பாள் என்றே நினைக்க வேண்டியுளது. முடி சூடி மகன் வருவான் என்று இராமன் வரவை எதிர்பார்த்து நின்ற கோசலை முன்னர், 'குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்ற வெண்குடையும் இன்றி, ஒரு தமியனாய்ச் சென்றான்' இராமபிரான். கண்டதாய் மனம் திடுக் குற்றது. 'நினைந்தது என்? இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு?' என்ற வினாவை எழுப் பிற்று அத்தாய் மனம். தாய் எழுப்பிய இந்த வினாவிற்கு மைந்தன் விடை கூறுகிறான், 'நின் காதல் திருமகன், பங்க மில் குணத்து எம்பி பரதனே, துய்கமாமுடி சூடுகின் றான்,' என்று. இவ்விடையைக் கேட்ட தாய் மனம் என்ன பாடு பட்டிருக்குமோ, நாம் அறியோம்! ஆனால்,

கோசலை மனம் உடனே அமைதியடைந்துவிட்டது. இதோ அவள் பேசுகிறாள்.

''முறைமை அன்றுஎன்பது ஒன்றுஉண்டு; அதல்லது
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனால்;
குறைவி லன்''எனக் கூறினள்.

(கம்பன்—1609)

மகன் முடி கவிக்கவில்லை என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்திருக்கும் தாயுள்ளங்கூடப் பரதனை நினைக்கும் பொழுது 'நின்னினும் நல்லன்' என்று கூறிற்று என்றால், இதனைவிடப் பரதனுடைய பண்பாட்டிற்குச் சான்று யாது வேண்டும்? பரதனால் தன் மகனுடைய வாழ்வு கெட்டது என்று தெரிந்த அந்த நேரத்திலேயே, 'நிறை குணத்தவன்' என்றும், 'குறைவிலன்' என்றும் கோசலை குறிக்கிறாள் பரதனை என்றால், பரதனைப் பற்றி வேறு புகழுரைகள் வேண்டுமா? ஆனால், கோசலை இவ்வாறு பேசும் நேரத்தில் பரதன் அயோத்தியில் இல்லை; கேகய நாட்டில் பாட்டன் வீட்டில் இருக்கிறான்.

இவ்வளவு சிறப்பாகப் பரதனைப் பற்றிப் பேசிய கோசலையின் மனத்திற்கும்-இராமனைப் பிரிந்து வருந்தும் பெற்ற மனத்திற்கும்-ஒரு போராட்டம் நிகழ்ந்திருத்தல் வேண்டும். பரதன் தவறில்லாதவன் என்று கோசலை மனம் அரற்ற, அவன் தவறுடையவன் என்று இராமனைப் பெற்ற மனம் அரற்றியிருத்தல் வேண்டும். இராமன் காடு செல்லும் வரையில் பரதனைப் புகழ்ந்த கோசலை, அவன் சென்றுவிட்ட பிறகு ஓரளவு மனம் மாறிவிட்டாள். அதிலும், இராமன் காடு செல்ல வேண்டும் என்ற கைகேயி யின் கட்டளையை அறிந்த பிறகு அவள் பரதன் மேலும் ஐயுறவு கொண்டுவிட்டாள். பரதனைப் பெற்ற தாயாயும் தசரதனிடத்தில் அதிக செல்வாக்குள்ளவளாயும் இருந்த கைகேயி, அரசனை ஏமாற்றிப் பட்டத்தைத் தன் மகனுக் காகப் பறித்திருக்கலாம். இவ்வாறு அவள் செய்தது

பரதனுக்குக்கூடத் தெரியாமல் இருக்கலாம் என்று நினைத்தாள் கோசலை.

ஆனால், இராமனை ஏன் காட்டிற்கு அனுப்ப வேண்டும்? நல்ல அரசியல் அறிவு பெற்றவரே இதனைச் செய்வர்! உரிமையுடையவனிடமிருந்து அரசாட்சியைச் பறித்துக் கொள்வது ஒரு செயல். ஆனால், அவ்வுரிமையாளன் நாட்டு மக்கள் கண்ணெதிரே உலவி வருவானாகில், முடி பறித்து ஆள்பவனுக்கு ஆபத்துத்தான் எஞ்சும். முடி இழந்தவன் மேல் மக்கள் கருணை சிறிது சிறிதாகச் சேர்ந்து, இறுதியில் ஆள்பவனுக்கே உலை வைத்துவிடும். எனவே, அறிவுடைய ஒருவன் உரிமையுடையவனை நீக்கி விட்டு, அவன் முடியைப் பெற்றால், உடனே உரிமையாளனை மக்கள் முன்னிலையிலிருந்து அகற்றி விட வேண்டும். "எதிரே இல்லாதவன் நினைவை உடன் மறப்பதே பொது மக்கள் பண்பாடு."[1] இதனால், அரசியல் சூழ்ச்சியை நன்கு அறிந்த ஒருவனே இராமனைக் காட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும். அவன் யார்? இவ்வாறு நினைந்து பார்க்கிறாள் கோசலை. கைகேயி இவ்வளவு ஆழ்ந்து அரசியல் நுணுக்கங்களை ஆய்பவள் அல்லள்! எனவே, அவளே செய்ததன்று இச்செயல்! யாரோ அவளைத் தூண்டியிருத்தல் வேண்டும்! அது யாராய் இருக்கலாம்? ஒரு வேளை தசரதனாகவே இருக்கலாமா! அவ்வாறுதான் அப்பெற்ற மனம் முதலில் ஐயுற்றது. தசரதனும் கைகேயியும் சேர்ந்து கொண்டு இவ்வாறு செய்து விட்டனர் என்றே கோசலை நினைத்து விட்டாள். ஆனால், பிறகு அரசன் இருப்பிடம் சென்று அவன்படும் பாட்டைக் கண்ட பின் தசரதனுக்கு இச்சூழ்ச்சியில் எவ்விதப் பங்கும் இல்லை என்பதையும், அவனே இச்சூழ்ச்சியால் முதலில் அடிபட்டவன் என்பதையும் கண்டு கொண்டாள் கோசலை.

---

1. Public memory is short lived

மறுபடியும், 'சூழ்ச்சியின் அடிப்படை யார்?' என்ற வினா கோசலையை வாட்டத் தொடங்கிவிட்டது. எவ்வளவு முயன்று பார்த்தும், கைகேயி மட்டுமே இதனைச் செய்தாள் என்று கோசலையால் நினைக்க முடியவில்லை. அவளை யாரோ தூண்டி விட்டு, நன்றாக முறுக்கியும் விட்டுவிட்டனர் என்பதையும் கோசலை உணர்கிறாள். யார் தூண்டியவர்? கூனியைப் பற்றிக் கோசலை நினைக்கவும் இல்லை. 'அரசரில் பிறந்து, அரசரில் வளர்ந்து, அரசரில் புகுந்து பேரரசியான' கோசலை கேவலம் பணிப்பெண்ணாகிய மந்தரை யால் இந்த அந்தரம் வந்தது என்பதைக் கருதிப் பார்க்கவும் நியாய மில்லை. பிறர் கூறினாலும், அவளுடைய அரசியுள்ளம் நம்ப மறுத்திருக்கும். அவ்வாறாயின், அடிப்படை யார்? மீட்டும் அதே வினாத்தான் எழுகிறது.

பல முறையும் ஆராய்ந்து, வேறு வழியே இல்லாமல், கோசலை பரதனைப் பற்றி ஐயுறவு கொள்ளலானாள். சூழ்ச்சி நடைபெறும் காலத்தில் பரதன் அயோத்தியில் இல்லை என்பது உண்மைதான். எனவே, பரதன் தூண்டி யிருத்தல் இயலாது என்று முதலில் நினைத்தாள். ஆனால், பிறர் ஒருவர் மேலும் ஐயங்கொள்ளவியலாத நிலையில் பரதன் மேற்கொண்ட சிறு ஐயம் பெரிய உறுதிப்பாடாய் அவள் மனத்தில் நிலைத்துவிட்டது. அவன் ஒரு வேளை கேகய நாட்டிற்குச் செல்வதற்கு முன்னரே இவ்வாறு ஒரு கருத்தைத் தாயிடம் கூறிப் போயிருந்தாலோ? நல்லறிவும், ஆழ்ந்த கல்வியறிவும் உடையவனாகிய பரதனுக்கே இந்த அரசியல் சூழ்ச்சி தெரிந்திருக்க நியாயம் உண்டு. எனவே, அவனே இதனைச் செய்தான் என்ற முடிபுக்கே வந்து விட்டாள் கோசலை. பரதனை நன்கறிந்த அவள் மனம் இதை நம்ப மறுத்தாலும், அறிவின் துணை கொண்டு ஆய்ந்து இத்தவறான முடிவிற்கே வந்துவிட்டாள் முதல் தேவியாகிய கோசலை. பாவம்! மந்தரை என்ற சூழ்ச்சி யின் பிண்டம் பெண் வடிவத்தில் உட்பகையாக அரண்

மனையின் உள்ளேயே இருப்பதைப் பண்பாடுடைய கோசலை அறியவில்லை. 'சந்தர்ப்பச்சான்றுகள்'[1] அனைத்தும் பரதனுக்கு எதிராகவே அமைந்து இருத்தலின், அவற்றின் எதிரே கோசலை தன் உள்ளத்துக்கும் அன்புக்கும் எதிராக இம்முடிவுக்கு உறுதியாக வந்துவிட்டாள்.

பரதனைப் பற்றி இத்தவறான முடிபுக்குக் கோசலை உந்தப்பட்டாலும், அவள் தவறியும் இதை ஒருவரிடமும் கூறவில்லை. அவள் மனத்துள்ளேயே வைத்துச் சாம்பினாள். இறுதியாகப் பாட்டன் வீட்டிலிருந்து மீண்ட பரதன், அவளைச் சென்று வணங்கினான்; அழுதான்; கதறினான்; அவள்மீது குற்றமும் சாட்டினான். 'அன்னையீர், இராமன் திருவடியை யான் காணவில்லை. அரசனாகிய இராமன் இவ்வயோத்தியை விட்டு நீங்கலாமா? அவனைப் பிடித்துத் தடுத்து நீர் நிறுத்தவில்லையே! அவனைத் தடுக்காமையால் பெரும்பிழை செய்துவிட்டீர்!' என்னுங் கருத்தில் பேசினான்.

''அடித்தலம் கண்டிலேன் யான்என் ஐயனைப்
படித்தலம் காவலன் பெயரற் பாலனோ?
பிடித்திலிர் போலும்நீர்? பிழைத்தி ரால்!'' எனும்;
பொடித்தலம் தோளுறப் புரண்டு சோர்கின்றான்.'

(கம்பன்—2192)

பரதன் தரையில் விழுந்து அழுது புரண்டு வருந்துவதையும், அவன் கூறுவதையும் கண்டு, கேட்ட கோசலையின் உறுதி ஆட்டம் கண்டுவிட்டது. தான் பரதனைப் பற்றிக் கொண்டிருந்த முடிபு எத்துணைத் தவறானது என்பதை அவள் உணரத் தலைப்பட்டுவிட்டாள். 'தானும் சேர்ந்து சூழ்ச்சி செய்தவன் இவ்வாறு அழுது புலம்பல் கூடுமா? ஒரு வேளை பிறர் மெச்சச் செய்வதாயினும், இவன் அழுகை

---

1. Circumstancial evidences

யும் சொற்களும் அடிவயிற்றிலிருந்தல்லவா வெளி வருகின்றன? இவ்வளவு உணர்ச்சியுடன் பேசி அழும் ஒருவன் எவ்வாறு தவறு இழைத்திருத்தல் கூடும்? ஒரு வேளை இவனுக்கு ஒன்றும் தெரியாமலே கைகேயி இவ் வஞ்சகத்தைச் செய்திருந்தால்......!' என்று நினைத்தாள். அதுவரை அவள் நினைவு சரியானதே!

கோசலை பெண் என்ற காரணத்தால் இன்னும் ஒரு படி மேலே சென்றுவிடுகிறாள். அவள் அந்த ஒரு படி மேலே செல்வதால், நம்முடைய மதிப்பில் ஒரு படி கீழிறங்கி விடுகிறாள். தன் ஐயம் முற்றிலும் தவறானது என்பதை இப்பொழுது நன்கு அறிந்து விட்டாளே! இது வரை யாரிடமும் வாய் விட்டுக் கூறாமல் இருந்த இந்த ஐயத்தை இது தவறானது என்பது நன்கு தெரிந்துவிட்ட இப் பொழுது உடனே மறந்திருக்கலாம். அவ்வாறு செய்திருப் பின், பரதனுடைய வருத்தத்தை மிகுதிப்படுத்தாமல் இருந் திருக்கலாம். அவள் தன் ஐயத்தைக் கூறாமலே இருந் திருப்பினும், பரதன் தான் நினைத்தவற்றைச் செய்யத் தான் போகிறான். அவ்வாறு இருந்தும், கோசலை தன் ஐயத்தை அவனிடமே கூறியது சற்று நல்லதல்லாத இயல்பைக் காட்டுகிறது. பரதன் படுந்துயரத்தைக் கண்ட கோசலை மெள்ள நினைக்கத் தொடங்கி, இறுதியில் அவனிடமே கேட்டும்விட்டாள். 'இவனுடைய மனத்தில் குற்றம் ஒன்றும் இருத்தற்கில்லை. இவன் தூய்மை யானவனே' என்று துணிந்தும், 'கைகேயி செய்த வஞ்சத்தை நீ அறியாயா?' என்றாள்.

''மையறு மனத்துஒரு மாசு உளான்அலன்
செய்யனே,'' என்பது தேரும் சிந்தையாள்,
''கைகயர் கோன்மகள் இழைத்த கைதவம்
ஐய! நீ அறிந்திலை போலு மால்'' என்றாள்.

(கம்பன்—2917)

கோசலையின் இந்தச் சொற்கள் பரதனை அடியோடு உலுக்கிவிட்டன. அவன் கனவினுங் காணாத ஒரு

குற்றத்தை அவன்மேல் சுமத்தாமல் சுமத்தி விட்டாள் அவனை வளர்த்தெடுத்த தாயாம் கோசலை. நெருப்பை மிதித்தவன் போலத் துள்ளினான் அப்பெருமகன். கோசலையா இவ்வாறு கேட்டுவிட்டாள்? ஏன்? தன் மேலும் கோசலை ஐயங்கொள்ளும் ஒரு காலம் வந்துற்றதே என்று வருந்தினான்; அதிற் பிறந்த கோபத்துடனும் எல்லையற்ற துயரத்துடனும் தாயின் எதிரே கடுமையான வஞ்சினம் ஒன்றைக் கூறுகிறான். இருபது பாடல்களில் அவனுடைய வஞ்சினம் தொடர்கிறது. 'யான் இதில் பங்கு கொண்டிருப்பேனாகில் இன்னார் இன்னார் செல்கின்ற நரகங்கட்குச் செல்வேனாக!' என்று கூறி முடித்தான். இக் கொடிய வஞ்சினத்தைக் கேட்டுக் கோசலை மருண்டு விட்டாள்.

வஞ்சினம் கூறிய பரதனை அழுத கண்ணீருடன் அப்படியே மார்புறப் புல்லிக்கொண்டாள் அத்தாய். ஆம்! சேயையும் தாயையும் பிரித்து நின்ற ஒன்று சேயின் வஞ்சினத்தால் அறுந்து வீழ்ந்துவிட்டது. விம்மலுடனும் விக்கலுடனும் மகனைத் தழுவிய தாய் இதோ பேசுகிறாள்:

"முன்னை நின்குல முதலு ளோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கு நீர்மையார்?
மன்னர் மன்னவா!" என்று வாழ்த்தினாள்
உன்ன உன்னநைந்து உருமி விம்முவாள்.

உன்ன உன்னநைந்து உருகும் அன்புகூர்
அன்னை தாளின்வீழ்ந்து இளைய அண்ணலும்
சொன்ன நீர்மையால் தொழுது மாழ்கினான்.

(கம்பன்—2220, '21)

['ஐயனே, உன் குலத்து முன்னர்த் தோன்றிய மன்னர் களை எல்லாம் எடுத்து நோக்கினும், உன்னை ஒத்த ஒருவனைக் காண்டல் இயலாது. மன்னர் மன்னவா,' என்று மனங்கனிந்து வாழ்த்தினாள்.]

இப்பொழுது இராமன் மீண்டிருந்தாலும் அவனை நீக்கிப் பரதனுக்கே முடியைத் தரும் மனநிலையில் உள்ளாள் கோசலை. எனவே, 'மன்னர் மன்னவா!' என்று அவள் விளித்தது உபசாரத்திற்கன்று. உண்மையில் அவள் மனத்தில் தோன்றிய ஓர் எண்ணமாகும் அது. 'நிறை குணத்தவன் நின்னினும் நல்லனால்,' என்று பரதனைப் பற்றி இராமனிடம் அவள் கூறிய சொற்களைப் பரதன் இதோ மெய்ப்பித்துவிட்டான். எனவே, அத்தாய் உளங் குளிர்ந்து அவனையே 'மன்னவா!' என்று விளிக்கிறாள். கைகேயி வரம் பெற்றுவிட்டதால் முறைப்படி அவனே அரசன் என்று அவள் இவ்வாறு கூறவில்லை; உண்மையி லேயே தனக்குண்டான மகிழ்ச்சி காரணமாகவே இவ்வாறு கூறினாள்.

ஆனால், அவள் எந்தக் கருத்தால் 'மன்னர் மன்னவா!' என்று விளித்திருப்பினும், பரதன் செவியில் அச்சொற்கள் நாராசம் போல வீழ்ந்தன. எந்த அரசப் பதவி அவனை இந்த நிலைக்குக் கொண்டு வந்ததோ, அந்த அரசப்பதவி யின் பெயரையே அவனுக்குச் சூட்டினால் அவன் வருந்தாமல் இருத்தல் கூடுமா? கைகேயி இழைத்த தவறு காரணமாகப் பரதன் விளையாட்டாகவேனும் தன்னை யாராவது 'அரச!' என்று விளித்தால் அழுதுவிடும் நிலையில் உள்ளான். இந்தச் சூழ்நிலையில் கோசலையே தன்னை 'மன்னர் மன்னவா!' என்று அழைத்த சொற்கள் காதில் விழுந்தால், அவன் என்ன பாடு படுவான்! எனவே, அவள் கால்களில் வீழ்ந்து மீண்டும் அரற்றுகிறான். 'சொன்ன நீர்மையால் தொழுது மாழ்கினான்,' என்ற தொடருக்கு 'மன்னர் மன்னவா,' என்று கோசலை கூறிய சொற் களின் இயல்பை அறிந்து வருந்தினான் என்று பொருள் கொள்வதே மிகுதியும் பொருத்தம்போலத் தெரிகிறது. 'சொன்ன நீர்மையால்' என்பதற்கு வணங்க வேண்டிய முறைப்படி என்று பொருள் கூறிக் கம்பன் பாடலைச் சுவையற்றதாகுமாறு செய்தலினும் இவ்வாறு

பொருள் கொள்வது நலமே என நினைக்க வேண்டியுளது.

இதனையடுத்துக் கோசலை பரதனிடம் பேசவேண்டிய நிலை மீட்சிப் படலத்தில் வருகிறது. முன்னர் நடைபெற்ற செய்திகள் நடந்து பதினான்கு ஆண்டுகள் சென்று மறைந்தன. அன்று இராமன் வரவேண்டிய நாள். மாலை வரையும் வழிமேல் விழி வைத்துக் காத்து நின்றான் அறத்தின் வடிவினனாய பரதன். இராமன் வரவில்லை. அது அவனுடைய மனத்தில் பெருந்துயரத்தை மூட்டி விட்டது. இத்தகைய ஒரு நிலை வருமாயின் யாது செய்ய வேண்டும் என்று அவன் முன்னரே முடிவு செய்து வைத்துள்ளான் அல்லனோ? எனவே, தம்பியாகிய சத்துருக்கினனை அழைத்தான்; அரசியலை அவன் விரும்பா விடினும் அவனிடமே ஒப்படைத்தான்; பெருந்தீ மூட்டிவிட்டான்; அதில் வீழ்ந்து தன் வாக்குறுதியை முடிக்க முற்பட்டு விட்டான். 'செம்மையின் ஆணி'யான பரதன் புறப்பட்டு விட்டால், யார் அவனைத் தடுக்கும் உரமுடையார்? யாவரும் அஞ்சி அரற்றி நிற்கின்றனர். பெற்ற தாயாகிய கைகேயி, பரதன் எதிரே வரவும் அஞ்சி, எங்கோ இருக்கின்றாள். என்றாலும், என்ன! எந்தத் தாயைப் பரதன் உண்மையில் தாய் என்று மதித்தானோ, அந்தத் தாய்—கோசலை—ஓடோடியும் வந்தாள் செய்தி அறிந்து. கடமைக்காகவே உயிர் வாழ்ந்த அக்கண்ணியன் தாயைக் கண்டும் வாளாவிருப்பானா? உடனே அவள் அடி வீழ்ந்து வணங்கினான்.

வீழ்ந்து வணங்கிய பரதனை அப்படியே தன் கைகளால் வாரி எடுத்துப் பற்றிக்கொண்டாள் கோசலை. 'ஐயனே, இது வரை, தசரதர் இறந்ததையும் இராமன் வனம் சென்றதையும் விதியின் செயல் என்றிருந்தேன். இராமன் குறித்த நாளில் வராமற்போனதும் அவ்விதியின் விளைவே யன்றோ? இந்நிலை உணராமல் நீ யாது செய்யத் துணிந்து விட்டாய் என் மகனே!' என்கிறாள்.

"மன்இழைத்ததும் மைந்தன் இழைத்ததும்
முன்இழைத்த விதியின் முயற்சியால்
பின்இழைத்ததும் எண்ணில் அப்பெற்றியால்
என்இழைத்தனை? என்மகனே!" என்றாள்.

(கம்பன்—10178)

மேலும் கூறுவாளாய், 'மகனே, நீ தீப்புகுந்தால் உன்னுடன் அனல் புகும் தாயராகிய எம்முடன் இது நிற்பதன்றே! உலகு அனைத்தும் தீப்புக நீ காரணமாதல் முறையா? (10179) உன் செயல்களை இதுவரை கண்டு வந்திருக்கிற எங்கட்கு அவை அனைத்தும் அறத்தின் சாரமாகவே உள்ளன. உன் பெருமையை நீயே அறியாய்! கோடிக் கணக்கான இராமர்கள் கூடினாலும், உன்னுடைய அருளுக்கு எதிராவரோ? ஐய, புண்ணியத்தின் வடிவான நின்னுயிர் போனால், மூவுலகங்களும் அவற்றில் வாழும் உயிர்களும் அழிந்துவிடுமே!' என்ற முறையில் பேசுகிறாள்.

"தரும நீதியின் நற்பயன் ஆவதுஉன்
கருமமேயன்றிக் கண்டிலம் கண்களால்;
அருமை ஒன்றும் அறிந்திலை; ஐய!நின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ?

"எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்அருளுக்குஅருகாவரோ?
புண்ணியம்எனும் நின்உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?"

(கம்பன்—10180, '81)

இராமனைத் தேடி அன்பின் மிகுதியால் காட்டுக்கு வந்த பரதனைக் கண்ட குகன், 'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின்?' என்றான். அன்பையும் கடந்து கடமை என்பதற்காகவும் கூறிய சொற்களைக் காப்பான் வேண்டியும் தீயில் விழப்போகும் பரதனை 'எண்ணில்லாத இராமர்கள் ஒன்று கூடினாலும் உனக்கு இணையாகார்!' என்கிறாள் வளர்த்த தாய்!

"மன்இழைத்ததும் மைந்தன் இழைத்ததும்
மூன்இழைத்த விதியின் முயற்சியால்
பின்இழைத்ததும் எண்ணில் அப்பெற்றியால்
என்இழைத்தனை? என்மகனே!" என்றாள்.

(கம்பன்—10178)

மேலும் கூறுவாளாய், 'மகனே, நீ தீப்புகுந்தால் உன்னுடன் அனல் புகும் தாயராகிய எம்முடன் இது நிற்பதன்றே! உலகு அனைத்தும் தீப்புக நீ காரணமாதல் முறையா? (10179) உன் செயல்களை இதுவரை கண்டு வந்திருக்கிற எங்கட்கு அவை அனைத்தும் அறத்தின் சாரமாகவே உள்ளன. உன் பெருமையை நீயே அறியாய்! கோடிக் கணக்கான இராமர்கள் கூடினாலும், உன்னுடைய அருளுக்கு எதிராவரோ? ஐய, புண்ணியத்தின் வடிவான நின்னுயிர் போனால், மூவுலகங்களும் அவற்றில் வாழும் உயிர்களும் அழிந்துவிடுமே!' என்ற முறையில் பேசுகிறாள்.

"தருமநீதியின் நற்பயன் ஆவதுஉன்
கருமமேயன்றிக் கண்டிலம் கண்களால்;
அருமை ஒன்றும் அறிந்திலை; ஐய!நின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ?

"எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்அருளுக்குஅரு காவரோ?
புண்ணியம்எனும் நின்உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?"

(கம்பன்—10180, '81)

இராமனைத் தேடி அன்பின் மிகுதியால் காட்டுக்கு வந்த பரதனைக் கண்ட குகன், 'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின்?' என்றான். அன்பையும் கடந்து கடமை என்பதற்காகவும் கூறிய சொற்களைக் காப்பான் வேண்டியும் தீயில் விழப்போகும் பரதனை 'எண்ணில்லாத இராமர்கள் ஒன்று கூடினாலும் உனக்கு இணையாகார்!' என்கிறாள் வளர்த்த தாய்!

தந்தை சொல்லைக் காக்கக் காடு சென்று பதினான்கு ஆண்டுகள் வாழ்ந்த இராமனைக் காட்டிலும் தான் சொல்லிய சொல்லையே காக்கத் தீயில் வீழ்ந்து உயிரை விடத் துணிந்த பரதன் பன்மடங்கு உயர்ந்தவனாதல் கண் கூடு, தந்தை கட்டளையை மேற்கொண்டு நடந்த இராமன் கடமையைச் செய்தான். ஒருவரும் ஏவா திருக்கவும் தன் சொல்லைக் காப்பவன் 'அருள்' உடைய யவனாகிறான். தந்தையின் கட்டளை தனது கடமை என்பவற்றை மேற்கொண்ட இராமனது அன்பைக் காட்டி லும், தன் சொல்லைக் காப்பான் உறுதி பூண்ட பரதனது அருள் உயர்ந்ததாதலை நன்கு அறியலாம். இதனைத் தான் கற்றறிவுடையவளாய கோசலை, 'அண்ணல் நின் அருளுக்கு அருகாவரோ?' என்று புகழ்கிறாள்.

கோசலை கூறும் இந்தப் புகழ் உரைகளும், 'இராமன் இன்றில்லாவிடினும் நாளை வருவான்,' என்றுரைத்த மொழிகளும் பரத வள்ளலின் செவியில் நுழையவே இல்லை. இதனையடுத்துப் பல நீதிகளையும் அப்பெரு மாட்டி கூறுகிறாள், எனினும், பரதன் தன் குறிக்கோளை விடவில்லை. இரண்டே வாதத்தில் தாயை மடக்கி விடு கிறான் அம்மகன். 'வாய்மை தவறாத தசரதன் மகனும், சொற்படி நடந்த இராமன் தம்பியும் அல்லனோ யான்? அவ்விருவ்ரும் நன்று செய்தனர் என்று கூறினால், என்னை மட்டும் இழுக்குக் கூறுவது யாங்ஙனம்?' என்கிறான். இதை விட ஒருபடி மேற்சென்று இராமனிடம் குற்றங்காண் கிறான் பரதன். 'தாயே, தாய் சொல் கேட்டும், தந்தை சொல் கேட்டும் வனம் சென்று, அன்புடையார்களிடத்து அன்பை முழுவதும் மறத்தல் என்பது இராமனுக்கே கடன். நான் அவ்வாறு செய்ய உடன்படேன்,' என்கிறான்.

''தாய்சொல் கேட்டலும் தந்தைசொல் கேட்டலும்
பாசத்து அன்பினைப் பற்றுஅற நீக்கலும்
ஈசற் கேகடன்; யான்அஃது இழைக்கிலேன்.''

(கம்பன்—10187)

என்பது அவன் கூற்று. தான் வனஞ்சென்று எவ்வளவு வேண்டியும் வாக்குறுதியை மீறக் கூடாது என்று எடுத்துக் காட்டி வரமறுத்த இராமன், இப்பொழுது 'வருவேன்' என்ற வாக்கை மீறினான் என்ற வருத்தம் பரதனுக்கு.

இதுகாறுங் கூறியவற்றால் கோசலை கண்ட பரதன் எத்தகையவன் என்பதை ஒருவாறு கண்டோம்.

இராமன் காடு செல்லுமுன்னர்ப் பரதன் அயோத்தியில் எவ்வாறு வாழ்ந்தான் என்பதை நாம் அறிதல் இயலாது. ஆனால், இராமனிடம் சென்று அவன் பாதுகைகளைப் பெற்று வந்த பின்னர் அவன் வாழ்வு எவ்வாறு நடை பெற்றதென்பதை அறியப் பரத்துவாச முனிவன் கூற்றாய் அமைந்துள்ள இரண்டு பாடல்கள் போதுமானவை. 'வேர்க்கின்ற உடலினை உடையனாய், விழியிற் பொழியும் மழையை உடையனாய், ஊழ்வினையை வெறுத்த சிந்தையை உடையனாய், தென்திசை தவிரப் பிறிது திசை நோக்காதவனாய், துன்பமே ஒரு வடிவாகக் கொண்டவனாய், ஐந்து பொறிகளையும் அவற்றின் வழிச் செல்லாமல் தடுத்தவனாய், காய் கனிகளையே நுகர்ந்து புற்படுக்கையில் உறங்குபவனாய், நந்திக் கிராமத்திலேயே அல்லும் பகலும் இருப்பவனாய், ஓயாது இராம நாமத்தையே கூறிக் கொண்டிருப்பவனாய் ஒருவன் உளன் எனில், அவனே பரதன்,' என்னுங்கருத்துப்பட,

> "வெயர்த்த மேனியன் விழிபொழி மழையன்மூ வினையைச்
> செயிர்த்த சிந்தையன் தெருமரல் உழந்துஉழந்து அழிவான்
> அயிர்த்து நோக்கினும் தென்திசை அன்றிவேறு அறியான்
> பயிர்த்த துன்பமே உருவுகொண்டு என்னலாம் படியான்

> "இந்தி யங்களைந்து இருங்கனி காய்நுகர்ந்து இவுளிப்
> பந்தி வந்தபுல் பாயலான் பழம்பதி புகாது
> நந்தி யம்பதி இருந்தனன் பரதன்நின் நாமம்
> அந்தி யும்பகல் அதனினும் மறப்பிலன் ஆகி."
>
> (கம்பன்—10143, '44)

என அமைந்துள்ளன அச்செய்யுட்கள்.

பரதனுடன் பழகும் வாய்ப்புப் பெற்றவர் பலரும் அவனைப்பற்றி என்ன நினைக்கின்றனர் என்பதை இது காறுங்கண்டோம். இராமன், இலக்குவன், தசரதன், குகன், விசுவாமித்திரன், கோசலை ஆகியவர்கள் பல திறப் பட்ட பண்பாடுடையவர்கள். கலை ஞானங்கட்கெல்லாம் உறைவிடமான இராமனும் விசுவாமித்திரனும் மட்டுமா பரதனைப் போற்றுகின்றனர்? கற்றறிவில்லாத குகனும் போற்றுகிறான். பரதன் பிறந்ததால் நேரடியாகத் துன் பத்தை அடைந்த கோசலையும் அவனைப் போற்றுகிறாள். இதிலும் ஒரு சிறப்பு இருக்கிறது. பரதனிடத்து முதலில் வெறுப்புக் கொண்டிருந்த இலக்குவன், குகன், கோசலை என்ற மூவரும் இறுதியில் அவனிடம் அளவற்ற பரிவு காட்டு கின்றனர். உலகிடைப் பிறந்து வாழும் ஒருவன் அனை வரிடமும் நற்பெயர் பெறுதல் இயலாது. ஆனால், பரதனை மேலே கூறிய அனைவரும் புகழ்கின்றனர். அதனால், அவன் உலகியலுக்கே மாறுபட்டவனாகக் காட்சியளிக் கிறான். எவ்வகை மனநிலையுடையாரும் அவன் செயலில் சிறப்பையே காண்கின்றனர். இல்லறத்தாரும் துறவறத் தாரும், ஆணும், பெண்ணும், கற்றவரும், கல்லாதவரும் 'உண்ணும் நீரினும் அவனையே (பரதனையே) உகப்பார்' எனில், இத்தகைய ஒரு பாத்திரத்தை இலக்கிய உலகிற் கூடக் காண்டல் அரிதென்றே கூறல் வேண்டும். இது வரைப் பரதனைப்பற்றிப் பிறர் பேசியவற்றையும், அவனிடம் பிறர் நடந்து கொண்டதையுங் கண்டோம். இனி அவன் பிறரிடம் பேசுவதையும், பிறரிடம் நடந்து கொள்வதையுங் காண்போம்.

பெற்ற தாயாகிய கைகேயியிடம் பரதன் பேசுவதைக் காண்டல் வேண்டும். ஆனால், இந்த உரையாடலில் முழுப் பகுதியையும் அவனே பெற்றுவிடுகிறனாகலின், அதனை வேறு கோணத்திலிருந்தே காண்டல் வேண்டும்.

□□□

'நேர்மையின் ஆணி'

இராமனும் பரதனும்

இராமனும் அவனுடைய தம்பியர் மூவரும் ஒரே நாளில் சற்று முன்னும் பின்னும் பிறந்தவரேயாவர். எனவே, அவர்களுள் பெரியவன் சிறியவன் என்ற வேறுபாடு பெரிதாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. இவ்வாறு இருந்தும், சில நாழிகை முன் பின்னாய்ப் பிறந்த காரணத்தினாலேயே அண்ணன் தம்பி என்ற முறை பாராட்டினர் அச்சோதரர். இதில் ஒரு வியப்பு என்னை எனில், ஏனைய மூவரும் இராமனை அண்ணனாக மட்டும் அல்லாமல், தந்தையாகவும், குருவாகவும்,-ஏன்?-வணக்கத்துக்குரிய வழிபடு தெய்வமாகவுமே மதித்தனர். அனைவருக்கும் ஒருசேரத் தண்ணளி செய்யும் தெய்வம் போல அப்பெருமகனும் மூவரிடமும் ஒத்த அன்பு காட்டினான்.

இலக்குவன், தன்னைப் பொறுத்தவரை, அண்ணனை மிகுதியும் அண்ணனாகவே போற்றினான். பரதனோ, இராமனைத் தந்தையாகவே மதித்து வழிபட்டான். இதில் வேடிக்கை யாதெனில், இலக்குவன் பரதனுக்கு இளையவன். இக்கருத்தை நன்கு அறிந்த கம்பநாடன், பரதனை இராமன் தழுவியதாக வரும் இடங்களில் எல்லாம் 'தந்தை போலத் தழுவினான்' என்றே கூறு

கிறான். தசரதன் பரதனிடம் காட்ட வேண்டிய அன்பைக் காட்டவில்லை என்பது விரிவாகக் கூறப் பெற்றுளது. இராமன் இதனை நன்குணர்ந்து பரதனைக் காணுந் தோறும் அதிக அன்பு காட்டினான் என்று நினைய வேண்டியுளது. திருமணத்தைக் காணத் தசரதனுடன் பரதனும் மிதிலைக்கு வந்து இராமனை வணங்குகிறான். அப்பொழுது,

"பன்னுதா ரைகள் தரத் தொழுதுஎழும் பரதனைப்
பொன்னின்மார்பு உறவணைத்து உயிர்உறப் புல்லினான்
தன்னையத் தாதைமுன் தழுவினான் என்னவே."

(கம்பன்—1054)

இவ்வாறு இராமன் தழுவினான் என்று கவிஞன் கூறுவ தால், நமது ஊகம் பொருத்தமாகலாம். திருமணம் முடிந்து அயோத்தி வந்தவுடனே தசரதன் பரதனைக் கேகய நாட்டிற்கு அனுப்புகிறான். அதன் காரணம், முதலியன பிறிதோர் நூலில் விரிவாக ஆயப்பட்டது.

தசரதன் அவ்வாறு 'கேகய நாடு சென்று வருக,' என்று பணித்தவுடன் இராமனை விட்டுப் பிரியவே பரதன் மிகவும் வருந்துகிறான்.

"ஏவலும் இறைஞ்சிப்போய் இராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்
ஆவியங்கு அவன்அலது இல்லை ஆதலால்
ஓவலில் உயிர்பிரிந்து உடல்சென்று என்னவே."

(கம்பன்—1310)

இங்கு இராமனை உயிராகவும் பரதனை உடலாகவும் கவிஞன் உவமித்தது பின்னரும் வலியுறுத்தப் பெறுகிறது. கேகயத்திலிருந்து மீண்டு தாயைக் கண்டு தந்தையின் இறப்பை அறிந்த பரதன் உடனே இராமனைப் பற்றித் தான் பேசுகிறான்.

**''எந்தையும் யாயும்எம் பிரானும் எம்முனும்
அந்தம்இல் பெருங்குணத்து இராமன் ஆதலால்
வந்தனை அவன்கழல் வைத்தபோதுஅலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாது!''** என்றான்.
(கம்பன்—2159)

இராமன் பரதன் மாட்டுக் கொண்ட பேரன்பை முன்னர்க் கண்டோம். இப்பொழுது பரதன் இராமன் மேல் வைத்த அன்பைக் காண்கிறோம். இவை இரண்டில் எது பெரியது என்று ஆராய முடியாதபடி ஒன்றை ஒன்று விஞ்சி இருத்தல் கண்கூடு. கடிமணம் முடிந்து இராமன் மீளும்பொழுது இராமனுடைய தேரைப் பரதன் ஓட்டி வரக்காண்கிறோம். மணம் முடித்துவரும் அரசகுமாரனைத் தேரில் அமர்த்தி அதனைச் செலுத்தி வருகிறான் எனின் பரதனது தேர் ஓட்டும் திறமே அதற்குக் காரணமாதல் வேண்டும்.

இன்னுஞ்சில சந்தர்ப்பங்களில் பரதனுடைய செயலி லிருந்து ஒன்றை ஊகிக்கவும் முடிகிறது தசரதனிடத்துப் பரதன் கொண்டிருந்த அன்பையும் மதிப்பையுங்காட்டிலும் அதிகமாக இராமன் மேல் அன்பும் மதிப்பும் கொண்டிருந் தான் என்று நினைய வேண்டியுளது. தசரதன் இறந்த பின்னர்த் தூதுவர் பரதனை அழைத்து வரக் கேகய நாடு சென்றனர்; பரதனையும் கண்டனர். ஆனால், முனிவன் ஆணைப்படி தசரதன் சாவைப்பற்றி அத்தூதுவர் பரதனிடம் ஒன்றும் கூறவில்லை; எனவே, அவன் வினாக் கட்கு மெய்ம்மையல்லாத மறு மொழிகளைக் கூறு கின்றனர். பரதனது முதல் வினா, 'தீது இலன்கொல் திரு முடியான்?' (2103) எபன்தாகும். அதற்கு அவர்கள், 'வலியன்' என்று விடை இறுத்தார்கள். அதனையடுத்து வினா, 'அருமைத் தம்பியும் எம்பிரானும் நலமோ?' என்ப தாகும். 'ஆம்,' என அவர்கள் கூறினவுடன் பரதன் அவர் கள் இருக்கும் திசை நோக்கி வணங்கினானாம்.

"வலியன் என்றுஅவர் கூற மகிழ்ந்தனன்,
'இலைகொள் பூண்இளங் கோளம் பிரானொடும்
உலைவில் செல்வத்த னோ?'என, 'உண்டு,'எனத்
தலையின் ஏந்தினன் தாழ்தடக் கைகளே!"

(கம்பன்—2104)

இராமன் பெயரைக் கூறினவுடன் பரதனுடைய கைகள் தலைமேல் அஞ்சலி செய்கின்றனவெனில், அவனுடைய அன்பு பெரியதா, அன்றிப் பத்தி பெரியதா என்று கூற முடியாத நிலையில் உள்ளது. இதனையடுத்துத் தூதுவர் தாம் கொணர்ந்த ஓலையைத் தருதலும், அதனை வாங்கிப் படித்துவிட்டு, உடன் புறப்படத் தயாராகி விட்டான் பரதன். ஏன் தெரியுமா?

"பூண வான்உயர் காதலிற் பொங்கினான்
தாணி லாமலர் தூவினன் தம்முனைக்
காண லாம்எனும் ஆசை கடாவவே."

(கம்பன்—2108)

இராமனைக் காணலாம் எனும் ஆசையால் தூண்டப் பெற்றவனாய் அவர்கள் கொணர்ந்த ஓலையின் மீது மலர்களைத் தூவினானாம். அவனுடைய ஆசை எவ்வளவு அதிகம் என்பதற்குக் கவிஞன் அடுத்த பாடலில் ஓர் அளவு குறிக்கிறான். "பொழுதும் நாளும் குறித்திலன் போயினான்," (2109) என்ற தொடரால், முதல் முதல் பாட்டன் வீடு வந்து திரும்பும் அரசகுமாரனாகிய பரதன் நல்ல நேரங்கூடப் பாராமல் புறப்பட்டுவிட்டான் என்றால், இராமனைக் காண அவன் மனம் துடித்த துடிப்பை யாரே அளவிட்டு அறிதல் கூடும்!

இராமனை அழைத்து வருவான் வேண்டித் தன் படையுடன் புறப்பட்டுக் காட்டிற்கு வந்து விட்டான் அப்பெருமகன். பரதனை நீண்ட நாட்பிரிவின் பின்னர்க் கண்ட இராமன்,

"நியாயம்அத் தனைக்கும் ஓர் நிலையும் ஆயினான்
தயாமுதல் அறத்தினைத் தழுவி என்னவே"
(கம்பன்—2429)

அவனைக் கட்டித் தழுவினான். 'தயாமுதல்' என்றதால், அருளையுடைய முதல்வனாகிய இராமன் என்பதும், 'அறத்தினை' என்றதால், பரதன் என்பதும் பெறப்படும். இராமனும் பரதனும் சேர்ந்தது அருளும் அறமும் சேர்ந்தது போல இருந்தது என்கிறான் கவிஞன். இதன் பின்னர்ப் பலவும் பேசி, இறுதியில் பரதன் தான் வந்த கருத்தைக் கூறுகிறான்.

பரதன் கொண்ட தவ வேடத்தைக் காணுந்தோறும் இராமனுடைய மனம் துணுக்கம் எய்துகிறது. இராமன் மனத்தில் பரதன் இன்னம் குழந்தையாகவே காட்சியளிக்கிறான். எனவே, அவன் கொண்ட விரதக் கோலம் மேலும் வருத்தத்தை விளைக்கிறது. எனவே, அவன் பரதனை நோக்கி,

" 'வரதன் துஞ்சினான்; வையம் ஆணையால்
சரதம் நின்னதே; மகுடம் தாங்கலாய்
விரத வேடம்நீ என்கொல் வேண்டுவான்
பரத! கூறு,' எனாப் பரிந்து கூறினான்."
(கம்பன்—2470)

இதைக்கேட்ட பரதன் மிகவும் மனம் துடித்தவனாய், 'ஆம்! பெரியோர் மனத்திற்குப் பொருந்தாத வரங்களால் தகாத தவக்கோலத்தை உனக்கும் தந்து அரசனையும் கொன்றவள் என்னைப் பெற்றெடுத்த பாவியாகலின், யான் தவம் செய்யவும் தகுதி உள்ளவனோ?' என்கிறான்.

"மனக்குஒன் றாதன வரத்தின் நின்னையும்
நினக்குஒன் றாநிலை நிறுவி நேமியான்
தனைக்கொன் றாள்தரும் தனயன் ஆதலால்
எனக்குஒன் றாதவம் மடுப்பது எண்ணினால்!"
(கம்பன்—2472)

இவ்வாறு கூறித் தன்னைப் பற்றித்தான் கொண்டுள்ள கருத்தைப் பிறர் அறியக் கூறிய பரதன், இனி இராமனது முதற்கேள்விக்கு விடைகூற முற்படுகிறான். 'ஏன் முடி சூடவில்லை?' என்பது தானே முதற்கேள்வி? 'முதல் மகனாய்ப் பிறந்த காரணத்தால் உனக்கே உரிமையான அரசை நீயே விட்டுத் துறவு பூண்டால், அதற்காக யான், அறத்தை வாளினால் கொன்று தின்றதை ஒப்ப, அவ்வரசை ஆளத் தொடங்குவேனோ!' (2475) என்றான். இவ்வாறு பேசி வரும்பொழுதே அவன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றுகிறது. 'பகைவன்தானே சமயம் அறிந்து இவ்வாறு அரசை வெளவக் காத்திருப்பான்? யான் என்ன அத்தகைய பகைவனா?' என்னுங் கருத்தால்,

''வகையில் வஞ்சனாய் அரசு வவ்வயான்
பகைவ னேகொலாம் இறவு பார்க்கின்றேன்!''

(கம்பன்—2476)

என்று கூறுகிறான். இதிலிருந்து பரதனுடைய அடக்கமும், அன்பும், ஆழ்ந்த அறிவும் புலனாகாமற் போகா. இதனையடுத்து, 'தந்தை தீமையும், தாய் செய்த தீமையும் நீங்க நீ வந்து அரசு புரிக,' (2477) என வேண்டினான். அவன் சொற்களையும் அச்சொற்களின் அடியில் உள்ள துயரத்தையும் கண்ட இராமன், துணுக்கம் எய்தினான்.

''சொற்ற வாசகத் துணிவு உணர்ந்தபின்,
'இற்ற தோஇவன் மனம்!' என்று எண்ணுவான்.''

(கம்பன்—2378)

என்று இராமன் மனத்தில் தோன்றிய அச்சத்தைக் கவிஞன் வெளியிடுகிறான். அவனது உள்ளம் இற்றுவிட்டதோ என்று ஐயுற வேண்டுமாயின், பரதன் துயரம் எவ்வளவு ஆழமுடையதாயிருந்திருக்கும்?

இவ்வகை மனநிலையில் உள்ள பரதனைத் தேற்றுவதற்கு இராமனே அரும்பாடு படுகிறான்; தந்தை

சொல்லைக் காக்கவேண்டுவது தனயன் பொறுப்பு என்பதையும் எடுத்துக் காட்டினான். இறுதியாக அயோத்தி அரசின்மேல் தனக்கு உரிமை இல்லை என்றும், கைகேயி மகனாய்ப் பிறந்த காரணத்தால் பரதனுக்கே அது உரிமையாய் விட்டதென்றும் எடுக்காட்டுகிறான்.

" 'வரனில் உந்தைசொல் மரபி னால்உடைத்
தரணி நின்னதென்று இயைந்த தன்மையால்
உரனில் நீபிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே; ஆள்க!' என்னவே"

(கம்பன்—2485)

என்னும் இப்பாடலுக்கு உரை வகுத்தவர்கள் நேர்மையாகப் பொருள் கொள்ளாமையின், நல்ல முறையில் இராமன் வாதத்தை அறிய முடியவில்லை. முதலிரண்டு அடிகளின் பொருள்: 'வரந்தந்த உந்தை முன்னர்க் கொடுத்தவாக்குப்படி இத்தரணி உனதாகும்படி பொருந்தி விட்டது (இது கைகேயியை மணஞ்செய்துகொள்ளும் பொழுது தசரதன் தன் அரசை அவளுக்குச் சீதனமாகத் தந்துவிட்டான் என்ற வான்மீகக் கதையை உட்கொண்டது.) என்பது. பின் இரண்டடிகளின் பொருள்: 'வலிமை பொருந்திய நீ பிறந்து விட்டமையின் உன் தாய்க்குரிய இவ்வரசு உனக்கு உரிமை வழி வந்தது ஆகலின், இவ்வரசு நின்னதேயாகும்,' என்னும் இவ்வாதத்தை இராமன் கூறினவுடன் பரதன் பேச்சு முறை மாறி விடுதலைக் காணலாம். இது வரை இராமனுக்குரிய அரசைத் தந்தை தனக்குத் தந்து பெருந்தவறு இழைத்து விட்டான் என்றும், தாய் வரமாக அதனைப்பெற்று அவளும் தவறு இழைத்து விட்டாள் என்றும் (2479) கூறிய பரதன், இராமன் கூறியதைக் கேட்டவுடன் தன் வாதத்தை மாற்றிவிடுகிறான். இராமன் கூறியதில் உள்ள இப்புதிய கருத்தை அறிந்து கொண்ட பரதன், வேறு விதமாகக் கூறி இராமனை வற்புறுத்துகிறான்.

இராமன் கூறியதைப் பரதன் ஒப்புக்கொள்கிறான். அவ்வாறாயின், இப்பூமி முறைப்படி பரதனைச் சேர்ந்தது என்பது உறுதிதான். ஆனால், 'உரிமையுடையவனாய பரதன் தன் உரிமை அரசை யாருக்கு வேண்டுமாயினும் அளிக்கலாமல்லவா? இதோ கூறுகிறான்!

" 'முன்னர் வந்துஉதித்து உலகம் மூன்றினும்
நின்னை ஒப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகில்,யான் இன்று தந்தனன்;
மன்ன! போந்துநீ மகுடம் சூடு,'எனா"

(கம்பன்—2486)

'இப்பார் என்னுடையது என்று நீயும் கூறினாய்: யானும் ஒப்புகிறேன். இப்பொழுது எனக்குரிமையான இப்பூமியை யானே உனக்குத் தருகிறேன்; வந்து ஆட்சி புரிக,' என்கிறான் வள்ளல் பரதன்.

பரதனுடைய இந்த வாதத்தின் முன்னர் இராமன் அயர்ந்துவிட்டான். 'பரதனுடைய பிடிவாதத்திற்கு மருந்தாக அமையும் என்று கருதி தான் கூறிய வாதம் தனக்கே இடையூறாய் வந்து சேரும் என்று இராமன் கருத வில்லை, பரதன் வலுவாக இப்புதிய வாதத்தைப் பிடித்துக் கொண்டான் என்பதைக் கண்ட இராமன், இப்பொழுது வேறுவழியில் பேசமுற்படுகிறான். இனிப் பரதனிடம் வாதஞ்செய்து பயனில்லை. எனவே, அன்பினால் அவனுக்கு ஆணை இட்டுவிட்டாலோ! இராமன் இட்ட ஆணையை மறுக்கப் பரதன் அஞ்சுவான். எனவே, பரதனுடைய இவ்வச்சத்தையே துணையாகக் கொண்டு இராமன் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முனைந்து விட்டான். இதற்கு முன்னரும் குகனுடைய அன்பில் தோன்றிய வற்புறுத்தலுக்கு அஞ்சிய இராமன் குகனிடத்தி லிருந்து விடைபெற முயலும் பொழுது அன்பினால் இடும் ஆணை வழியையே மேற்கொண்டான். இவ்வொரு வழியாலன்றிக் குகனைத் தன்னிடமிருந்து பிரிக்கவியலாது

என்பதையறிந்த இராமன் 'அன்புக் கட்டளை' வழியை மேற்கொண்டானல்லானோ?

> **"எந்தை ஏவஆண்டு ஏழொடு ஏழெனா**
> **வந்த காலம்நான் வளத்துள் வைக,நீ**
> **தந்த பாரகம் தன்னை மெய்ம்மையால்**
> **அந்த நாள்எலாம் ஆள்என் ஆணையால்."**
>
> (கம்பன்—2490)

பரதன் வாதத்தை நம்பிக்கொண்டே இராமன் பேசுகிறான் இப்பொழுது. இரண்டு நிகழ்ச்சிகள் உள்ளன இங்கு. இராமன் தந்தை சொல்லை மீறாமல் இருக்க வேண்டுமாயின், பதினான்கு ஆண்டுகள் காட்டில் இருத்தல் வேண்டும். பரதன் வேண்டித் தருவதை மறுக்காமல் இருக்க வேண்டுமாயின், உடன் நாடு திரும்ப வேண்டும். இவை இரண்டும் தம்முள் மாறுபட்டவை. எனவே, அறிவுக் கடலாகிய இராமன் ஒரு புது வழி காண்கிறான்; பாடலில் முதலிரண்டு அடிகளால், 'யான் தந்தை சொல்லைக் காப்பாற்றுகிறேன்' என்று கூறிவிட்டான்; அடுத்த இரண்டு அடிகளில் பரதனுக்கு அமைதி கூறுகிறான். 'நீ தந்த அரசையான் ஏற்றுக்கொண்டேன் என்றே வைத்துக்கொள். இப்பொழுது யான் அரசனாகி விட்டேன். ஆனால், எனக்கு இருக்கும் வேறு அலுவல் (காட்டில் 14 ஆண்டுகள் வாழவேண்டுவது) காரணமாக உன்னை அரசனாக நான் நியமிக்கிறேன். என் ஆணையை ஏற்று நீ பதினான்கு ஆண்டுகள் ஆட்சி புரிவாயாக' என்கிறான் இராமன். 'நீ தந்த பாரகந் தன்னை அந்த நாள் எலாம் (யான் இல்லாத நாள் எல்லாம்) என் ஆணையால் நீ ஆள்க,' என்கிறான். இவ்வாறு இந்த அரிய பாடலுக்குப் பொருள் கூறாமல், பிறர் இடர்ப்படுவர். பரதன் வாதத்தைத் தப்ப முடியாதிருந்த இராமன் அறிவுத்திறத்தால் பரதனும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு முடிபைக் கூறிவிட்டான். மேலும், தசரதன் கட்டளை இட்ட பொழுதுதான் அவனுடைய ஏவலுக்கு அஞ்சி முடிசூட உடன்பட்டதை இப்பொழுது

நினைவுறுத்துகிறான் இராமன்; 'அதுபோல நீயும் என் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பாயாக,' என்கிறான்.

" 'அன்னது நினைந்து நீஎன் ஆணையை மறுக்க லாமோ?
சொன்னது செய்தி ஐய! துயருழந்து அயரல்,' என்றான்"
(கம்பன்—2491)

இராமன் கூறிய இந்தச் சொற்களுக்குக் கட்டுப்பட்ட பரதன் அஞ்சத்தக்க ஒரு வஞ்சினம் கூறுகிறான்: 'நீ கூறும் பதினான்கு ஆண்டுகள் கழித்து நீ வரவில்லையானால், யான் நெருப்பில் வீழ்ந்து இறந்துபடுவேன்! உன்மேல் ஆணை!' என்கிறான்.

"ஆம்எனில் ஏழிரண்டு ஆண்டில் ஐய!நீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை என்னில் கூர்எரி
சாம்இது சரதம்;நின் ஆணை சாற்றினேன்!"
(கம்பன்—2507)

இந்த வஞ்சினத்தைக் கேட்டு அஞ்சிய இராமன், வேறு வழி இன்றி ஒப்புக்கொள்கிறான்; எனினும், சீதையை மீட்டு வரும் வழியில் பரத்துவாசன் இடத்தில் தங்க நேரிடுகையில் பதினான்கு ஆண்டுகள் அன்றுடன் முடிதலின், அனுமனை அனுப்புகிறான்; அனுப்பும் பொழுது "சென்று தீதின்மை செப்பி **அத்தீ** அவித்து வா," என்று கூறி அனுப்புதலால், பரதன் வாக்குப்படி செய்துவிடுவான் என்பதில் இராமன் கொண்டிருந்த நம்பிக்கை புலனாகிறது.

இராமனை எவ்வாற்றானும் மீட்டுச் செல்லல் இயலாது எனக் கண்ட பரதன், இராமன் ஆணைப்படியே நடக்க முடிவு செய்துவிட்டான். 'நான் வரும் வரை என் பிரதிநிதி போல இருந்து ஆள்க,' என்றானல்லனோ இராமன்? அதனால், பரதன் அவனுடைய பிரதிநிதியாகவே இருக்க முடிவு செய்துவிட்டான். மன்னனுடைய குடை, வாள், கிரீடம் என்பவற்றுள் ஒன்றை அவனுடைய அடை

யாளமாக வைத்துப் பிரதிநிதி ஆள்வது முறையன்றோ? எனவே, இராமனுடைய அடையாளமாக அவனுடைய திருவடி நிலைகளைப் பெற்றுச் செல்கிறான் பரதன்.

இவ்விரண்டு சோதரர்களும் அளவிலாப் பரிவினால் செய்துகொண்ட வாதத்திலிருந்து இராமனிடம் பரதன் கொண்ட பெருங்காதலும், அவனுடைய அடக்கமும் பணிவும் கற்றறிவுடைமையும் புலனாகின்றன.

பரதனும் தசரதனும்

எல்லை மீறிய அடக்கம் உடையவனாய் இருந்து விட்டமையின் பரதனைப்பற்றி நாம் அறிவதும் சற்றுக் கடினமாகவே உளது. பேச வேண்டிய இடங்களில் அவன் இரண்டொரு சொற்களே பேசுவதால் அவன் மனநிலையை விரிவாகக் காண இயலவில்லை. தந்தையாகிய தசரதன் பரதனைப்பற்றிப் பேசிய சில சொற்களைக்கொண்டு ஒரு முடிபுக்கு வந்தோம். அதாவது, தசரதனுக்குப் பரதனிடம் ஆதியிலிருந்தே அன்பில்லை என்பதுதான் அம்முடிபு. அவ்வாறாயின், பரதனாவது தசரதன்மேல் அன்பு பாராட்டினானா என்பதை அறிதல் வேண்டும். உண்மையில் அன்பற்ற, சில சந்தர்ப்பங்களில் வெறுப்பையுங் காட்டிய தந்தையிடம் பரதன் அன்பு பாராட்டாது இருந்திருப்பின், அதில் வியப்பு ஒன்றும் இல்லை. அவ்வாறு இருந்தும் தந்தையன்பு மிகுதியும் இருந்திருக்கிறது பரதனுக்கு. தந்தை உயிருடன் இருந்த காலத்தில் பரதன் தனது அன்பை வெளிக்காட்ட வாய்ப்பில்லாமல் இருந்தது. ஆனால், கேகயத்திலிருந்து மீண்டு வந்த பிறகே அவன் தந்தை இறந்துவிட்ட செய்தியை அறிகிறான். உள்ளே அடைந்து கிடக்கும் அன்பு வெள்ளம் கரை புரண்டு வெளிப்படுகிறது பரதனுக்கு.

தசரதனுடைய ஒவ்வொரு நற்பண்பையும் நினைந்து நினைந்து அரற்றுகிறான் பரதன். அவனுடைய வீரம், கொடை, பெருந்தன்மை ஆகிய ஒவ்வொன்றும் பரதன்

கண்முன்னர் வந்து செல்கின்றது. அவன் இப்பொழுது அரற்றும் திறத்தை வைத்துத் தசரதன் உயிருடன் இருந்த பொழுது எவ்வளவு அன்பு செலுத்தியிருத்தல் கூடும் என்பதை அறிய முடிகிறது. ஆறாத்துயரத்தால் அரற்றும் பொழுதுகூடப் பரதனுடைய அடக்கமும் தன்னலமற்ற தன்மையும் வெளிப்படக் காண்கிறோம். பெரும்பாலும் இறந்த ஒருவரைப் பற்றி அழுபவர் ஒரு முறையைக் கையாள்வர். இறந்தவர் தமக்குச் செய்த உபகாரம், அவர் இல்லாமல் தம்மால் வாழ முடியாத நிலை என்பவை பற்றியே கூறியழக் காண்கிறோம். இறந்தவர்களிடம் சென்ற அன்பைக் காட்டிலும், அவர்களை இழந்து வருந்தும் தங்கள் மேலேயே இவர்களுடைய பரிவு மிகுதியும் இருக்கக் காண்கிறோம். பரதனுடைய புலம்பலில் அவன் தன்னைப்பற்றி ஒரு சொல்லும் கூறாமல் இருக்கிற பண்பாட்டைப் பார்க்கிறோம். 'உன்னை இழந்த **நாங்கள்** இனி என்ன செய்வோம்!' என்று தன்மைப் பன்மையிற்கூட அவன் பேசவில்லை. இது ஒரு தனிச் சிறப்பாகும். அவன்,

''நீதியை மறந்தனை உனக்குஇதின் மாசு மேலுண்டோ''
(கம்பன்—2149)

என்று கூறத் தொடங்கினான்: பிறகு, பலருக்கு உபகாரி யாய் வாழ்ந்த நீ இன்று உனக்கு மட்டும் வீடுபேற்றைப் பெற்றுச் செல்வது முறையோ?' (2150) என்றான். அடுத்து அவனுடைய நினைவு இராமன் மாட்டுச் சென்றது ஆம்! இராமனைப் பிரிந்து சென்று எவ்வாறு வாழ்கிறான் தசரதன்? 'இராமனைக் கணப்பொழுதும் பிரிந்து வாழ விரும்பாத நீ, இப்பொழுது எவ்வாறு பிரிந்து போயினாய்?' என்கிறான்.

''கண்ணடை
நுதலவன் மலைவிலின் நோன்மை நூறிய
புதல்வனை எங்ஙனம் பிரிந்து போயினாய்?''
(கம்பன்—2151)

இவ்வாறு அரற்றுகிற நேரத்தில் இராமன் வனஞ்சென்ற செயலைப் பரதன் அறியவில்லை; எனவே, இராமன் அரண்மனையில் இருப்பதாகவே நினைந்து தான் இவ்வாறு கூறுகிறான்.

அடுத்துத் தந்தையின் கொடைச் சிறப்பு நினைவிற்கு வருகிறது. இவ்வுலகத்தில் வாழ்பவர் யாவரேயாயினும், தசரதனால் கொடை பெற்றவராகவே இருத்தல் கூடும். தன்னால் கொடை பெறப்பட்டாருடன் சமமாக நட்பும் பாராட்டி வாழ்தல் இயலாததொன்று. எனவே, 'நட்பாளர் வேண்டும் என்பதற்காக மேலுலகத்தில் அவர்களை நாடிச் சென்றனையோ?' என்கிறான்.

''நண்பினார் அவ்வழி உலகினில் உள்கொ லோஜயா!''

(கம்பன்—2152)

அடுத்துத் தசரதனது வீரம் நினைவிற்கு வருகிறது. 'முன்னொரு காலத்தில் சம்பராசுரனைத் தொலைக்க மேலுலகம் சென்றானே! இப்பொழுதும் போயிருப்பதால் அங்கே சம்பரன் போன்றார் வேறு யாரேனும் உளரோ?' என்று கேட்கிறான்.

''சம்பரன் அனையஅத் தானைத் தானவர்
அம்பரத்து இன்னமும் உள்கொ லோஜயா!''

(கம்பன்—2154)

இவ்வாறு தந்தையின் பண்பாட்டை ஓயாது நினைத்து உருகும் பரதனுக்கு மீட்டும் இராமன் மாட்டுத் தசரதன் கொண்ட கழிபேரன்புதான் நினைவிற்கு வருகிறது; மிகுதியும் வருந்துகிறான். 'நின்னால் மிகுதியும் அன்பு செய்யப்பெற்ற இராமன் வளர்ந்து பெரியவனாகியுங்கூட ஆணை ஆழியை அவன் கைகள் ஏந்தாமல் வீணாய் இருக்கின்றன என்பதற்காக ஆழியை அவனிடம் தர வேண்டி நீ இறந்தனையோ?' என்கிறான்.

'ஏழுயர் மதகளிற்று இறைவ! ஏகினை
வாழிய கரியவன் வறியன் கைஎனப்
பாழியம் புயத்துநின் பணியின் நீங்கலா
ஆழியை இனிஅவற்கு அளிக்க எண்ணியோ?''

(கம்பன்—2156)

தசரதன் இராமனுக்கு முடி சூட்ட நினைந்து மந்திர ஆலோசனை நடத்தி நாளும் குறிப்பிட்டு, இறுதியில் அது நடைபெறாமல் போன செய்தியும், இராமன் காடு சென்ற செய்தியும், அத்துயரம் தாளாமல் தசரதன் இறந்த செய்தியும் அறியாத பரதன் இப்பொழுது இவ்வாறு பேசுவது நம் வருத்தத்தை மேலும் அதிகப்படுத்துகிறது. பரதன் இவ்வாறு பேசும் பொழுது அதற்கு முன்னர் நடைபெற்றவைகளை நாம் அறிவோமாகலான், இதில் உள்ள பொருத்தமின்மையை அறிந்து மேலும் வருந்துகிறோம். ஆனால், இவ்வாறு பேசும் பரதன் நடந்தவற்றுள் ஒன்றையும் அறியாதவனாய்ப் பேசுகிறான் என்பதையும் மனத்துட்கொள்ள வேண்டும். தசரதன் இவ்வாறு சென்று விட்டதை நினைக்க நினைக்க அவன்மேல் பரிவு உண்டாகிறது. 'ஐயோ! பாவம்! இராமனை அவ்வளவு காதலித்து தசரதன் அவ்விராமனுக்கு முடி சூட்டு விழாவை நடத்தித் தன் கண்களால் பார்க்கத் தவம் பண்ணவில்லை போல இருக்கிறது!' என்று அழுகிறான்.

''பற்றுஇலை தவத்தினில்; பயந்த மைந்தற்கு
முற்றுஉலகு அளித்துஅது முறையின் எய்திய
கொற்றநல் முடிமணக் கோலம் காணவும்
பெற்றிலை போலும்நின் பெரிய கண்களால்!''

(கம்பன்—2151)

முடிசூட்டு விழாவைப் பாராது உயிரை விடத் தசரதன் விரும்பாமல் போராடியதும், விதி அவனை வெற்றி கொண்டதையும் நாம் அறிவோம்; பரதன் அறியான். அறியாமலே இவ்வாறு நடந்தவற்றை நடவாதது போலப்

பேசுவதை 'நாடகக் குறிப்பு'[1] என்று கூறுவர் திறனாய்வாளர்.

இவ்வாற்றல் மொழிகளிலிருந்து அடக்கமே வடிவாய் இருந்தும் பரதன் தந்தை மாட்டு எவ்வளவு அன்பு வைத்திருந்தான் என்பது தெற்றெனப் புலனாகும். தந்தை என்பதற்காக அவனிடம் அன்பு பாராட்டியதைக் காட்டிலும், இராமனைப் பெற்றவன் என்பதற்காகவும், தன்னால் மிகுதியும் போற்றப்பட்ட இராமனை அவனும் மிகுதியும் விரும்பினான் என்பதற்காகவுமே தசரதன்மேல் பரதனுக்கு அன்பு ஏற்பட்டதோ என்றுகூட நினைய வேண்டியுளது.

பரதனும் பெற்ற தாயும்

அறத்தின் வடிவை, செம்மையின் ஆணியை, நீதி ஆறு புகமண்டும் கடலைப் பெற்றெடுத்த பெரும் பேறு உடையவள் கைகேயி. எவ்வளவுதான் அவள் தீயவளாக மாறிடினும், இதனை நாம் மறத்தற்கில்லை. இத்தகைய பரதன் தீய பண்புடைய ஒருத்தி வயிற்றில் தோன்றல் இயலாது. இயற்கையில் நற்பண்புடையவளாய அம்மா தரசி பெற்றதால் இந்நற்பண்புகள் அவனுடன் பிறந்தன. சேர்க்கை காரணமாகப் பின்னர் கைகேயி மனம் திரிந்தது உண்மைதான்.

"மனத்து உளதுபோலக் காட்டி மாந்தர்க்கு
இனத்துஉள தாகும் அறிவு." (திரு.—54)

என்று பொதுமறை வகுத்த சட்டத்திற்குக் கைகேயி எளிதில் இலக்கியமாகிவிட்டாள். ஆனால், கோசலை

---

1. Dramatic Irony

திறனாய்வாளர் கூறும் 'நாடகக் குறிப்பு' என்பதற்கு இது முற்றிலும் இலக்கியமாகாவிடினும், ஓரளவு அப் பெயருக்குப் பொருத்தமுடைய நிகழ்ச்சியேயாகும்.

இவ்வாறு இல்லை. எனவே, நற்பண்புகளுடன் பிறந்த கைகேயி மைந்தனாகிய பரதன் அப்பெருமாட்டியால் வளர்க்கப் பெற்றமையின், அவன் பண்புகள் மேலும் வளர்ச்சியடைந்தன. கைகேயி இடம் வளர்ந்த காரணத் தாற்போலும் இராமன் இரண்டொரு சிறு பிழைகளை யாவது செய்யப் பரதன் பிழை என்று கூறக்கூடியது ஒன்றையும் கனவினும் கருதாதவனாய் வளர்ந்துவிட்டான்! கோசலை இராமனை நோக்கி, 'பரதன் நிறைகுணத்தவன்; நின்னினும் நல்லன்,' என்று கூறத்தக்க நிலையையும் அடைந்துவிட்டான்.

பிறந்தது தவிரப் பரதன் வளர்ந்து முழுதும் கோசலை இடத்தில் ஆகலான், கைகேயியிடம் தாயிடம் மகன் செலுத்த வேண்டிய அன்பைப் பரதன் செலுத்தினானா என்று ஆய்வதற்கு இல்லை. தாய் என்று அவன் உரிமை பாராட்டுவதெல்லாம் கோசலையிடத்திலாகும். கைகேயி யைப் பரதன் சந்தித்துப் பேசும் முதலிடமே அவ்வளவு சரி யாய் இல்லை என்று கூறலாம். கேகய நாட்டிலிருந்து 'இராமனைப் பார்க்க வேண்டும்,' என்னும் ஆவல் தூண்ட, 'நாளும் பொழுதும் குறிக்காமலே' புறப்பட்டு வந்து விட்டான் பரதன். அயோத்தியினுள் நுழைந்ததும் களை இழந்து வெறிச்சென்று இருக்கும் நகரத்தைப் பார்த்ததும் அவன் மனம் துணுக்கம் அடைகிறது. உடன் வரும் சத்துருக்கனனைப் பார்த்து, 'இளையோய், மன்னன் வைகும் தலைநகர்போல இல்லையே இது! இதென்ன நிலை?' என்கிறான்.

"மன்னன் வைகும் வளநகர் போலும்ஈது
என்ன தன்மை? இளைய னே!" என்றான்.

(கம்பன்—2137)

இது கேட்ட இளையவன் மறுபடியும் ஒரு 'நாடகக் குறிப்புத்' தோன்றுமாறு "திருநகர்த் திருத் தீர்ந்தன ளாம்," என்றான். சீதை அயோத்தியை விட்டுச்

சென்றதைச் சோதரர் இருவரும் இன்னும் அறியவில்லை. அரண்மனையுட் சென்ற பரதன் தந்தை இருக்கக் கூடிய இடங்கள் அனைத்திலும் தேடும்பொழுது கைகேயி அழைப்பதாக ஒருத்தி வந்து கூறலும் தாயிடம் ஓடுகின்றான் தந்தையைப் பற்றித் தகவல் அறிந்துகொள்ள!

இவ்வளவு அவசரத்தில் ஓடினாலும் தாயைக் கண்டவுடன் பண்பாட்டை மறந்து, 'தந்தை எங்கே?' என்று அவன் கேட்கவில்லை. அவனுடைய அடக்கத்திற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு. தாயைக் கண்டவுடன் தன் அவசரத்தையும் படபடப்பையும் உள்ளடக்கிக் கொண்டு அவளை வீழ்ந்து வணங்குகிறான் அப்பெருமகன். தவறு நேர்ந்திருப்பின் அவளே அதனை அவனுக்கு எடுத்துரைத்திருப்பாள் அல்லவா? அவ்வாறு செய்யாமல் அவள் தன்னுடைய தந்தை, தமையன்மார், சுற்றத்தார் முதலிய யாவரும் நலமா என்ற வினாக்களை வரிசையாக அடுக்குகிறாள். பரதனுக்கு இது பெருவியப்பாய் இருக்கிறது. தீங்கிருப்பின் அதனை முதலில் கூறாமல் சாவதானமாக ஒவ்வொருவருடைய நலத்தையும் கேட்கும் தாயை என்னென்பது! அவன் மனம் தத்தளிக்கிறது. அவற்றையெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு அவள் வினவிய அனைத்து வினாக்களுக்கும் ஒரே சொல்லில் விடை கூறி விட்டான்.

"தீதிலர் எந்தை, என்ஐயர் ஏனையர்?" என்றனள்;
அந்த மில்குணத் தானும், அது ஆம்," என்றான்.

(கம்பன்—2143)

இந்த வினா முறையில் பரதனும் ஓரளவு பொறுமை இழந்துவிட்டான்; எனினும், அதனைக் காட்டிக் கொள்ளாமல் உள்ளம் விம்முவானாய்க் " 'கோமகன் யாண்டையான்? பணித்திர்,' என்று இருகை கூப்பினான்." இனிமேலும் தன் கேள்விக்கு விடை இறுக்காமல் அவள் கேள்விகள் கேட்க வேண்டா என்பதற்காகப்போலும்

இருகை கூப்பினான். அவன் உள்ளத்தில் தோன்றிய விம்மலை அத்தாய் அறியாமலா இருந்திருப்பாள்? அவ்வாறு அறிந்திருந்தும், தன் அருமை மகனுடைய துயரத்தில் பங்கு கொள்ளாததன் காரணம் யாது? இறந்து போன தசரதன்மேல் அன்பு வற்றியிருப்பினும், அருமை மகனைக் கண்டவுடனாவது அவள் அழுகை பீரிட்டு வெளி வந்திராதா? கைகேயி பரதனுடைய நிலை கண்டும் மனங் கலங்கவில்லை. அவள் மனம் கல்லாகிவிட்டது. மகனுடைய வினாவிற்கு இதோ விடை இறுக்கிறாள் தாய்.

“ ஆனவன் உரைசெய அழிவில் சிந்தையாள்,
‘தானவர் வலிகெட நிமிர்ந்த தானைஅத்
தேன்அமர் தெரியலான் தேவர் கைதொழ
வானகம் எய்தினான்; வருந்தல் நீ,’ என்றாள்”

(கம்பன்—2145)

தசரதன் இறந்ததைக் குறித்து அவனுடைய காதல் மனைவி பேசும் சொற்களா இவை? வழியில் போகிறவர் களைப் பரதன் கேட்டிருந்தாற்கூட அவர்கள் மிகவும் பரிவுடன் விடை கூறியிருப்பார்களே! ஏனோ கைகேயி இவ்வளவு பொறுப்பற்ற முறையில் விடை கூறிவிட்டாள்! தன்னுடைய கணவன் இறந்ததைப் பற்றி அவள் கூறு வதாக இப்பாடலை முதல் முறை படிப்பவர் யாரும் பொருள் கொள்ள முடியாதே! பரதனுடைய துடிப்பைக் கண்டாவது அவள் சற்றுப் பரிவு காட்டியிருத்தல் ஆகாதா? இவ்விடையைக் கேட்ட நமக்கே மனம் துடித்து அவள்மேல் கோபமும் வருகிறதே! இதனைக் கேட்ட பரதனுக்கு எத் துணைச் சினம் தோன்றியிருக்கும்! அவள் செய்த சூழ்ச்சி யாலேதான் தசரதன் இறந்தான் என்று அவன் அறிந் திருப்பின் பெருஞ்சினம் கொண்டிருப்பான். ஆனால், அதை அவன் இன்னும் அறியவில்லையாகலின், தன் தாய் ஏன் இவ்வளவு பொறுப்பற்ற முறையில் கணவன் சாவைப் பற்றிக் குறிப்பிட்டாள் என்பதை அறிய முடியாமல் தவிக் கிறான் பரதன்.

அவள் சொற்களைக் கேட்ட பரதன், ''நெறிந்து அலர் குஞ்சியானாய், நெடிது வீழ்ந்து, அறிந்திலன், உயர்த்திலன்.'' சிறிது தெளிந்து எழுந்தான்; ''முக ஒளி மழுங்கத் தன் அலர்ந்த தாமரை ஆய் அலர் நயனங்கள் அருவி சோர்தர'' இதோ பேசுகிறான். எல்லை கடந்த கோபத்திலும், எல்லை கடந்த மகிழ்ச்சியிலும், துயரத்திலும் ஒருவன் பேசும் சொற்களைக் கொண்டே அவனுடைய பண்பாட்டை நன்கு அறியலாம்.

''ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.''

(திரு.—139)

என்ற பொதுமறை ஆழ்ந்த அனுபவத்தின்மேல் தோன்றியதன்றோ? மனிதன் சாதாரண நேரங்களில்தான் பேசும் சொற்களை ஆய்ந்து அளந்து பேசுகிறான். ஆனால், அளவு மீறிய உணர்ச்சியில் ஆய்ந்து அளந்து பேசுதல் இயலாத காரியம். அத்தகைய நேரங்களில் அவனிடமிருந்து எவ்வகையான சொற்கள் வெளிவருகின்றனவோ, அவை அவனுடைய அகமனத்திலிருந்து வருபவை அல்லவா? இத்தகைய ஒரு கோப நிலையில் இதோ பண்பட்ட பரதன் பேசுகிறான்.

''தீஎரி செவியில்வைத்து அனைய தீயசொல்
நீஅலது உரைசெய நினைப்ப ரோ!'' என்றான்.

(கம்பன்—2147)

'நெருப்பைக் காதில் வைத்தது போன்ற இக்கொடிய சொற்களை இவ்வாறு கவலை சிறிதும் இல்லாமல் கூறுவதற்கு உன்னைத் தவிர வேறு யாராவது நினைப்பார்களா அம்மா!' என்கிறான். பண்பாட்டின் உச்ச நிலையில் நிற்கும் பரதனுடைய இச் சொற்கள் அவனுடைய அகமனத்திலிருந்து எழுந்தவையாகலின், அவனைப்பற்றி நாம் நன்கு அறிய உதவுகின்றன.

மற்றோர் இலக்கியத்தில் வரும் இத்தகையதோர் இடத்தைக் காணல் நலம் பயக்கும். **அப்பூதியடிகள்** என்ற அந்தணர், **திருநாவுக்கரசர்** சமணர்கள் செய்த தீமைகளை எல்லாம் இறைவன் அருளால் வென்று உயிருடன் மீண்டதைக் கேள்விப்பட்டார்; அவரிடத்து மீளாக் காதல் கொண்டார்; தம் வீட்டில் உள்ள அனைவருக்கும் அனைத்திற்கும் நாவுக்கரசு என்ற பெயரையே இட்டார்; பெரிய தண்ணீர்ப்பந்தலை வைத்து, அதற்கு 'நாவுக்கரசு தண்ணீர்ப் பந்தல்' என்றும் பெயரிட்டார். இவ்வளவிற்கும் அவர் நாவுக்கரசரை ஒரு முறை கூடக் கண்டதில்லை. இவ்வாறு அவர் வாழும் நாளில் ஒருமுறை திருநாவுக்கரசரே அவரைக் காணவந்தார். அவர்தாம் நாவுக்கரசரென்பது அப்பூதியடிகளுக்குத் தெரியாது. வந்தவரை அவர் உபசரிக்கும் பொழுது வந்த பெரியவர் அப்பூதியடிகளைப் பார்த்து, 'ஐயா, நீர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் நும் பேர் எழுதாதே வேறு ஒரு பேர் எழுத வேண்டிய காரணம் யாது?' என்று வினவினார். தம்மால் போற்றி வழிபடப் படும் ஒருவருடைய பெயரை இவ்வளவு பொறுப்பற்ற முறையில் **'வேறு ஒரு பேர்'** என்று கூறி விட்டார் அல்லவா பெரியவர்? அப்பூதியடிகளுக்கு அளவு மீறிய சினம் பொங்கி விட்டது. தம்மை மறந்த நிலையிலும் பண்பாட்டை மறவாமல் அப்பூதியடிகள் பேசுகிறார்.

''நின்றமறை யவர்கேளா நிலைஅழிந்த சிந்தையராய்
'நன்றுஅருளிச் செய்திலீர்!'.........எனவெகுள்வார்''

(அப்பூதி. புராணம் 13)

நிலை அழிந்த சிந்தையிலும் அப்பூதியடிகள் வாயிலிருந்து வெளிவந்த சொற்கள் எவை தெரியுமா? ''ஐயா, நீர் நல்ல வார்த்தை சொல்லவில்லை!'' என்பதுதான்.

இதே போலப் பரதனும் தன்னை மறந்த நிலையிலும் பண்பாடு குறையாமல் தாயிடம் பேசுகிறான். எத்தகைய சூழ்நிலையிலும் தன் பண்பாட்டை மறவாத இம்மனநிலை

தான் பரதனை ஆயிரம் இராமர்கட்குச் சமானமானவனாகச் செய்தது என்பதை நினைவிற் இருத்தல் வேண்டும்.

தாயின்மேல் உண்டான சினத்தைக் காட்டிலும் தந்தையை இழந்த துயரம் மிகுதியாகி விட்டதால், பரதன் உடனே தந்தையை நினைந்து புலம்பத் தொடங்கி விட்டான். இந்த நிலையில் தந்தையின் சாவுக்குத் தாயே காரணம் என்பதைப் பரதன் கனவிலும் கருதினவனல்லன். 'சாவு' என்பது பிறந்தவர் அனைவர்க்கும் இயற்கையாக வந்து தீர வேண்டிய ஒன்றுதானே? எனவே, ஒருவர் இறந்ததற்காக மற்றவர்மேல் சினம் கொள்வது அறியாமையின் பாற்படாதோ? ஆதலால், பரதன் தாயின் மேல் சினங் கொள்ளவில்லை. அவள் மேல் குறை கூறுவதாயிருப்பின், பொறுப்பற்ற முறையில் இதனை அறிவித்தானே என்பது தவிர, வேறு குறை காண்டல் இயலாது. எனவே, தந்தை இயல்பாகவே இறந்தான் என்று கருதியே பரதன் புலம்புகிறான்.

திடீரென்று இச்செய்தியைக் கேட்டதால் உண்டான பெருந்துயரம் ஓரளவு குறைந்தது. உடனே பரதனுக்கு இராமனின் நினைவு வந்துவிட்டது. சிறிதும் பரிவு காட்டாத தாயிடம் பேசுவதால் துயரம் குறையாது ஆகலின், தன் வந்தனைக்கும் அன்புக்கும் உரியவனான இராமனிடம் சென்றாலாவது தன் துயரம் ஆறாதா என்று கருதிய பரதன்,

"அந்தம்இல் பெருங்குணத்து இராமன் ஆதலால்
வந்தனை அவன்கழல் வைத்த போதுஅலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாது!" என்றான்.

(கம்பன்—2159)

இவ்வார்த்தைகள் கைகேயியை நோக்கிக் கூறப்பெற்றவை அல்ல; பரதன் தனக்குத்தானே பேசிக் கொண்ட சொற்கள் என்றாலும், இவ்வாறு கூறும் அவன் இராமனைத் தேடிச் சென்று பிறர் மூலம் கேள்விப்படுதலைக்காட்டிலும் தானே

கூறிவிடுவது நலம் என்று நினைத்தாள் போலும் கைகேயி; உடனே கூறத் தொடங்கிவிட்டாள்.

"தெவ்வடு சிலையினோய்! தேவி, தம்பிஎன்று
இவ்விரு வோரொடும் கானத் தான்" என்றாள்.

(கம்பன்—2160)

கைகேயி தானே ஏற்படுத்திய சிக்கலில் சிக்கி அறிவை இழந்துவிட்டாள் என்பதற்கு இதைவிடச் சான்று வேறு வேண்டுமோ? முன்னரே சினம் கொண்டு துடிக்கும் பரதனுக்கு இச்சொற்கள் மேலும் எவ்வளவு சினமூட்டும் என்பதை அவள் அறியாளா? இதைக் கூறினவுடன், 'ஏன் காடு சென்றான்?' என்ற வினாத் தோன்றாதா? அப்பொழுது அதற்கும் தான் விடை கூற வேண்டியிருக்குமே! ஏன் இதுபற்றிக் கவலை கொள்ளாமல் கைகேயி இவ்வாறு நுணலும் தன் வாயாற் கெடுவது போலப், பேசுகிறாள்? இதுதான் அறிவு கலங்கியவர் செயல் என்று கூறப்படும். தானே இதனைப் பரதனிடம் கூறாமல் பிறரிடம் அவன் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு விட்டுவிட்டால் அவன் சினம் முழுவதும் அங்கேயே ஓங்கி அடங்கிவிடாதா? எதிரே கூறினால், பரதன் சினமிகுதியால் தவறுதலாக ஏதேனும் செய்துவிட்டால் என்ன ஆவது என்று அவள் நினைந்து பார்க்கவில்லையே! ஆம்! வரன் முறையாக நினைந்து பார்த்து என்ன செய்யலாம் என்று சிந்திக்கும் அறிவைக் கைகேயி இழந்து விட்டாள்.[1]

கைகேயி கூறிய இச்சொற்கள் பரதன் காதில் பட்டன. ஆனால், ஒரு கணம் இவை எவ்வித உணர்ச்சியையும் அவனிடம் உண்டாக்கவில்லை. ஏன் தெரியுமா? சற்றும் பொருத்தமற்ற சொற்கள் நமக்கு எவ்வித உணர்ச்சியையும் உண்டாக்காமலிருப்பதில் வியப்பென்னை? 'தந்தை கிழவன்; அவன் இறந்தான்,' என்றால், அது நம்பக்கூடிய ஒன்று. ஆனால், தசரதன் இறந்தவுடன்—ஏன்?—இருக்கும்

1. 'அரசியர் மூவர்.' கம்பன் கலை

பொழுதேகூட, முடிசூடுதற்குரிய மூத்த மகன், தசரதனுக்கு உயிரனையவன், காட்டில் இருக்கிறான் என்றால், எவ்வாறு இதனை நம்புவது? அதுவும் மனைவியை அழைத்துக் கொண்டு சென்றுள்ளான் எனில், எவ்வாறு அச்சொற்களை நம்புவது? நம்ப முடியாத சொற்களைக் கேட்டால் யார் தான் உணர்ச்சி வசப்படுவர்?

எனவே, கைகேயி கூறிய இச்சொற்களை நம்ப முடியாதவனாகிவிட்டான் பரதன்; ஆனால், கூறிய ஆளைக் கவனித்தான். விளையாட்டுக்கு இதனைக் கூறக் கூடியவள் அல்லள் கைகேயி. அதுவும் அவளுடைய காதல் திருமகனைப் பற்றியா இவ்வாறு கூறுவாள்? எனவே, அவள் கூறியதால் ஒருகணம் நினைத்துப் பார்த்தும் வேறு வழி இன்மையின் நம்ப நேர்ந்தது. நம்பினவுடன் அச்சொற்கள் அவன் மனத்துள் பதிந்தன; பதிந்தவுடன் உணர்ச்சியைத் தூண்டின. என்ன உணர்ச்சி என்று நினைக்கிறீர்கள்? தந்தை இறந்தான் என்ற சொல் தோற்றுவித்த துயர உணர்ச்சி அன்று இது; தாய் பொறுப்பற்ற முறையில் கூறியதுபற்றித் தோன்றிய சின உணர்ச்சியும் அன்று. தன்னால் பொறுக்க முடியாத நிலையில் 'இதனைக் கேட்கவும் நேரிட்டதே' என்று தன்மேலேயே தோன்றிய வெறுப் புணர்ச்சிதான் இப்பொழுது தோன்றிற்று. இவ்வெறுப் புணர்ச்சியால் தூண்டப்பட்ட பரதன் தாயை நோக்கி, "அம்மா, இன்னும் கேட்கவேண்டுபவை என்னென்ன உண்டோ, கூறிவிடுங்கள்," என்கிறான்.

"வனத்தினன்' என்றுஅவள் இசைத்த மாற்றத்தை
நினைத்தனன் இருந்தனன் நெருப்புஉண் டான்என,
வினைத்திறம் யாதுஇனி விளைப்பது? இன்னமும்
எனைத்துள கேட்பன துன்பம் யான்?" என்றான்.

(கம்பன்—2161)

'நினைந்தனன் இருந்தனன்' என்ற சொற்களுக்கு 'இருந்து நினைத்துப் பார்த்துப் பிறகு உணர்ந்தான்' என்பதே பொருள்.

இவ்வாறு பரதன் கூறவும் கைகேயி யாதொன்றும் கூறாமல் இருந்துவிட்டாள். அவள் வாய் மூடி இருப்பதைக் கண்ட பரதனுடைய ஐயம் பலபடியாய் விரிந்துவிட்டது. அந்தக் காலத்தில் ஒருவன் வனத்தை நண்ணினான் என்றால், அது தக்க காரணம் பற்றியதாகவே இருக்கும். வேட்டை கருதியும், தவம் செய்வான் வேண்டியும் மக்கள் வனம் செல்வதுண்டு. ஆனால், இராமன் தான் மட்டுஞ் செல்லாமல் தையலாளையும் உடன்கொண்டு சென்றான் என்று கூறப்பெறுவதால், இவை இரண்டும் காரணமாய் இருத்தற்கில்லை. ஒரு வேளை 'வானப் பிரஸ்த' நிலையில் மனைவியுடன் வனஞ்சார்ந்தான் என்று கூறவும் இராம னுடைய வயது இடந்தரவில்லை. பின்னர் ஏன் வனஞ் சென்றான் இராமன்?

சமுதாயத்திற்குத் தீங்கு இழைத்தவர்களையே காட்டுக்கு ஓட்டுதல் மரபு. சூரிய குலத்தில் தோன்றிய 'அசமஞ்சன்' என்பான், மக்களுக்குத் தீங்கு புரிந்தமையின், காட்டிற்கு ஓட்டப்பட்டான். அவ்வாறு ஒருவேளை இருக்குமோ என்று கருதிய பரதன், 'தீங்கு இழைத்த தாலா?' என்று தனக்குத்தானே கேட்டுக்கொள்வது போலக் கைகேயியைக் கேட்கிறான். நல்ல நிலையிலிருப் பாரும் தெய்வக் குற்றம் செய்தமையின் அறிவு கலங்கிப் பித்துற்றுக் காடு செல்வதும் உண்டு. அவ்வாறிருக்குமோ என்று ஐயுறுகிறான் பரதன். நல்ல நிலையில் இருந்த நளன், தருமன் போன்றார் அகங்காரம் காரணமாகச் சூதாடி நாட்டை இழந்து விதியினால் காட்டிற்குச் செலுத்தப்பட்டனர். அவ்வாறு இருக்குமோ என்றும் ஐயுற்றான்; பரதன் ஒரு வினாடி இவ்வாறு நினைத்தாலும் உடனே மனம் மாறிவிட்டான்; அடுத்த கணம் 'யாரைப் பற்றி இவ்வாறு நினைத்துவிட்டோம் தவறாக!' என்று நினைத்து, அவ்வாறு தான் நினைத்த செயலுக்கே வருந்து கிறான். 'இத்தகைய தீமைகளை இராமனா செய்வான்? கனவிலுங் கருத முடியாததொன்று! ஒரு வேளை இராமன்

இவ்வாறு செய்திருப்பின் அது உலகத்தார் விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டிய செயலாகவன்றோ இருக்கும்? இராமன் ஒன்றைச் செய்தான் எனில், அது பிறருக்கு நன்மை பயப்பதாய் இருக்குமே தவிர, வேறு யாதாய் இருத்தல் கூடும்?' இவ்வாறு நினைத்தவுடன் திடீரென்று பரதனுக்கு ஓர் ஐயம் பிறந்தது. இராமன் காடு சென்றது தன் தந்தை இருக்கும்பொழுதா அன்றி இறந்த பிறகா என்று கேட்கிறான் தாயை.

''ஏங்கினன் விம்மலோடு இருந்த ஏந்தல்'அப்
பூங்கழற் காவலன் வனத்துப் போயது
தீங்குஇழைத் ததனினோ? தெய்வம் சீறியோ?
ஓங்கிய விதியினோ? யாதி னோ?' எனா,

'''தீயன இராமனே செய்யு மேல்அவை
தாய்செயல் அல்லவோ தலத்துஉ ளோர்க்கெலாம்?
போயது தாதைவிண் புக்க பின்னரோ,
ஆயதன் முன்னரோ? அருளுவீர்,' என்றான்.''

(கம்பன்—2162, '63)

இவ்விரண்டாவது பாடலில் பரதனது மனப் பண்பை மிக நன்றாக அறிய முடிகிறது நம்மால். இராமன் மாட்டு அவன் கொண்டிருந்த அன்பும் நம்பிக்கையும் எத்தகையன? 'இராமனா தீமை செய்வான்?' என்று ஒரு வினாவை எழுப்பினான். அதற்கு 'ஆம்' என்றோ, 'அன்று' என்றோ யாரும் விடை கூறவில்லை. ஒரு வேளை தீமையே செய்தான் என்று யாரேனும் கூறுவாராகில், அதற்கும் விடை காண்கிறது அவனுடைய பண்பட்ட உள்ளம். இராமன் செய்தவற்றில் நன்மை தீமை ஆராய்ச்சி செய்ய யாருக்கும் உரிமை இல்லை. இது முறையா? ஏன் செய்யக்கூடாது என்கிறீர்களா? இதோ விடை கூறுகிறான் பரதன்.

ஒரு குழந்தையை வளர்க்கும் தாய் நிலைமைக்கு ஏற்பக் குழந்தைக்கு ஆகாரத்தையும் மருந்தையும்

தருகிறாள். சில சந்தர்ப்பங்களில் குழந்தை உணவை விரும்பிக் கேட்கும் பொழுது தாய் மறுத்துவிடுகிறாள்; அது விரும்பாத மருந்தைத் தருகிறாள். மருந்திலும் சில நேரம் இனிப்புடைய மருந்தையும் இன்னஞ் சில நேரம் கைப்புடைய மருந்தையும் அல்லவா தருகிறாள்? உணவை மறுத்துவிட்டுத் தாய் கைப்பு மருந்தைக் கொடுக்கும் பொழுது அத்தாயைக் காண்பார் யாராவது, 'இது கொடிய செயல்' என்று கூறுவதுண்டா? ஆனால், தாயே கொடுப்பினும், கைப்பு மருந்து இனிப்புடையதாக மாறி விடுமா? கைப்புக் கைப்புத்தான், தாயே அன்புடன் கொடுத்தாலும். ஆனால், அதனைத் தந்த காரணத்தால் தாயைக் கருணை அற்றவள் என்றும் யாரும் கூறுவ தில்லையே! அதே போன்று, இராமன் ஒரு கொடுமை செய்துவிட்டான் என்றால், அதனைக் கொடுமை என்று கூறுவதைக்காட்டிலும் கொடுமை வேறு இல்லை. தாய் தந்த மருந்தைக் கொடுமை என்று கூறும் பொழுதுதான் இராமன் செயலையும் கொடுமை என்று கூறவேண்டும். அதனாலேதான் 'தீயன இராமனே செய்யும்?' என்று கேட்டான் பரதன். இவ்வினாவிலேயே இராமன் தீமை செய்யவே மாட்டான் என்ற விடை கிடைத்து விடுகிறது. ஒருவேளை அவன் நன்மை என்று கருதிச் செய்ததைப் பிறர் கொடுமை என்று கருதினால் என் செய்வது? அதற்கும் விடை கூறுகிறான் பரதன் இரண்டாம் அடியில். 'செய்யு மேல் அவை தலத்துளோர்க்குத் தாய்செயல் அல்லவோ?' என்கிறான். இராமன் செயல்கள் அனைத்தையும் தாயின் செயலாகக் காணும் பரதனது பண்பாட்டை யாரே அளவிட்டு அறிய முடியும்? ஆம்! அவ்விராமனே தன் வாயால் அறத்தின் வடிவென்றும், செம்மையின் ஆணி என்றும் பரதனைப் புகழ்கிறான்.

மேலே கூறிய அனைத்துக் காரணங்களையும் தவறு என்று கூறிவிட்டுக் கைகேயி அவனுடைய இறுதி வினாவிற்கு மட்டும் விடை கூறுகிறாள்.

"அருக்கனே அனைய்அவ் வரசர் கோமகன்
இருக்கவே வனத்துஅவன் ஏகி னான்," என்றான்.
(கம்பன்—2146)

இவ்வாறு கைகேயி கூறினவுடன் பரதன் தன்னுடைய இயல்பை மறந்து சினங் கொள்கிறான். இக்காரணங்கள் அனைத்தும் இல்லை என்றால், பிறகு இராமன் ஏன் காடு சென்றான்? தசரதன் ஏன் இறந்தான்? இவ்வினாக்களைக் கேட்கும் பொழுதே பரதன் மிக்க சினம் அடைகிறான். அவன் கூறிய காரணங்களுள் எதனாலும் இராமன் வனம் புகவில்லை என்று கைகேயி கூறினவுடன் அறிவுடைப் பரதனுக்கு ஒரு திகைப்பும் ஓர் ஐயமும் பிறக்கின்றன. 'இவை அனைத்தும் இல்லை என்றால், வேறு யாது காரணமாய் இருக்கலாம்!' என்பது திகைப்பு. ஒரு வேளை ஆம் ஒருவேளைதான், உறுதியாக அன்று, சிறிது கலக்கமே இல்லாமல் காட்சி அளிக்கின்ற இத்தாயே இராமன் காடு செல்லக் காரணமாய் இருந்திருப்பாளோ! இந்த ஐயம் தோன்றினவுடன் அவனையும் அறியாமல் பரதனுடைய சினம் கொஞ்சம் கொஞ்சமாகப் பொங்க ஆரம்பிக்கிறது. காரணத்தை உறுதியாக அறிந்து கொள்ளாமல் அவள் மேல் சினங்கொள்ள அவன் விரும்பவில்லை. எனவே, அவனுடைய சினம் அவனுடைய வினாவில் குறிப்பாக வெளிப்படுகிறது.

"குற்றம்ஒன்று இல்லையேல், கொதித்து, வேறுஓர்
செற்றதும் இல்லையேல் தெய்வத் தால்அன்றேல்,
பெற்றவன் இருக்கவே பிள்ளை கான்புக
உற்றதுஎன்? பின்அவன் உலந்தது என்?"என்றான்.
(கம்பன்—213)

முன்னர் அவன் கேட்ட வினாக்களுக்கும் இப்பொழுது வினாவும் வினாக்களுக்கும் உள்ள வேறுபாட்டை அறியாமல் இருக்க முடியாது. உள்ளே பொங்கிவரும் சினத்தை அடக்கிப் பேசும் முயற்சி இக்கேள்விகளில் புலப்

படவில்லையா? அதிலும் 'பெற்றவன் இருக்கவே பிள்ளை கான்புக உற்றது என்?'' என்ற வினாவிலேதான் எத் துணைச் சினமும் வெறுப்பும் அடங்கியிருக்கின்றன! இக் கேள்வியைக்கூட முறையானது என்று கூறிவிடலாம்.

ஆனால், இரண்டாம் வினாவிற்குக் காரணம் யாது? ஒருவனை 'எவ்வாறு இறந்தான்?' என்று கேட்பது முறை. 'ஏன் இறந்தான்?' என்பது முறையற்ற வினா. 'ஏன் இறந் தான்?' என்று கேட்கும் பொழுதே கேட்படுபவர் மற்ற வனுடைய சாவுக்குக் காரணமோ என்று ஐயப்படும் மனம் வெளிப்படவில்லையா? 'பின் அவன் (தசரதன்) உலந்தது (இறந்தது) என்?' என்ற வினாவைத் தாயைப் பார்த்து மகன் கேட்பதனால், அது மிக மிக வருந்தற்குரிய ஒரு செயல் அன்றோ? பண்பாடுடைய பரதன் தாயைப் பார்த்து இவ்வாறு கேட்கலாமா? இது அறமா? அறமன்று தான், மற்றொரு தாயிடம் மற்றொரு மகன் கேட்டிருப் பின். ஆனால், கைகேயிடம் பரதன் கேட்டால், இது முறை தான். அவன் அவளுடைய நடையுடை பாவனைகளைக் கொண்டு அவளே காரணமாகலாமோ என்று ஐயுற்றான். நமக்கு அது எவ்வளவு மெய்ம்மை என்பது தெரியும். ஆனால், அவனுக்கு முன்னர் நடைபெற்றவற்றுள் ஒன்றும் தெரியா தாகலான், அவள் மனநிலையைக் குறிப்பால் உணர்ந்து கொண்டே இவ்வாறு ஐயப்பட்டான் என்று நினைக்கும் பொழுது பரதனது அறிவுத்திறத்தை வியவாமல் இருத்தற்கு இயலவில்லை. இதோ அவனுடைய ஐயத்திற்கு விடை கிடைத்துவிடுகிறது. அவனுடைய வினாக்கள் அனைத்திற்கும் ஒரே பாடலில் கைகேயி விடை கூறி விடுகிறாள்.

''வாக்கினால் வரம்தரக் கொண்டு, மைந்தனைப்
போக்கினேன் வனத்திடை; போக்கிப் பார்உனக்கு
ஆக்கினேன்; அவன்அது பொறுக்க லாமையால்
நீக்கினான் தன்உயிர் நேமி வேந்து,'' என்றாள்.

(கம்பன்—2166)

முதல் முறையாகக் கைகேயி இராமனை 'மைந்தன்' என்று இப்பாடலிலேதான் குறிக்கிறாள். ஏன் தெரியுமா? பரதனிடம் பேசும் பொழுது இதுவரை இராமனிடம் பாராட்டிய உரிமையை விட்டு விட்டதுபோலப் பேசினால், அவன் சினம் இன்னும் மிகுதிப்படுமன்றோ? எனவே, 'மைந்தனை' என்று குறித்தாள். மேலும், தசரதனுடைய சாவிற்குத் தான் நேரான காரணி அல்லள் என்பதை அவள் குறிப்பால் பெற வைக்கிறாள். வரங்கொண்டு இராமனைக் காட்டிற்கு அனுப்பியவளும், அரசைப் பரதனுக்கு ஆக்கியவளும் தானே என்பதை முன் இரண்டு அடிகளிலும் குறித்துவிட்டாள்.

பின் இரண்டு அடிகளில், 'அச்செயல், பொறுக்காமல் தசரதன் **தானே உயிரை விட்டான்,'** என்று கூறுகிறாள். பொறுக்க முடியாமல் உயிர் **நீங்கினான்** என்று கூறுவதற்குப் பதிலாகத் 'தன் உயிர் **நீக்கினான்,'** என்று அவள் கூறுவது கவனித்தற்குரியது. ஏறத்தாழத் தசரதன் தற்கொலை செய்துகொண்டான் என்றே குறிப்பிடுகிறாள் கைகேயி. அவள் கூறிய இந்த நுணுக்கம் பரதன் செவிகளிற் புகவே இல்லை. அவன் தன்னை மறந்த நிலைக்குச் சென்று விட்டான் முன் அடிகளிற் கூறியவற்றைக் கேட்ட மாத்திரத்திலேயே. தன் உயிர் என்றும், வழிபடு தெய்வம் என்றும் தான் கருதும் இராமனை தன்னைப் பெற்ற தாயே காட்டிற்கு அனுப்பினாள் என்பது செவியில் விழுந்த வுடன் அவன் தன்னை மறந்துவிட்டான். தந்தையின் மறைவு குறித்து வருந்தும் பரதன் இப்பொழுது இல்லை. இப்பொழுது கைகேயியின் மகன் அல்லன் எதிரில் நிற்பவன்; தசரதன் மகனும் அல்லன். இராமனுடைய பத்தன் நிற்கிறன். அவன் தெய்வத்தை ஒருவர் வெருட்டிவிட்டார், அது யாராயிருப்பினும் சரி! அவ்வாறு வெருட்டியவர் அவனுடைய பகைவரே. இராமனைப்பற்றி அவன் என்ன நினைத்திருந்தான்?

"எந்தையும் யாயும்எம் பிரானும் எம்முனும்
அந்தம்இல் பெருங்குணத்து இராமன்."
(கம்பன்—2159)

என்றே நினைந்திருந்தான். ஆதலால், அத்தகைய இராமனுக்குத் தீமை புரிந்தவர் யாவராயினும் அவர் அவனுடைய பகைவராவதில் வியப்பு ஒன்றும் இல்லை அன்றோ? இதோ அவன் சினங்கொள்கிறான்!

பரதன் சினம்

"கூடின புருவங்கள்! குனித்துக் கூத்து நின்று
ஆடின! உயிர்ப்பிடை அனல்கொ ழுந்துகள்
ஓடின! உமிழ்ந்தன உதிரம் கண்களே!

"துடித்தன கபோலங்கள்! சுற்றும் தீச்சுடர்
பொடித்தன! மயிர்த்தொளை புகையும் போர்த்தது!
மடித்தது வாய்!நெடு மழைக்கை மண்பக
அடித்தன ஒன்றோடொன்று அசனி அஞ்சவே!"
(கம்பன்—2167, '68)

பரதனுடைய இத்தாங்கருஞ்சினத்தைக் கண்டு,

"அஞ்சினர் வானவர்! அவுணர் அச்சத்தால்
துஞ்சினர்! எனைப்பல சொரிம தத்தொளை
எஞ்சின திசைக்கரி! இரவி மீண்டனன்!
வெஞ்சினக் கூற்றும்தன் விழிபு தைத்ததே!"
(கம்பன்—2170)

சினம் கொளல் முறையா?

'ஆ! ஈதென்ன வியப்பு! பரதனா இவ்வாறு சினங்கொண்டான்? பண்பாட்டின் வடிவமென்றும், நேர்மையின் ஆணி என்றும், அறத்தின் திருவுரு என்றும், நீதியாறு புக மண்டும் கடல் என்றும் கூறப்பெற்ற பரதனா இவ்வாறு சினங்கொண்டான்? இது முறையா?' என்று நினைக்கத் தோன்றுகிறதா?' முறை அன்றுதான்! எப்பொழுது முறை

யன்று! பரதன் கடவுளாய் இருப்பின் முறையன்றுதான். ஆனால் பரதனைக் கடவுள் என்று யார் கூறினர்? அவன் மனிதனே. மனிதனாகவே கம்பநாடன் அவனைப் படைத்து உலவவிடுகிறான். பரதன் மனிதனாகலின், அவனுக்கு இந் நேரத்தில் சினம் வாராமலிருந்தால், அதுவே தவறாகும்.

மனிதன் உயிரைக்காட்டிலும் சிறப்பாக மதிக்கும் பொருள்கள் சில உண்டு. அப்பொருள்களுக்கு யாரேனும் தீமை செய்வாராயின், அப்பொழுது அவன் சினம் கொள் வதில் தவறு இல்லை. பெரியவர் ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு குறிக்கோள் இருக்கும். அக்குறிக்கோளை அவர்கள் உயிரினும் மேலாகப் போற்றுவார்கள்; அக் குறிக்கோளுக் காகவே உயிர்வாழ்வார்கள் எப்பொழுதேனும் அக்குறிக் கோளுக்குத் தீங்கு நேருமாயின், உயிரை விட்டேனும் குறிக் கோளை நிலைநிறுத்துவார்கள். இவ்வாறு செய்வதாலே தான் அவர்களைப் பெரியோர் என உலகம் மதிக்கிறது; மதித்துப் புகழவும் புகழ்கிறது. உலகில் தோன்றிய பெரியோர் அனைவரும், பெரிய புராணத்தில் கூறப்பெற்ற அடியார் அனைவரும் உட்பட, இவ்வகுப்பைச் சேர்ந்தவரே யாவர். இவர் அனைவருக்கும் தாம் கொண்ட குறிக் கோளே மிகவும் சிறந்தது. இன்னார் தம் உயிரை விட்டே னும் தம் கொள்கையை நிலை நாட்டுவர். இவர் தம் கொள்கைக்கு இடையூறு விளைப்பவர் யாவராயினும் சரி. அவரைக் கொன்றேனும் கொள்கையை நிறைவேற்றுவர்;

தந்தையின் காலைத் தடிந்த 'சண்டேசுரரும்'[1] இறைவனைப் பழிப்பவர் நாவை அறுத்த 'சத்தியாரும்'[2] அரசன் மனைவி என்றும் பாராமல் இறைவனுக்குரிய பூவை மோந்து பார்த்தமையின் அவள் மூக்கை அரிந்த 'செருத்துணையாரு'ம்[3] இவ்வினத்தைச் சேர்ந்தவரே!

---

1. பெரிய புராணம். சண்டேசுர நாயனார், 51
2. ,, சத்தி நாயனார், 3
3. ,, செருத்துணை நாயனார், 5.

பரதன் என்ற தசரதன் மைந்தன், இராமன் என்ற தசரதன் மைந்தன் காடு சென்றமைக்காக வருந்தவில்லை; கைகேயி மைந்தன், கோசலை மைந்தனுக்காகவும் வருந்தவில்லை; அயோத்தி நாட்டின் குடிமகன் ஒருவன் அந் நாட்டின் வருங்கால அரசன் காடு சென்று விட்டானே நாட்டை ஆளாமல் என்று அதற்காகவும் வருந்தவில்லை. பின்னர் யார் இப்பொழுது அரற்றுகிறவன்? பரதன் என்ற மனிதன், பண்பாட்டில் நிறைந்த ஒரு மனிதன், அரற்றுகிறான். ஏன்? தன் அண்ணனும், தாயும், தந்தையும், உயிரும் என்று மதித்த ஒருவனை இழந்ததால் துடிக்கிறான். உயிரினும் மேம்பட்ட கொள்கையாக, கொள்கையினும் மேம்பட்ட குறிக்கோளாக அன்றோ இராமனை அவன் கருதி வாழ்ந்தான்! அன்பைச் சொரிதற்குரிய தெய்வமாகக் கொண்ட ஒரு பொருளை இழந்தால் யார் தான் வருந்தாமல் இருக்க முடியும்? எனவே வருந்தினான்.

பின்னர் ஏன் சினம்? ஆம்! பொருளை இயற்கையாக இழந்திருந்தால் வருத்தம் மட்டும் ஏற்பட்டிருக்கும். ஆனால், அவ்வாறு அல்லாமல் செயற்கையாக மற்றொருவர் சூழ்ச்சி காரணமாக இழந்திருந்தால் அச் சூழ்ச்சியாளர்மேல் சினந் தோன்றாமல் வேறு என்ன தோன்றும்? தான் இல்லாத சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து, அப் பொருள் மிகுதியும் தன்னால் போற்றப்படுவது என்பதை நன்கு அறிந்த ஒருவரே அதனைப் போக்கிவிட்டால், போக்கினவர்மேல் சினம் தோன்றாதா? அதிலும், அவ்வாறு போக்கினவர் தன்னுடைய நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவர் என்றால், அத்துயரம் எத்துணைப் பெரிதாகப் படரும்? ஐயோ! பரதன் கைகேயியை எவ்வளவு நம்பியிருந்தான்! அவளுக்கு இராமன்மேல் அன்பு இல்லாமலிருப்பினும், பெற்றெடுத்த பரதன்மேல் கூடவா அன்பு இல்லை? உண்மையான அன்பு இருந்திருப்பின், அவ்வன்பு அப் பரதனுக்கு விருப்பம் இல்லாத ஒன்றைச் செய்ய அவளைத்

தூண்டுமா? பரதன் வெறுப்பான் என்பதை நன்கு அறிந்திருந்தும் அதனைச் செய்யத் தூண்டுமா? பரதன்மேல் அன்பு கொண்டவர் அவன் உடலைப் பேணி வைத்துக் கொண்டு அவனுடைய உயிரைப் பறித்து எறிய முன் வருவரோ? உண்மையில் கைகேயி செய்தது அத்தகைய செயற்கைதானே! பரதன் உடலாகவும் இராமன் உயிராகவும் இருந்தார்கள் என்பதை ஒருவனைப் பெற்று மற்றொருவனை வளர்த்த அத்தாய் அறியமாட்டாளா? அறிந்துமா செய்தாள்? ஆம், அறிந்தேதான் செய்தாள். அவ்வாறாயின், அவள் தாய் அல்லள்! இது உறுதி. பரதன் இராமன் என்ற இருவருக்குமே அவள் தாயல்லள்.

கைகேயி என்ற பெண் ஒருத்திதான் இப்பொழுது எதிரே நிற்கிறாள். அதிலும், பரதன் என்னும் அரச குமாரனுடைய உயிரைப் பிரித்துக் காட்டுக்கு அனுப்பிய பெருங்குற்றத்தைப் புரிந்த ஒருத்தியே நிற்கிறாள்; மேலும், அவள் அறியாமையால் இதனைச் செய்யவில்லை; அறிந்தே செய்துள்ளாள். அறிந்து ஒரு கொலையைச் செய்த அவள் மேல் சினங்கொள்வது தவறா? ஆம்! கொலை என்றாற் கூடக் கொலை செய்யப்பட்டவருடைய துயரம் உடன் ஒழிந்துவிடும். கைகேயி செய்தது அதனைக்காட்டிலும் மிக மோசமான ஒரு செயல். பரதனைக் கொன்றிருந்தால் மிக்க மகிழ்ச்சியுடன் அவன் இறந்திருப்பான். ஆனால், அவன் வாழ்நாள் முழுவதும் இருந்து நினைந்து நினைந்து நையக் கூடிய ஒரு செயலை அன்றோ செய்துவிட்டாள்! கொலையினும் கேடான இத்தொழிலைச் செய்த அவளை என்னதான் செய்யக் கூடாது? அதிலும் அவனுக்காகவே இவ்விழிந்த செயலைச் செய்ததாக அவளே கூறினால், அது எவ்வளவு தவறானது? பரதன் நாடாள்வதற்காக இராமனைக் காட்டிற்கு அனுப்பினளாம்! உடம்பை வீட்டில் வைத்துவிட்டு உயிரைப் பிரித்துக் காட்டிற்கு அனுப்பினதோடல்லாமல், அவ்வாறு செய்ததை 'உடலின் நன்மைக்கே செய்தேன்,' என்று ஒருவர் கூறினால், அதனை

மன்னிக்கக் கூடுமா? இவ்வாறு பெருந்தவற்றைச் செய்தமைக்காகவே பரதன் அவள்மேல் சினங்கொள்கிறான்.

அவனுடைய சினத்தில் அவளைக் கொன்று விடமுடிவு செய்துவிட்டான். 'ஆ! பரதன் தாயைக் கொல்லக்கூட முடிவு செய்துவிட்டானா!' என்று வியப்புத் தோன்றுகிறதா? தோன்றும்; நம்மைப் போன்றவர்கட்கே அவ்வாறு தோன்றும். வாழ்க்கையில் உண்டு உடுத்து இன்பமாக வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்ட நமக்குத் தாய், தந்தை, பிள்ளைகள், மனைவி என்றவர்களிடம் உரிமையையும் கடமையும் உண்டு. அவர்களை நலத்துடன் பேணுவதே கடமை. தாய்க்கொலை என்பது நினைக்கவும் கூடாத பெருந்தவறுதான். ஆனால், வாழ்வில் கொண்ட ஒரு குறிக்கோளுக்கு எதனையும், தம்மை உட்படத் தியாகம் செய்யத் துடித்து நிற்பவர்க்கு இக்கடமைகள் பெரியன வல்ல. அவர்களுடைய குறிக்கோள்தான் பெரிதே தவிர, இடை நிற்போர் யாவராயினும், தாயேயாயினும், கவலை இல்லை.

அவ்வாறனால், அனைவரும் இந்தச் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளலாமா? தவறு செய்பவர் அனைவரும் இவ்வாறு கூறித் தப்பித்துக்கொள்ளலாமே என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் முடியாது. ஏன்? ஒவ்வொருவரும் இத்தகைய சமாதானம் கூறிக்கொண்டு தாய்க் கொலை போன்ற தவறான செயலில் இறங்கும்பொழுது நாம் அவர்களுடைய செயலின் உண்மை பொய்ம்மைகளை எவ்வாறு அறிவது? அவர் கூற்றைத்தான் நம்பவேண்டுமே தவிர, அவர் உண்மையில் இதனைக் குறிக்கோளாகக் கொண்டவர் தாமா என்பதை எவ்வாறு ஆய்வது என்று தானே ஐயந்தோன்றுகிறது? கவலை வேண்டா. மிகவும் எளிதாக இதன் உண்மையைக் கண்டுவிடலாம்.

ஒருவர் தம் குறிக்கோளைப் பற்றியும் அதனைக் காக்க வேண்டுவதன் இன்றியமையாமை பற்றியும் எவ்வளவு

வேண்டுமானாலும் பேசலாம்; எழுதலாம். அக்குறிக் கோளை நிறைவேற்றுகையில் இடைநிற்போர் யாவ ராயினும் உதறி எறியத் தயாராகலாம். 'அது முறையா?' என்ற வினாத் தோன்றுகிறது. இவ்வாறு எறியத் தயாராய் இருப்பவர் முதலில் தம்மைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதுதான் வினா; குறிக்கோளைக் கொண்டு செலுத்து வதில் தம்முடைய உயிருக்கே தீங்கு நேருமாயின், அப் பொழுதும் அவர் விடாப்பிடியாகக் கொண்டு செலுத்து பவர்தாமா என்பதுதான் வினா. தம் உயிரைப் பற்றியும், அதனைப் பலி இடுவது பற்றியும் கவலையுறாமல் குறிக் கோளைக் கொண்டு செலுத்துபவர் யாவராயினும் அவர் கட்கே பிறரையும் பலியிடும் உரிமை உண்டு தம் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் குறிக்கோளின் எதிரே பலியிடு பவர் பிறருடைய உயிரையும் பலியிடுவதில் தவறு இல்லை.

பரதனும் இத்தகைய இனத்தைச் சேர்ந்தவனே. தாயைக் கொல்லக்கூட அவன் சித்தமாகிவிட்டான். ஏன்? இராமனுக்குத் தீங்கு இழைத்தமைக்காகவே. 'அவ்வாறா யின், இராமன் பொருட்டுப் பரதன் உயிர் தேவைப் பட்டால் தருவானா?' என்பதே வினா. உறுதியாகவும், மகிழ்ச்சியுடனும் அவன் உயிரை இராமன் பொருட்டுத் தருவான். அத்தகைய ஒரு வாய்ப்பை விரும்பி எதிர் பார்த்து அதற்கு மகிழ்ந்து தரக்கூடியவன் பரதன் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பரதனுடைய வாழ்வின் ஒரே குறிக் கோள், இராமன் பொருட்டுத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும் எனபதுதான். எனவே, அத்தகைய இராம னுக்குத் தீங்கு இழைத்தமைக்காகப் பரதன் கைகேயிமேல் சினங்கொண்டு அவளைக் கொல்ல முற்படுவானாயின், அவன்மீது யார் தவறு கூற முடியும்?

மேலும், பரதனைக் கைகேயி பெற்றிருக்கலாம். ஆனால், அவன் அவளைத் தாய் எனவே ஏற்றுக் கொள்ள வில்லை. அவள் ஒரு பெண், தசரதன் மனைவி என்ற அளவிலேதான் அவன் ஒப்புகிறான். அந்தப் பெண் இப்

பொழுது பெருந்தீங்கை இழைத்துவிட்டாள்; அதுவும் அவனுடைய கண்கண்ட தெய்வமாகிய இராமனுக்கு. ஆகலின், இதோ பேசுகிறான். 'எந்தை இறந்தான்; என் தமையன் தவம் பூண்டான். இவை இரண்டும் உனது சூழ்ச்சியால் நிகழ்ந்தவை. இக்கொடுஞ்செய்தியை நீயே உன் வாயாற்கூறியும், அதனைக் கேட்டு நான் உன் வாயைப் பிளந்துவிடாமல் நின்றேன்! உன்னைச் சும்மா விட்டு நிற்பதே யான் இவ்வரசை ஏற்றுக் கொண்டது போலாகுமன்றோ? நீ இன்னம் இருக்கிறாய். யானும் நிற்கிறேன். 'ஏ!' என்று கூறும் நேரத்துள் உன்னைக் கொன்று வீழ்த்திலேன்! தாய் என்ற காரணத்தாலன்று; இவ்வாறு செய்தால் இராமன் என்மேல் சினங்கொள்வான் ஆகலின், விட்டேன்!' என்ற கருத்துப்படக் கூறுகிறான்.

''மாண்டனன் எந்தை,என் தம்முன் மாதவம்
பூண்டனன் நின்கொடும் புணர்ப்பி னால்என்றால்,
கீண்டிலன் வாய்;அது கேட்டு நின்றயான்
ஆண்டன னேஅன்றோ அரசை ஆசையால்?

''நீஇனம் இருந்தனை; யானும் நின்றனன்;
ஏஎனும் மாத்திரத்து எற்று கிற்றிலென்;
ஆயவன் முனியும்என்று அஞ்சி னேன்அலால்,
தாய்எனும் பெயர்எனைத் தடுக்கற் பாலதோ?''

(கம்பன்—2172,'73)

'தாய் எனும் **பெயர்**' என்று பரதன் கூறுவது அறிதற் பாலது. ''உண்மையில் நீ என் தாய் அல்லை. தாயாய் இருப்பின், என் மனக்கருத்தை அறிய முற்பட்டிருக்க மாட்டாயா? இதுவரை என் கருத்தும் வாழ்வின் குறிக்கோளும் யாவை என்பதை நீ அறிய மாட்டாயா? அறிந்தால், இவ்வாறு செய்யத் துணிவாயா? அறியாது செய்தாய் என்றால், உன்னைத் தாய் என்று கூறுவதன் பொருள் என்ன?'' என்ற கருத்துக்கள் உள்ளடங்கத் 'தாய் என்ற பெயர் பூண்டிருப்பதால் அது என்னைத் தடை செய்து விடுமா?' என்று கூறுகிறான்.

அறத்தின் வடிவான பரதன், இராமன் என்ற தமையன் காட்டில் சென்று வருந்துவானே என்பதற்காக மட்டும் வருந்தவில்லை. பரதன் என்ற மனிதன், 'இராமன் என்ற மனிதன் இவ்வாறு காட்டில் துன்புற நேர்ந்ததே!' என்று வருந்துவது உண்மை. ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் காட்ட வேண்டிய அன்பு காரணமாகத் தோன்றும் வருத்த மாகும் அது. அரசச் செல்வத்தில் பிறந்து வளர்ந்த இராமன் எவ்வித நலங்களும் இல்லாததும் துயரம் தருவது மான காட்டில் சென்று வாட நேர்ந்தது என்று நினைக்கை யில் பரதன் மனம் மெழுகாய் உருகுகிறது. 'இராமன் கனி யும் கிழங்கும் உண்ண, யான் மட்டும் அரிசிச்சோறு உண் பேனா!' என்கிறான்,

''கையார் கல்லைப் புல்அடகு உண்ணக் கலமேந்தி
ஐயோ! நான்இன் சாலியின் வெண்சோறு அமுதுஎன்ன
நெய்யோடு உண்ண நின்றது நின்றார் நினையாரோ!''

(கம்பன்—2182)

இவ்வகை வருத்தம் பரதனைப் பீடித்தது ஒருபுறம் இருக்க, 'இராமன் காடு சென்றதால் அறம் பிழைத்து விட்டதே!' என்று வருந்துகிறான் அறத்தின் மூர்த்தி.

''மாளவும் உளன்ஒரு மன்னன்; வன்சொலால்
மீளவும் உளன்ஒரு வீரன்; மேயபார்
ஆளவும் உளன்ஒரு பரதன் ஆயினால்,
கோள்அலது அறநெறி குறைஉண் டாகுமோ?''

(கம்பன்—2174)

மேலே கூறிய அனைத்தும் நடைபெற்றுவிட்டதால், அறம் பிழைத்துவிட்டதே என்று வருந்துகிறான். 'அறத்தின் நாயகன் இராமன்', என்று பரதன் கருதியதே பரதனுடைய அன்பிற்குப் பெருங்காரணமாய் இருந்தது. இராமனுக்குச் செய்த தீமை அறத்திற்குச் செய்த தீமை என்றே பரதன் கருதுகிறான். அதற்குத் தீங்கிழைப்பதும், அவ்விழைத்த லுக்குத் துணையாக இருப்பதும், ஒருவர் இழைக்கப்

பார்த்துக் கொண்டிருப்பதும் தவறான செயல்கள் என்பது கூற வேண்டுவதில்லை.

உலகில் மனிதனாய்ப் பிறந்த ஒருவன் எச்செயலைச் செய்வதாயினும், அதனுடைய அப்போதைய பிற்பட்ட-பயனை மட்டும் பாராமல், 'இதனைச் செய்தால் பிறர் என்ன நினைப்பர்?' என்று ஆய்ந்தும் செய்யவேண்டும் என்பதுதமிழர் கண்ட முடிபாகும். சங்ககாலச் சான்றோர்கள் பாடிய பாடல்களில் இக்கருத்தைப் பரக்கக் காணலாம்.

''புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்.'' *(புறம்—182)*

''குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக.'' *(புறம்—72)*

''பழிதீர் ஆற்றல்'' *(புறம்—227)*

''கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்'' *(அகம்.—112)*

''செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை'' *(திரு.—656)*

''பிறர்பழியும் தம்பழிபோல் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு'' *(திரு.—1015)*

என்பன அச்சான்றோர் கூற்று. ஒருவனுடைய வாழ்வு அறவாழ்வாய் இருக்குமானால், அதில் பழி புகுதக் காரணம் இல்லை. ஊரில் உள்ளவர் ஒருவருமே தவறு கூற முடியாத படி ஒருவர் வாழ முடியுமா என்று கேட்கப்படலாம். அது இயலாதுதான். ஆதலாலேதான் பழிக்கு அடைமொழி தருகிறார் குறளாசிரியர். 'சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க,' என்பதால், 'அற்பர்கள், புறங்கூறுவோர் முதலாயினோர் பழி பேசினால் அதற்குக் கவலைப்பட வேண்டா,' என்பதே கருத்து. எனவே, இவற்றிலிருந்து அறியப்படுவதென்னையெனில், எக் காரணத்தானும் தமிழர் பழி பெறுவதை விரும்பவில்லை. பழியுடன் இன்பம் வருவதாயினும் அதனை விரும்பமாட்டார்கள் எனின்

பழிக்கு எத்துணை அஞ்சி வாழ்ந்தார்கள் தமிழர்கள் என்பது புலனாம்.

தமிழ்க் கம்பன் இக்கருத்தில் ஊறித் திளைப்பவன். அவனுடைய உடலில் ஓடும் குருதி முழுவதும் தமிழ்ப் பண்பாட்டை அறிந்து அதனைப் பறைசாற்றுவதாகலின், சமயம் நேர்ந்த பொழுது தமிழர்களுடைய தலையாய இக் கருத்தைப் பெய்து வைத்து விட விரும்புகிறான். இப்பொழுது தக்கதொரு சந்தர்ப்பம் வந்துளது. அவனுடைய படைப்பாகிய பரதன் அரற்றுகிறான்; தமையனுக்கு தாய் செய்த கொடுமை கண்டு அரற்றுகிறான். அம் மட்டோ; அக்கொடுமையால் நேர்ந்த பழியையும் நினைந்து அரற்றுகிறான். மேலே காட்டிய பாடல்கள் அனைத்திலும் 'சான்றோர்கள் பழியை வெறுப்பார்கள்,' என்பதுதானே பெறப்பட்டது?

சான்றோர்களுள் ஒரு சான்றோனாகப் படைக்கப்பட்டுள்ளான் பரதன். எனவே, அவனும் பழிக்கு நாணுகிறான்; வந்த பழியை நினைந்து நினைந்து அழுகிறான். அவன் அழுவதாக அமைந்த பதினைந்து பாடல்களில் **பத்து இடங்களில்** தனக்கு ஏற்பட்ட பழியை நினைந்து வருந்துகிறான். இன்பத்துடன் வரும் பழியைக்கூடப் பெரியோர்கள் விரும்பமாட்டார்கள் எனில், இன்பமும் தாராமல் பெருந் துன்பத்தையே விளைக்கும் பழியை யார்தாம் விரும்புவர்? அதிலும் சான்றோர் அதனைத் திரும்பியும் பார்ப்பரோ? இதோ பரதன் தனக்குற்ற பழியை நினைந்து கவல்கிறான்.

''சூழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்
வழியுடைத் தாய்வரு மரபை மாய்த்துஒரு
பழியுடைத்து ஆக்கினன் பரதன்...........''

(கம்பன்—2175)

''மாயீர் மாயா வன்பழி தந்தீர்'' (2177)

''உயிரோடும், தின்றும் தீரா வன்பழி கொண்டு'' (2178)

"பிறந்தான் ஆண்டான் என்னும் இதனால்
பெறலாமே (2179)

"மாயேன் வன்பழி" (2183)

"யான்உயிர் பேணிப் பழிபூனேன்" (2184)

"தீராது ஒன்றானும் பழி" (2184)

"என்றேனுந்தான் என்பழி மாயும் இடம்உண்டோ?" (2185)

என்பன பரதன் பரிவுரை.

ஏறத்தாழ அவனுடைய பேச்சிற் பெரும்பகுதி பழி, பற்றியதாகவே உள்ளது. பழிக்கு இத்துணைத் தூரம் நாண வேண்டுமாயின், அவனுடைய பண்பாட்டை நினைக்க நினைக்க வியப்பே மேலிடுகிறது. இதில் மேலும் வியப்பு என்னை எனில், உண்மையில் பழிக்கு உரிய செயல் ஒன்றையும் பரதன் செய்யவில்லை. பழிச்செயலைச் செய்தவள் கைகேயி. பரதனுக்கு அதில் பங்கு சிறிதும் இல்லை என்பதை அனைவரும் அறிவர். தசரதன், இராமன், கைகேயி என்ற மூவரும் நன்கு அறிந்ததொன்றே இச்செய்தி. கோசலையும், இலக்குவனும் 'பரதனுக்கும் இதில் பங்கு உண்டோ!' என்று ஐயுற்றதுண்டு. ஆனால், இறுதியில் அவ்விருவரும் 'கழிவிரக்கம்' காட்டும் அளவிற்கு உண்மை உணர்ந்துவிட்டனர்.

எனவே, ஒருவரும் நினையாமல் இருக்கவும் தனக்குப் பெரும்பழி வந்து விட்டதாகப் பரதன் ஏன் இவ்வளவு தூரம் கலங்க வேண்டும்? அவனது மனச்சான்றே அவன் குற்றமற்றவன் என்பதை நன்கு வெளியிடுமே! அவ்வாறு இருக்க, ஏன் கவலை? உலகத்தார் தன்மேல் (குறை இன்மையை எடுத்துக் கூறுவர் என்பதை அவன் அறி யானா? நன்றாக அறிவான். தான் செய்யாத செயலுக்குத் தன்மேல் யாரும் பழி கூறமாட்டார் என்னும் மெய்ம் மையை அறிந்ததாலேதான் உயிரை வைத்திருப்பதாக

அவனே கூறுகிறான், ஒருவர் நஞ்சைக் கண்ட அளவிலோ, அன்றித் தொட்ட அளவிலோ அவரை அந்நஞ்சு கொன்றுவிடுவதில்லை. அதேபோல ஒருவர் தவறு செய்தவர் பிள்ளையாய்த் தோன்றின அளவில் அவரையும் தவறு செய்தவர் என்று உலகம் கூறிவிடுவ தில்லை. அதனாலேதான் தான் இறவாமல் உயிரை வைத் திருப்பதாகப் பரதனே கூறுகிறான்.

"உண்ணா நஞ்சம் கொல்கிலது என்னும் உரைஉண்டு என்று
எண்ணா நின்றேன் அன்றி இரேன்என் உயிரோடே."

(கம்பன்—2186)

இவ்வாறு தன்மேல் பழி வாராது என்று உறுதியாக நம்புகிற பரதன், ஏன் பத்து இடங்களில் பழியைப் பற்றி அரற்ற வேண்டும்? அதிலும் ஓர் உண்மை உளது. அவன் சான்றோன் என்பதற்கு அதுவே ஆதாரம். எவன் ஒருவன் தான் பழிக்குரிய செயலைச் செய்யாவிடினும் பிறர் ஒருவர் செய்த பழியைத் தான் செய்தது போல நினைந்து நாணம் அடைகிறானோ, அவனைச் சான்றோருட்சான்றோனாகக் கூறுவர் பெரியோர். பரதன் அத்தகையன்; ஆகவேதான் பிறர் செய்த பழிக்குத் தான் நாணுகிறான்.

"பிறர் பழியும் தம்பழிபோல் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு

(திரு. 1015)

என்ற குறளுக்கு இலக்கியமாகிறான் பரதன். கைகேயியைத் தாய் என்று நினையாவிடினும் அவளைப் பகை என்றே அவன் கருதிக் கூறி உணர்ந்தாலும், அவள் செய்த பழிக்கு அவன் நாணுகிறான். நாணுடைமை என்ற பண்பாட்டிற்கு உறைபதியாய் விளங்கும் சால்புடையவனாகலின், இவ் வாறு அவள் செய்த பழியைத் தான் செய்ததாகவே கருதிக் கருதி நைந்து வருந்துகிறான்.

பரதனும் அமைச்சரும்

பரதனைத் தேற்றிய வசிட்டன் அவனை அரசை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறான். வசிட்டனுடைய இவ்வேண்டுகோளைக் கேட்ட பரதன், "நஞ்சினை நுகர் என நடுங்குவாரினும் அஞ்சினன் அயர்த்தனன் அருவிக் கண்ணின'னாய் அவையோரை நோக்கிப் பேசுகிறான். 'மூவுலகுக்கும் முதல்வனானவன் மூத்தவனாய் இருக்க, யான் மகுடம் சூடுதல் அறமா?' என்கிறான்; இதனை யடுத்து அவையோருக்கும் ஓர் இக்கட்டான நிலையை உண்டாக்குகிறான்.

"அடைவரும் கொடுமைஎன் அன்னை செய்கையை
நடைவரும் தன்மைநீர் நன்று இது என்றலின்
இடைவரும் காலம்ஈண்டு இரண்டு நீத்துஇது
கடைவரும் தீநெறிக் கலியின் ஆட்சியோ?"

(கம்பன்—2258)

'கொடுமை செய்து வரம் பெற்ற என்னுடைய அன்னையின் செயலை நேர்மையானது என்று நம்பினால்தான் அதன் அடுத்தபடியான பட்டத்தையும் எனக்குத் தரமுடியும். நீவிர் என் அன்னை செய்தது சரி என்று ஒப்புகிறீரா? அவ்வாறு ஒப்பினால் இது கலிகாலத்தின் கொடுமையை தவிர, வேறு ஒன்றும் அன்று,' என்கிறான். மேலும், 'அரசவையில் பலகாலம் இருந்து அனுபவம் பெற்ற நீவிர் யாரேனும் பண்டுதொட்டு இன்று வரை மூத்தவன் இருக்க இளையவன் அரசு புரிந்த வரலாறு கேட்டதுண்டா? உண்டாயின் கூறுக,' என்கிறான். இவை இரண்டு வினாக்கட்கும் அவையோர் எவ்விதமான விடையைத் தருதல் கூடும்? தாய் செய்தது முறை அன்று என்று கூறுவாரேல், பரதனைப் பார்த்துப் பட்டத்தை ஏற்றுக்கொள் என்று கூறவும் இயலாது. எனவே, அவர்கள் யாது விடை கூறலாம் என்று ஆராய்கின்ற நேரத்தில் பரதனே தன் கருத்தைப் பேசிவிடுகிறான்.

"அன்னவன் தனைக்கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொன்னெறி முறைமையில் சூட்டல் காண்டிரால்"

(கம்பன்—2260)

'இராமன் எவ்வாறு நினைப்பான் என்பது தெரியாமல் பரதன் இவ்வாறு சபையோரை நோக்கிக் கூறலாமா?' என்று சிலர் நினைக்கலாம். தான் நினைந்தபடி இராமன் வர மறுக்கவும் கூடும் என்பதை அவ்விராமன் தம்பியாகிய பரதனா அறியாமல் இருப்பான்? எனவே, ஒரு வேளை இராமன் வர மறுத்து விட்டால் யாது நடைபெறும் என்பது பற்றியும் அவனே விடை கூறிவிடுகிறான். 'அவ்வாறு இராமன் வர மறுத்து விட்டாலும், யான் அதுபற்றி கவல வில்லை. அவ்விராமனுடன் தங்கி அரிய காட்டில் நல்ல தவத்தை ஆற்றுவேன். இராமன் என் கொள்கையைக் கட்டுப்படுத்த முயன்றால், என் உயிரை மாய்த்துக் கொள்வேன்!' என்னும் கருத்தில்,

"அன்றுஎனில் அவனொடும் அரிய கானிடை
நின்றுஇனிது அருந்தவம் நெறியின் ஆற்றுவன்;
ஒன்றுஇனி உரைப்பின்என் உயிரை நீக்குவென்!"

(கம்பன்—2261)

என்று வஞ்சினம் போலக் கூறுகிறான். இத்தகைய உறுதி படைத்தவனைப் யார் தாம் என்ன செய்ய முடியும்? எனவே, அவையோர் இதோ அவனைப் புகழ்கின்றனர்.

" 'வான்தொடர் திருவினை மறுத்தி; மன்இளந்
தோன்றல்கள் யாருளர் நின்னின் தோன்றினார்?

" 'ஆழியை உருட்டியும் அறங்கள் போற்றியும்
வேள்வியை இயற்றியும் வளர்க்க வேண்டுமோ?
ஏழினொடு ஏழ்எனும் உலகம் எஞ்சினும்
வாழிய நின்புகழ்!' என்று வாழ்த்தினார்."

(கம்பன்—2262,' 63)

தசரதனிடத்தும் இராமனிடத்தும் பெருமதிப்பும் அன்பும் கொண்டிருந்த இவர்கள் பரதனைப் போற்றினார்கள் எனில், அதுவும், பதினான்கு உலகங்களும் அழியினும், 'நின்புகழ் எஞ்சுமோ' என வாழ்த்தினர் எனில், பரதனுடைய உயர்குணத்திற்கு வேறு சான்றும் தேவையோ?

கம்பன் காட்டும் பரதன்

இதுகாறும் பரதனைப் பிறர் கண்ட முறையையும், நாம் கண்ட முறையையும் கண்டோம். இவற்றிலிருந்து பரதனைப் பற்றிய ஒரு முழுத் தன்மையை அறியமுயல வேண்டும். இராமன், பரதன் என்ற இருவருமே கம்பனுடைய படைப்புக்கள்தாம். ஆனால் இருவரையும் இரு வேறு அச்சுக்களில் வார்க்கிறான் கம்பன் என்னும் கலைஞன். தொடக்கத்திலிருந்தே இராமனைக் கடவுளாகவே காண்கிறான் கம்பன். **வான்மீகியார்** இராமனை மனிதருள் சிறந்தவனாக்கிக் களித்தார். ஏனைய புத்த இராமாயணம், சைன இராமாயணம் போன்றவற்றிலும் இராமனை மனிதருள் சிறந்தவனாகவே காணலாம். ஆனால், கம்பநாடன் செய்த பல்வேறு புரட்சிகளுள் இதுவும் ஒன்று. இராமனைக் கடவுளாகவே கொண்டுவிட்டான். விராதன், சரபங்கன், வாலி முதலானவர்கள் கூற்றிலும் இக்கருத்தையே காண்கிறோம். இவை அனைத்தும் ஒரு புறம் நிற்க. இராவணனுங் கூட இராமனுடைய கடவுள் இயல்பை ஒரு கணம் அறிகிறான்.

"இவனோ தான்அவ் வேதமுதற்கா ரணன்என்பான்?"

(கம்பன்—9837)

இவை அனைத்தும் பாத்திரங்களின் கூற்றுக்களாகையால், நூலாசிரியன் கருத்தும் இது எனக் கூறல் பொருந்தாது,' எனில், ஆசிரியன் தானாகக் கூறும் இடங்களும் உண்டு. ஒன்றைக் காணலாம்.

'வாலி தன் மார்பிற்பாய்ந்த அம்பை உருவி அதில் எழுதியுள்ள பெயரைக் காண்கிறான்,' என்ற இடத்துக்

கவிஞன் கூற்றாக வரும் சொற்கள் நூலாசிரியனும் இராமனைக் கடவுளாகவே கொண்டான் என்பதை அறிவுறுத்துகின்றன.

''மும்மைசால் உலகுக்கு எல்லாம் மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்''

(கம்பன்—4013)

எனவே, இதிலிருந்து இராமனைப் பொருத்தமட்டில் கம்பநாடன் எத்தகைய கருத்தைக் கொண்டிருந்தான் என்பதில் ஐயம் இன்று. ஆனால், அவன் பரதனை எவ்வாறு கருதிப் படைத்தான்? ஒரு பாத்திரத்தைக் கடவுளாவே படைத்து, அப்பாத்திரத்திடம் உயர்ந்த பண்புகளை ஏற்றுதலில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால், மனிதனாகவே ஒரு பாத்திரத்தைப் படைத்து அதனிடம் உயர்பண்புகளை ஏற்றிக் காட்டுவதிலேதான் முழுச் சிறப்பும் இருக்கிறது. இராமன் நீங்கலாக உள்ள பாத்திரங்கள் அனைவரும் மனிதப் பண்புடன் விளங்குகிறார்கள். எனவே, மனிதர்கட்குரிய குறைவு நிறைவுகளையும் அவர்களிடம் காணலாம். சிலரிடம் குறைவு மிகுதியாகவும், சிலரிடம் நிறைவு மிகுதியாகவும் காணப்படலாம்.

பாத்திரங்களின் பண்பாடுகளை ஆயும்பொழுது மறவாமல் மனத்துள் இருத்தற்குரிய சட்டம் ஒன்று உண்டு. முழுவதும் நிறைவேயுடையாரும் முழுவதும் குறைவேயுடையாரும் யாண்டும் இவ்வுலகில் இல்லை. எனவே, குண ஆராய்ச்சி செய்யும் பொழுதும் இதனை மனத்துட்கொண்டு ஒரு பாத்திரத்தின் குறைவு நிறைவுகளைக் காண்டல் வேண்டும். வள்ளுவப் பெருந்தகை கூறிய,

**"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."** (திரு. 504)

என்ற குறளைக் கனவிலும் மறத்தலாகாது. இக்குறளுக்குச் சரியான பொருள் காண்டலும் சற்றுக் கடினமானதே. ஏன் எனில், 'மிகை' என்ற சொல் அவரவர் விருப்பம் போலப் பொருள்படக் கூடிய ஒப்புநோக்குச் சொல்லாகும். மிகை என்றால் என்ன? அளவால் மிகையையும், பண்பால் மிகையையும் 'மிகை' என்றே கூறுகிறோம். ஒருவரிடம் எண்ணிக்கையால் பலவான நல்லியல்புகளும் இருத்தல் கூடும். ஆனால், அவை அனைத்தையும் போக்கிவிடக்கூடிய ஒரு தீய பண்பு இருக்கலாம். இந்நிலையில் குறளுக்கு '(அளவால்) மிகை நாடி' என்று பொருள் கோடல் தவறாக முடிந்துவிடும். பல சிறு சிறு தீய குணங்கள் இருந்தும் அவை அனைத்தையும் போக்கக் கூடிய ஒரு பெரிய நற்குணம் இருத்தலும் கூடுமன்றோ? இவை அனைத்தையும் ஆய்ந்து குறளுக்கு உரை காண்டல் வேண்டும். இக்கருத்தை மனத்துட்கொண்டு பார்த்தால் தசரதன் கைகேயி என்பவர்களிடம் சிறு சிறு தவறுகளாகப் பல இருத்தலைக் காணலாம். ஆனால், இராவணனிடம் பிறர் மனை நய'க்கின்ற ஒரே ஒரு தவறுதான் காண்டல் கூடும். என்றாலும் என்ன? பல சிறு தவறுகள் இருந்தும் தசரதனை நல்லவன் என்றும் ஒரே தவறு இருந்தும் இராவணனை மிகவும் தீயவன் என்றும் கூறுகிறோம். எனவே, தவறும் இருவகைப்படும்; ஒன்று, அளவால் கணக்கிடப்படுவது; ஏனையது தன்மையால் கணக்கிடப்படுவது.

பரதனுடைய பண்பாட்டை ஆயும் பொழுது இவற்றை மனத்துட்கொண்டுதான் ஆய வேண்டும். பரதன் என்ற ஒரு மனிதன் தோன்றுகிறான். அதுவும் நீண்டநாள் மகப் பேறில்லாத மன்னன் ஒருவனுக்கு இரண்டாம் மைந்தனாய்ப் பிறக்கிறான்; கல்வி கேள்விகளில் நல்ல பயிற்சி பெறுகிறான்; பெற்ற தாயிடம் அல்லாமல் மாற்றாந் தாயிடம் வளர்கிறான்; தன் மூத்தவனாகிய இராம

னுடைய பண்பாட்டில் ஈடுபட்டு அவனைத் தன் வழிபடு கடவுளாகவே மதித்துப் போற்றுகிறான். இவ்வழிபாடு அவனை மேலும் மேலும் உயரத் தூண்டுகிறது. உலகிடை மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஒரு குறிக்கோள் தேவைப்படுகிறது. குறிக்கோள் இல்லாதவன் புற உடல் அமைப்பில் மனிதனாகவே காணப்படினும் ஆன்றோரால் மனிதனாக மதிக்கப்பட மாட்டான். 'குறிக்கோள் இலாது கெட்டேன்!' (நாவு. தேவாரம். 4: 67: 9) என்று நாவுக்கரசு நாயனாரும் 'தமக்கு என முயலா நோன்தாள் பிறர்க்கு என முயலுநர் உண்மையானே' (புறம். 182) என்று சங்கப் புலவரும் முழங்குகின்றனர். ஒருவருடைய குறிக்கோள் எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்று கூற யாருக்கும் உரிமை இல்லை. ஆனால், மேற்கொண்ட குறிக்கோளுக்கு எத்தகைய இடையூறு நேர்ந்தாலும் உயிரை விட்டேனும் குறிக்கோளைக் காக்கவேண்டிய கடமை, குறிக்கோளை மேற் கொண்டவர்கட்கு உண்டு.

பரதனும் ஒரு குறிக்கோளை மேற்கொண்டிருந்தான். அது யாது? தன் மூத்தோனாய இராமனைப் போற்றி வழி பட்டு அவன் வழி நிற்றலாம். அவனுடைய ஒவ்வொரு பேச்சும் இராமனைப் பற்றிய புகழுரையாகவும், அவ னுடைய ஒவ்வொரு செயலும் இராமனுக்கு உகந்ததாகவும் இருப்பதே அவனுடைய வாழ்க்கையின் குறிக்கோள். மிகச் சில சொற்களே பேசும் இயல்புடையவன் பரதன். மிக இன்றியமையாத சந்தர்ப்பம் நேர்ந்தால் ஒழியப் பேச மாட்டான்; பேச வேண்டிய வாய்ப்பு நேர்ந்த பொழுதே பேசுகிறான். அவன் எப்பொழுது வாய் திறந்தாலும் பயனற்ற சொல் ஒன்றுகூட அவன் வாயிலிருந்து வெளியாவ தில்லை. மிகுதியும் தன் அடக்கம் உடையவர்கட்கே இவ்வாறு வாய் மூடி அதிகம் பேசாதிருக்கும் இயல்பு அமையக் கூடும். எனவே, பரதன் மிகுதியும் அடக்கம் உடையவன் என்பது இதனாலும் பெறப்படுகிறது.

பரதன் தன்னுடைய உணர்ச்சி எதுவாயினும் அதனை மிகுதியும் வெளிக்காட்டக் கூடியவன் அல்லன் என்பதும் அறிய முடிகிறது. பரதன் திருமணம் முடிந்து அயோத்தி வந்தவுடன் தசரதன் அவனைக் 'கேகயநாடு செல்க' என்று பணித்துவிட்டான். அந்த ஆணையை உடன் சிரமேற் கொண்டு பரதன் கேகய நாடு சென்றுவிட்டான். இவ்வளவு விரைவாகத் தந்தை ஏன் தன்னை அனுப்ப வேண்டும் என்பது பற்றி அவன் நினைக்கவில்லை. ஒரு வேளை நினைத்திருந்தாலும் அதனை எப்பொழுதும் வெளியிட வில்லை. மேலும், கேகய நாட்டில் உறையும் பொழுதும் அவனுடைய எண்ணம் முழுவதும் அயோத்தியிலேதான் இருந்தது என்றும் கருத இடமுண்டு. அயோத்தியிலிருந்து வந்த தூதர்களைக் கண்டவுடன், தமையனுடைய நலத்தைப் பற்றிக் கேட்பதும், அயோத்தி மீளலாம்என்று கூறின வுடன் நாளும் நேரமும் கூடக் குறிக்காமல் புறப்பட்டுச் சென்றதும் இராமனிடம் அவனுக்கு இருந்த அளவு மிஞ்சிய காதலையே அறிவுறுத்துகின்றன. இத்துணைக்காதல் இருந்தும் இராமனிடம் செல்ல வேண்டுமென்று அவன் வாய் விட்டு வெளியிற்கூறவே இல்லை. அயோத்தி வந்த பொழுதும் தந்தையைக் காண வேண்டும் என்ற விருப்பம் அளவு மிஞ்சி இருப்பினும் ஒருவரையும் அதுபற்றிக் கேட்டு அவன் ஒரு விதமான குழப்பமும் நடத்தாமல் இருந்து விட்டதும் அவனுடைய அடக்கத்தையே அறிவுறுத்தும். கணவன் இறந்ததைப் பற்றிக் கூற வந்த தாய் யாரோ மூன்றாம் மனிதன் இறந்ததைப் போகிற போக்கில் கூறுவது போலக் குறிப்பிடவே, பரதன் அவள்மேல் கடுங்கோபம் கொள்கிறான். என்றாலும், 'உன்னை அல்லாமல் வேறு யார் இத்தகைய சொற்கள் கூறக்கூடும்?' என்று மட்டுந் தான் கூறுகிறானே தவிர, வேறு ஒரு சொல்லுங் கூற வில்லை. இவ்வாறு கூறும்பொழுது அவனுடைய துயரமும் சினமும் மீதூர்ந்து இருப்பினும், உணர்ச்சிகளை அடக்கிப் பழகியவன் ஆகலின், வேறு ஒரு சொல்லுங் கூறவில்லை. கோசலை தன்மீது ஐயங்கொண்டாள் என்பதை அறிந்த

பிறகு அவனுக்குச் சினம் வரவில்லை என்பது வியப்பே. தான் கேகயத்தில் இருந்ததை அறிந்த கோசலை, தன்னை இதுவரை வளர்த்தவளாய கோசலை, தான் இத்தகைய செயலில் ஈடுபடுவானா என்பதை அறிந்திருந்தும் இவ்வாறு கேட்டாளே என்றுகூட அவன் சினம் கொள்ளவில்லை என்றால் அதுவியப்பே அல்லவா? இவ்வளவு தூரம் கோசலை ஐயப்படுகிறாள் என்பதை அறிந்தும் சிறிதும் சினங் கொள்ளாதது மட்டும் அன்றி, அவளிடம் வஞ்சினம் கூறும் அளவிற்கு அவன் மனம் பண்பட்டிருந்திருக்கிறது. தான் தூய்மையானவன் என்பதை அவளுடைய தாயுள்ளம் அறியவேண்டும் என்பதற்காக அவன் எவ்வளவு பாடுபடுகிறான்! தன் உணர்ச்சி கொந்தளிக்கும் நிலையிலும் அதனை வெளிக்காட்டாமல் அவள் மனம் அமைதி அடைய இத்துணைத் தூரம் பேசுவானாகில், அவன் பண்பாட்டை என் என்று கூறுவது!

குறிக்கோளுடன் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னை அக்குறிக்கோளுக்குத் தியாகம் செய்யவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு 'தான்' என்ற ஆணவம் குறிக்கோளில் அமிழ்த்தப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஒருவன் பெரியோனாய்த் திகழமுடியும். மனிதத் தன்மையில் ஒரு பெரிய இடத்தைப் பெற்றுள்ள இந்த ஆணவம், மனிதன் தெய்வத் தன்மையடைய முயன்று அப்பாதையில் முன்னேறும் பொழுது அவனை விட்டுக் கொஞ்சங்கொஞ்சமாகக் கழன்றுவிடுகிறது. அது கழலக் கழல அம்மனிதனிடம் தெய்விகத் தன்மை மெள்ள முகிழ்க்கிறது. வேறு வகையாகக் கூறுமிடத்து ஆணவம் அற்றவிடத்தேதான் முழுத் தன்மை கிட்டுகிறது. இதனை,

"யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்." (திரு.—364)

என்று வள்ளுவப்பெருந்தகையார் குறிக்கிறார். அவ்வாறாயின், ஆணவம் அற்றால்தான் முழுத்தன்மைகிட்ட அதன் பயனாகிய வீடு பேறும் கிட்டும் என்பதும் பெறப்படும்.

ஆணவம் அற்றவிடத்து அவ்வாணவத்தின் வாலாகிய 'எனது' எனப்படும் 'மமகாரமும்' அற்றுவிடும். மமகாரம் அறுதலையே 'பற்று அறுதல்' என்றுங் கூறுவர். இதனையே ஆழ்வாரும் "அற்றது பற்று எனின் உற்றது வீடு" (திருவாய் மொழி, 12:5) என்கிறார். மனிதனாய்ப் பிறந்தவன் கட்டுக்களிலிருந்து விடுதலை பெற வேண்டுவது மிகவும் இன்றியமையாதது என்பதை அனைவரும் ஒப்புவர். அவ் வாறு விடுதலை பெற ஆணவம் நீங்க வேண்டும். ஆணவம் நீங்க வேண்டுமாயின் வாழ்வில் ஒரு குறிக்கோளைக் கொண்டு வாழவேண்டும். பெரியோர் அனைவரும் இவ்வழி யைத்தான் மேற்கொண்டு ஒழுகினர். அவர்கள் பெரியோ ராய் இருந்தமையின் இவ்வழியை மேற்கொண்டனர் போலும் என்று நினைத்துவிட வேண்டா. இவ்வழியை மேற்கொண்டு ஒழுகினமையால்தான் பெரியோர் ஆயினர். இராவணன் போன்றார் தவம், கல்வி முதலிய வேறு துறை களில் பெருமை பெற்றுப் பெரியோராய் விளங்கினாலும், 'குறிக்கோள்' இன்மையால் பெரியோர் தன்மையை இழந்து விட்டனர். ஆணவம் அவர்களை மெல்ல மெல்ல அழித்து விட்டது.

இதற்கு மாறாக ஆணவத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெற்ற ஒரு மனிதனுடைய வரலாற்றையே பரதனுடைய வாழ்வில் காண்கிறோம். கவிஞன் ஒரு மனிதனைப் படைத்து அவனைப் பெரியவன் ஆக்குகிறான். **மனிதனாய்ப் பிறந்த ஒருவன் எந்த அளவிற்கு உயர முடியும் என்பதைக் காட்டவே கவிஞன் பரதனைப் படைக்கிறான்.** வாழ்வில் உயரவேண்டுமாயின் சில வாய்ப்புக்கள் இருந் தால்தான் அது இயலும் என்று இன்று நம்மில் பலரும் நினைக்கிறோம். உயர் குடிப் பிறப்பு, அன்புடைய தாய் தந்தையர், தட்டாத செல்வம், நல்லறிவு முதலியன இருந் தாலன்றி வாழ்வில் உயர முடியாது என்று பலர் கருதவும் கூறவும் கேட்கிறோம். இவை இருப்பின் நலமே. ஆனால், இல்லாவிடினும் கவலை இல்லை. வாழ்க்கையில் குறிக்

கோள் என்ற ஒன்று இருந்துவிடுமாயின், அதுவே போதுமானது. அந்தக் குறிக்கோளுக்கு எத்தனை இடையூறுகள், சோதனைகள் வந்தாலும் கொண்டு செலுத்தக்கூடிய 'உறுதி'—தளராத **'மனஉறுதி'**—ஒன்று மட்டும் இருப்பின், அதுவே போதுமானது.

பரதன் என்ற மனிதன் உயர்குடியில் அரசன் திருமகனாய்ப் பிறந்தது உண்மைதான். ஆனால், அரசச் செல்வம் காரணமாக அவன் பண்பாட்டை அடையவில்லை. இன்னம் கூறப்போனால், அந்த அரசச் செல்வம் அவன் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும் இடையூறாகவே அமைந்து விட்டது. ஒருவனுடைய ஆன்ம முன்னேற்றத்திற்கு 'வறுமை' இரும்பு விலங்காகும்; அதே போல 'எல்லையற்ற செல்வமும்' பொன் விலங்காகும். இரும்பு விலங்கிலிருந்து தப்பித்துக் கொள்பவருங்கூடப் பொன்விலங்கிலிருந்து விடுதலையடைதல் கடினம். இது கருதியே போலும் மணிவாசகப் பெருந்தகை "செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்" (திருவாசகம் போற்றித் திரு அகவல். 39) என்று கூறிப்போனார்! பரதன் இந்தப் பொன் விலங்கிலிருந்தும் எளிதாக விடுதலை அடைந்து விட்டான். அவ்வளவு எளிதாக அவன் விடுதலை அடைய உதவியது யாது? அவன் மேற்கொண்ட குறிக்கோளே அன்றோ? இராமனை அண்ணனாகவும், தந்தையாகவும், தாயாகவும், வழிபடு தெய்வமாகவும் அவன் கருதிப் போற்றினான். இவ்வெண்ணத்தில் உறைப்பு ஏற ஏற அவனுடைய வாழ்வு உயரத் தொடங்கியது. 'இராமன் எத்தகையவன், அவன் செய்கின்ற செயல்கள் யாவை?' என்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு அவன் காலத்தை வீணாக்கவில்லை. அவனுக்குத் தேவையான பொருள் இராமன் என்ற 'இலட்சிய புருடன்' தான். அந்தக் குறிக்கோள் மனத்தை முன்னேற்றிக் கொண்டே செல்கிறது.

தான் கொண்ட குறிக்கோளில் எவ்வளவுக்கு எவ்வளவு பரதன் உறைத்து நிற்கின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு

மனிதத் தன்மை நீங்கித் தெய்வத் தன்மை அடைகிறான். பரதனுடைய வாழ்வில் எத்துணை முறைகள் குறிக்கோளுக்காகத் தன்னையும், தன் எண்ணங்களையும்—ஏன்?—முடிபுகளையுங்கூடத் தியாகம் செய்கிறான்? இராமன் அரசை ஏற்றுக் கொள்ளாவிடினும் தானும் காட்டில் தங்கித் தவம் மேற்கொள்ளப் போவதாகவே பரதன் பன்முறை கூறினான். தாயிடம் பேசும் பொழுதும், அமைச்சர்களுடன் பேசும் பொழுதும், பரத்துவாச முனிவனிடம் பேசும் பொழுதும் தான் வனத்தில் தங்கிவிடப் போவதாகவும் தவம் மேற்கொள்ளப்போவதாகவுமே கூறுகிறான் பரதன். இத்துணை இடங்களில் தன் கருத்தை வெளியிட்டுக் கூறிய பரதன், காட்டில் தங்கிவிடாமல் நாடு திரும்பியது ஏன்? நாட்டிற்கு வந்தாலும் அரசாட்சியை ஏற்கவில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும். 'காட்டிலேதான் வாழப் போகிறேன்,' என்று இத்துணைப் பேர்களிடம் தன் உறுதியைத் தெரிவித்த பரதன், இப்பொழுது நாடு மீளக் காரணம் யாது? தான் சொன்ன சொற்களைக் காவாமல் விடுவது முறையா? முறைதான். எப்பொழுது? தான் சொன்ன சொல் வேறாகவும், தன்னுடைய 'குறிக்கோள்' இடும் கட்டளை வேறாகவும் இருந்துவிட்டால் என் செய்வது? நம்மைப் போன்ற சாதாரண மக்கள் நாம் கூறிய கூற்றே பெரிதென்று மதித்து அதனைக் காப்பாற்றியே தீருவோம் என்று முனையும்பொழுது நம் சொல்லின் மேல் கொண்ட அன்பால் அதனைச் செய்யவில்லை! பின்னர் என்? 'நான்' என்ற ஆணவத்தின்மேல் கொண்ட காதலால் அந்த 'நானைக்' கீழே விட்டு விடக்கூடாது என்ற காரணத்தால்தான் சொன்ன சொல்லைக் காத்தல் வேண்டும் என்று முனைகிறோம். எனவே, இச்செயலும் ஆழ்ந்து நோக்கினால் நம்முடைய ஆணவத்திற்கு இரை தரும் செயலாகவே முடியக் காணலாம்.

இத்தகைய சூழ்நிலையில் பரதன் தான் தன்னைப் பற்றிக் கூறிய சொற்களைக் காக்க முற்படவில்லை. ஏன்?

தான் கூறிய சொற்களைக் காட்டிலும் தன் குறிக்கோளா கிய இராமன் கூறிய சொற்களைக் கடைப்பிடித்தல் மிகவும் இன்றியமையாதது. குறிக்கோள் ஒன்றைக் கொண்டு அதனிடம் 'நான்' என்ற பொருளைச் சரண் செய்துவிட்ட பிறகு 'நானு'க்குத் தனியான சொல்லும் செயலும் ஏது? பரதன் என்ற மனிதன், 'இராமபக்தி' என்ற குறிக்கோளில் ஒன்றிவிட்டான். இராமன் எதிரே இல்லாத வரை பரத னுக்கு என்று தனியான சொல்லும் செயலும் உண்டு. ஆனால், இராமன் பேசத் தொடங்கிவிட்டால், அவன் எதிரே பரதனும் இருந்துவிட்டால், பிறகு பரதனுக்கு என்று ஒன்றும் இல்லை. இராமன் இல்லாத நேரத்தில் பரதன் என்ற மனிதன் பேசினான். தன் கருத்தாக, முடிபாக ஒன்றை வெளியிட்டான். காட்டில் வாழும் மன்னனைக் கொணர்ந்து நாட்டில் முடி கவித்துவிட வேண்டும்; இன்றேல், தானும் காட்டில் தவக்கோலம் பூண வேண்டும் என்று முடிபு செய்தான்; அதை வெளியிட்டும் கூறினான். அவன் எந்த முடிபைக் கூறினாலும் அது இராமனுடைய ஆணைக்கு உட்பட்டதே ஆகும். இக்காலத்தில் வரவு செலவுக் கணக்கை கூறுபவர் 'தணிக்கையாளர் சோத னைக்கு உள்ளிட்டே இது வெளியிடப்படுகிறது''[1] என எழுதுகிறார்களல்லவா? எனவே, தணிக்கையாளர் இக் கணக்கை ஒப்பவில்லையாயின், வெளியிட்ட கணக்கை மறுத்துவிடவும் உரிமை உண்டு என்பதை அனைவரும் அறிவர். அதேபோலப் பரதன் என்ற மனிதன் இராமன் இல்லாத பொழுது பேசும் பேச்சுக்கும் கூறும் முடிபுகளும் இராமனுடைய தணிக்கைக்கு உட்பட்டனவேயாகும். பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் பரதனுடைய சொல்லும் செயலும் இராமனால் ஒப்பப்படுகின்றன. ஆனால் சிற்சில நேரங்களில் அவை மாறுபடுமாயின், இறுதியாக எஞ்சுவது இராமனுடைய கட்டளையே தவிரப் பரதனுடைய முடிபன்று.

1. Subject to audit

இதனைக் கண்டு யாரும் வியப்படைய வேண்டா. இந்நாட்டுப் பெரியார்கள் கண்ட 'சரணாகதித் தத்துவ ப்பொருள் இதுதான். ஏதாவது ஒரு குறிக்கோளைப் பற்றிக்கொண்ட இவர்கள் அதில் தம்மை, தாம் என்ற ஆணவத்தை, அமிழ்த்திவிடுகின்றனர். அதன்பிறகு இவர்களுக்குத் தனி வாழ்வு என்று ஒன்றும் இல்லை. தம் குறிக்கோள் பொருட்டாகவே வாழ்வார்களே தவிரத் தம்முடைய நலந் தீங்கு பற்றிக் கவலையுறுவதில்லை. இக் கருத்தை மணிவாசகப் பெருமான் இதோ பாடுகிறார்.

''அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றுஓர் இடையூறு எனக்குஉண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே?

(திருவாசகம். குழைந்த பத்து. 7)

தமக்கு எனத் தனிவாழ்வு வேண்டாதவர்களாகலின் இவர்களுடைய உடைமைகள் அனைத்தும் இவர்களால் குறிக்கோளாகப் போற்றப்படும் பொருளுக்கேயாம். இக் கருத்தை இதோ பெரியாழ்வார் பாடுகிறார்.

''தோட்டம், இல்லவள், ஆத்தொழு, ஓடை,
துடவை யும்கிண றும்இவை யெல்லாம்
வாட்டம் இன்றிஉன் பொன்அடிக் கீழே
வளைப்ப கம்வகுத் துக்கொண் டிருந்தேன்.''

(நாலாயிரப் பிரபந்தம், 437)

ஒவ்வொன்றாக அடுக்கிக் கூறுவதால் யாது பயன்? சுருங்கக் கூறினால், இவர்கள் தம்மைக்காட்டிலும் தாம் கொண்ட குறிக்கோளிடத்துப் பற்றுக் கொண்டவர்கள் எனலாம். உலகத்தில் வாழும் மக்களுள் ஒவ்வொரு

வருக்கும் சிறந்தது எது என்று கேட்கப்பட்டால் அவரவர் களே அவரவர்கட்குச் சிறந்தவர் என்ற விடைதான் வரும். இதோ நாவரசர் பாடுகிறார்.

''என்னில் யாரும் எனக்குஇனி யார்இலை;
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்;
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே.''

(தேவாரம் 5:21:1)

தம்மைக்காட்டிலும் தமக்கு இனியவன் இறைவன் என்று பாடுகிறார் நாவரசர். அதே போலப் பரதனுக்குப் பரதனைக் காட்டிலும் இனியனாவான் இராமன். அந்த இராமனுடைய கட்டளை வேறுவிதமாக இருந்திடின் பரதன் அக்கட்டளையை நிறைவேற்றுவானே தவிரத் தான் கொண்ட முடிவை நிறைவேற்ற ஒருப்படமாட்டான். மனிதனாய் இருந்த பரதன் தேவனாக மாற இவ் வழியைத்தான் மேற்கொண்டான். தான் கொண்ட குறிக் கோளை மட்டும் காப்பாற்ற வேண்டும் என்று நினைப் பவன் தன்னைக்காட்டிலும் குறிக்கோளினிடத்து மதிப்பு வைத்திருப்பவன் என்பது தெரியவில்லையா? அவ் வாறன்றித் தான் கூறிய சொற்களை மட்டும் எவ்வாறா யினும் காக்கவேண்டும் என்று நினைப்பவன், தன் மேலேயே முழு மதிப்பையும் வைத்திருக்கிறான் என்று கூறத் தேவை இன்று. நம்மைப் போன்ற சாதாரண மனிதர் கள், தாம் சொல்லிய சொல்லைக்கூடக் காக்க முடியாமல் காற்றில் விட்டுவிடுவார்கள். இத்தகைய மனிதர்கள் கூட்டத்தில் தன் சொல்லை மறவாது காப்பவன் பெரிய மனிதன்தான். நம்மை நோக்க அவன் பெரிய மனிதனாகக் காட்சியளிக்கிறான். அவ்வளவுதான். நம்மிடத்திலேயே நமக்கு மதிப்பு இல்லை. ஆனால், தன் சொல்லைக் காப் பவன் தன்னிடத்தே மதிப்புக் கொண்டவனாகலின், நம்மைவிட உயர்ந்தவனாதல் சரி. ஆனால், தன்னிடம் கொண்ட மதிப்பைக்காட்டிலும் தன் கொள்கை அல்லது

குறிக்கோள்மேல் மதிப்பு வைத்திருப்பவன் மிகமிகப் பெரியவனே. முன் கூறப்பெற்ற இரு கூட்டத்தாராலும் மதிக்கப்பட வேண்டியவனாகிறான் கொள்கைமேல் மதிப்பு வைத்திருப்பவன். இத்தகைய உண்மை நன்கு உணரப்பட்டால் அன்றிப் பரதனை நன்கு அறிய முடியாது. தானே கூறிச் சென்ற சொற்களைக்கூடத் தவற விட்டுவிட்டானோ என்ற ஐயத்திற்கும் இடம் உண்டாகும். தான் கூறிய சொல்லைப் பெரியதென்று மதித்துப் பரதன் அதனை நிலைநிறுத்தி இருப்பின், பரதனை மனிதருள் சிறந்தவனாக மட்டுமே கருத இடமுண்டு. ஆனால், தன் சொல்லைப் பெரிதென மதியாமல் இராமன் கட்டளையைச் சிரமேற்கொண்டு நந்திக் கிராமத்தில் வந்து தங்கி விட்டமையின், பரதன் மனிதத் தன்மையைக் கடந்து கடவுள் தன்மையை அடைந்துவிட்டான். ஆம்! 'மனிதராய்ப் பிறந்தவர்கள் என்ன செய்ய வேண்டும்? என்ன தியாகத்தைச் செய்தால் உயர்வை அடைய முடியும்?' என்பதைச் செயலில் செய்து காட்டிவிட்டான் ஆயிரம் இராமர்கட்கும் மேம்பட்டவனான அப்பரத வள்ளல்.

'நேர்மையின் ஆணி' என்று இராமனே பரதனைக் கூறினான் என்பதை அறிவோம். 'தன் சொல்லைக் காவாமல் விடுவது நேர்மையா? அறமா?' என்ற வினாத் தோன்ற இடமுண்டு. பல சமயங்களில் அறம், நேர்மை என்பன நம்மை மருட்டிவிடுகின்றன. எது அறம்? எது நேர்மை? இதோ பரதனுடைய சொல்லையும் செயலையுமே எடுத்துக்கொள்வோம். பரதன் அறம் பிறழ்ந்து விட்டானா தன்சொல்லைக் காவாமையால்? அறத்தின் பொருளை உணராதவர் அவன் தவறிவிட்டான் என்று கூடக் கூற முன் வருவர்! சாதாரண உலகியல் நிலையில் நிற்கும் நாம் அறம் என்று கூறுவதை அனைவரும் ஏற்பர் என்று கூறல் இயலாது. உலகியல் அறம், காலத்துக்கு ஏற்பவும், இடத்திற்கு ஏற்பவும் மாறுபடும் இயல்புடையது. நூறு ஆண்டுகட்குமுன் அன்ன சத்திரங்கள் கட்டி வைத்தல்

அறம் என்று கருதப்பட்டது. அன்று நாடு இருந்த நிலையில் அது முறை தான். ஆனால், இன்றும் அதனை அறம் என்று கூறினால் அறிஞர்கள் நம்புவார்களா? காலம் மாறினதால் அறமும் மாறிவிட்டது. இம்மாறுபாட்டைத் தான் நம் காலத்தே வாழ்ந்த கவிஞர் உணர்த்துகிறார்,

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்

..

அன்ன புண்ணியம் யாவினுங் கோடி
ஆங்குஓர் ஏழைக்கு எழுத்துஅறி வித்தல்."

—பாரதியார்

என்ற பாடல் மூலம். கால மாற்றத்தால் அறம் மாறினது போல, இடம் மாறும் பொழுதும் அறம் மாறுபடும். குளிர் தவிர வேறு அறியாத '**எஸ்கிமோக்கள்**' வாழும் இடத்தில் புலால் உணவு அறத்திற்கு மாறுபட்டது என்று கூற முடியுமா? சீல்மீன்கள் தவிர வேறு எதனை உண்டாலும் அவன் வாழ முடியாது. எனவே, இடத்திற்கு ஏற்பவும் அறம் மாறுபடுவதைக் காண்கிறோம். இவை போன்றவை உலகியல் அறங்கள் எனப்பெறும். இத்தகைய அறங்கள் காலம், இடம் என்பவற்றிற்குக் கட்டுப்பட்டு மாறுபடும் இயல்புடையவை. உலகியலில் வாழ்பவர்கள் தாம் வாழும் இடம் காலம் என்பவற்றிற்கு ஏற்ப இந்த அறங் களைக் கடைப்பிடித்து வாழவேண்டுவது மிக மிக இன்றி யமையாதது. ஆனால் பரதன் போன்றவர்கள் இந்த அறங் கட்குக் கட்டுப்படுவதில்லை. அவர்கள் இவற்றினும் வேறு பட்ட உயர்ந்ததும், மாறாததும், என்றும் இருப்பதும் ஆன அறத்தைப்[1] பின்பற்றி நடப்பவர். அத்தகைய அறங்களுள் ஒன்றுதான் குறிக்கோளுடன் வாழ்வது. தமிழ் நாட் டானுக்கும், எஸ்கிமோவுக்கும், ஐயாயிரம் ஆண்டுகள் முன்னர் வாழ்ந்தவனுக்கும், கி. பி. நாலாயிரம் ஆண்டில் வாழ்பவனுக்கும் இவ்வறம் பொதுவானதே; என்றும்

---

1. Higher Moral law

உள்ளது; எங்கும் பொதுவானது. இத்தகைய அறத்தை வாழ்வில் மேற்கொண்டவர்களை நாம் நம்முடைய சில்லறை அளவு கோலால் அளந்து காண்டல் அரிது; அளக்க முற்படுவதும் தவறு. பரதனை, 'அறத்தின் கடல்' என்று விசுவாமித்திர முனிவனும், 'நேர்மையின் ஆணி' என்று இராமனும் குறிப்பிடுகையில் இந்த உயர்ந்த அறத்தையும் நேர்மையையும் மனத்தில் கொண்டு பேசுகிறார்கள் என்பதை அறிதல் வேண்டும். முனிவன் பரதனைப் பற்றிக் கூறும் உருவகமே இத்தகைய முறையில் பொருள் கூற இடந்தருகிறது. இதோ அவன் கூற்று.

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளம்எனும் தகையானை" *(கம்பன்—657)*

'விலக்குதற்கு அரிதாகிய சிறந்த அறங்கள் (நியாயம்) என்னும் பெரிய ஆறுகள் தன்னிடம் சேர்தலால் பெருகி நிற்கும் கடல் போன்றவன்' என்கிறான் முனிவன். ஆம்! ஆற்றுக்கு நீர் ஏது? கடலிலிருந்துதான் கிடைக்கிறது மழை மூலமாக. ஆனால், ஆற்று நீரின் சுவையும் இயல்பும் கடல் நீரின் சுவையினும் இயல்பினும் மாறுபட்டவை அல்லவா? அதே போலச் சில வாழ்நாள் சிற்றறிவுடையவர்கட்கு உரிய அறம் வேறு; யாவரினும் மேம்பட்ட பெரியோர்கட்கு அறம் வேறு. இரண்டிற்கும் அறம் என்றுதான் பெயர் கூறப் படும். என்றாலும், நிலைபேறுடைய கடல் போன்ற அறங் களைக் கடைப்பிடிப்பவர்களும் உண்டு. பரதனும் இத்த கையவனே என்பதை உய்த்து உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

கம்பநாடன் படைத்த பரதனிடம் மற்றொரு சிறப்பும் காணக் கிடக்கின்றது. பரதன் என்ற மனிதன் 'மகாத்துமா பரதன்' ஆகிறான். அவன் வாழ்வு முழுவதிலும் ஒரு 'தெய்வீக நிகழ்ச்சி'[1] யாவது குறிக்கப்படவில்லை. காவியத் தில் படைக்கப்படும் பெருந்தலைவர்கட்கு இத்தகைய

---

1. Miracle

நிகழ்ச்சிகளையும் உடன் அமைப்பது திறனாய்வாளரும் ஒப்புகின்ற முறைதான். உலகின் பல்வேறு மொழிகளிலும் தோன்றியுள்ள காப்பியங்கள் அனைத்திலும் 'இயற்கையின் இறந்த நிகழ்ச்சி'[1] கலந்தே கூறப்படுகின்றது. ஆனால், கம்பநாடன் பரதனைப் பெரியவனாக மகாத்துமாவாகக் காட்ட இவற்றின் உதவியைச் சற்றும் நாடவில்லை. மற்றவர்கள் ஒருவனைப் பெரியவனாக ஏற்றுக் கொள்வதற்கு அவனிடம் காணப்பெறும் இந் நிகழ்ச்சிகள் காரணமாகலாம். ஆனால், இவை இன்றி யும் ஒருவனைப் பெரியவன் என்று அனைவரும் போற்று கின்றனர் எனில், அதில் ஒரு வியப்பு அடங்கியுளது. எவ்வித மான உதவியும் இன்றிப் பரதன் நம்முடைய மனத்தைக் கவர்ந்துவிடுகிறான். தெய்வம் என்று கருதப்படும் இராம னில் தொடங்கி, விலங்கு என்று கூறப்படும் அனுமன் ஈறாக அனைவருடைய கவனத்தையும் ஈர்த்துவிடுகிறான் பரதன். என்றாலும், இயற்கையின் இறந்த நிகழ்ச்சி ஒன்றையும் அவன் செய்ததாகவோ, செய்ய முயன்ற தாகவோ, கவிஞன் காட்டவில்லை; குறிப்பாகவேனும் காட்ட முயலவுமில்லை. தன்னிடம் இயற்கையாய் அமைந்த பண்பாட்டாலும் தான் கொண்ட குறிக்கோளி னிடத்துத் தன்னையே 'தியாகம்' செய்துவிட்ட பண்பாட் டாலும் பரதன் உயர்கிறான். அவனைத் தொடர்ந்து செல்லுதலும் அரிது என்று பிறர் கூறத்தக்க நிலையை அடைகிறான். பால காண்டத்தில் கைகேயி மைந்தனாய்த் தோன்றிய பரதன், பண்பாட்டால் உயர்கிறான். தசரத னின் காதல் மனைவியின் மைந்தன் என்பதாலும், இராம னுக்குப் பின் தோன்றியவன் என்பதாலும் பரதனுக்குப் பாலகாண்டத்தில் பெருமை கிடைக்கிறது. மேலே செல்லச் செல்ல, பரதனைப் பெற்றவள் என்பதால் கைகேயியின் குற்றத்தைக்கூட அனைவரும் மறக்கத் துணிந்துவிட்டார் கள். ஆம்!

---

1. Supernatural action

“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி, ‘இவன்தந்தை
என்நோற்றான் கொல்!’ என்னும் சொல்.” (திரு.—70)

என்ற குறள் தந்தைக்கு மட்டுமா பேசுகிறது? பாடலில் ஆண்பால் பேசப்படினும் தாய்க்கும் அக்குறள் பொதுத் தானே? தசரதனை மணந்த கைகேயியை யாரே மதிப்பர்? பரதனைப் பெற்ற கைகேயியை யாரே இழிப்பர்? ஆம்! பரதனைப் பெற்றதால் அப்பெருமாட்டி செய்த பிழைகளை அனைவரும் மறந்து விட்டனர். இராமபிரான் கைகேயியைத் தாய் எனவே மதித்தான் முதலில். பெற்ற தாய்க்கும் வளர்த்த கைகேயிக்கும், வேறுபாடு பாராட்ட வில்லை அப்பெரு மகன்; தன்னை வளர்த்த அவளை அது வரை தாய் எனவே மதித்தான். ஆனால், பின்னர்ப் பரதனுடைய முழுத்தன்மையையும் கண்டறிந்த பிறகு அத் தகையவனைப் பெற்றெடுத்தவள் சாதாரணப் பெண் அல்லள் என்பதை உணர்ந்துவிட்டான். பரதனை முழு வதும் அறிந்த பிறகு கைகேயியைப் பற்றி இராமன் ஒரே இடத்தில்தான் பேசுகிறான். ஆனால், அந்த இடத்தில் ‘தாய்’ என்று அவளைக் குறிக்கவில்லை; ‘தெய்வம், என்றே குறிப்பிடுகிறான். இராவணனை வென்று வாகை சூடி வரும் மைந்தனை ஆர்வத்துடன் காண வருகிறான் தசரதன் தேவர் உலகினின்று; மைந்தனை ஆரத் தழுவி, ‘ஏதேனும் வரம் பெறுக’ என இரந்து வேண்டுகிறான். இராமன் ஒரு வரம் வேண்டுகிறான். ஆம்! பரதனுடைய குறிக்கோளுக்கு இலக்கானவனன்றோ இராமன்! அவன் வேறு என்ன கேட்பான்? இதோ காணுங்கள்.

“ ‘ஆயினும்உனக்கு அமைந்ததுஒன்று உரை’என அழகன்,
‘தீயள் என்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருக’எனத் தாழ்ந்தான்.”
(கம்பன்—10079)

இதுவரையில் இராமன் கைகேயியை யாண்டும் தெய்வம் என்று கூறவில்லை. ஆனால், இப்பொழுது அவ்வாறு கூறக் காரணம் யாது? ஒன்றே ஒன்றாய்த்தான் இருத்தல் கூடும். பரதனைப் பெற்றவள் தெய்வமாகத்தான் இருத்தல் கூடும்

என்ற முடிபுக்கு வந்தான் இராமபிரான். எனவே, '**என் தெய்வமும்**' என்று கைகேயியைக் குறிப்பிடுகிறான். 'இவன் தந்தை (தாய்) என் நோற்றான் (ள்) இவனைப் பெறுவதற்கு!' என்ற வியப்புத் தோன்றியவுடன் பெற்றவளைத் தெய்வம் எனவே கருதிக் கூறியும் விட்டான் பண்பாட்டின் உறைவிடமான இராமன். இராமனுடைய மதிப்பில் கைகேயி இவ்வளவு உயர்வடையக் காரணம் யாது? பரதனைப் பெற்றவள் என்ற காரணத்தைத் தவிர வேறு ஒன்றும் கூறுவதற்கில்லை. ஒருவன் பிறந்த குடியை உயர்த்தவேண்டும் என இத்தமிழர் கூறினர். அவர்கள் மனிதனின் தலையாய கடமையாகக் கருதிய இதற்கு நல்ல தோர் எடுத்துக்காட்டாய் அமைந்துவிட்டான் பரதன். ஒருவனுடைய தாய் தந்தையரை அறிய வேண்டின், அவனுடைய வாயிலிருந்து வெளிப்படும் சொல்லே போதுமானது என்கிறார் பொது மறை தந்த பெரியோர்.

''நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.'' (திரு. 959)

நிலத்தின் இயல்பை அதில் தோன்றிய முளை காட்டுவதுபோல ஒருவன் குடிப் பெருமையை அவன் வாய்ச்சொல் காட்டுமாம். அறத்தின் ஆணி வேரான பரதனுடைய சொற்களை நேரே நின்று கேட்கும் பேற்றைக் காட்டிலேதான் இராமனும் பெறமுடிந்தது. பரதனுடைய பேச்சைக் கேட்கக் கேட்க இராமனுடைய மனம் பரதனை மட்டும் அல்லாமல் அவனைப் பெற்றவளையும் எடை போட்டுவிட்டது. அதன் பயனாக அது வரை தாய் என்று நினைத்த கைகேயியை அதன் பிறகு தெய்வம் என்று கூறலானான் இராமனும். அம்மட்டோடு அல்லாமலும் பொது மறை கூறிய

''இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.'' (திரு. 951)

என்ற குறளுக்கும் பரதன் இலக்கியமாதல் காண்டற்குரியது. செப்பம் என்பது நேர்மை என்று பொருள்படும்.

'நேர்மையின் ஆணி' என்று இராமனே பரதனைப் புகழ்ந்துள்ளான். அடுத்துள்ள நாணம் என்பது பழிபாவங்கட்கு அஞ்சுதல். தான் செய்யாவிடினும் பிறர் செய்த பழிக்குக் கூடப் பரதன் எவ்வளவு நாணமடைகிறான் என்பதைக் கண்டோம் ஆகலின், நாணுடைமை என்பதும் பரதனிடம் இயல்பாகவே அமைந்திருத்தலைக் காண்கிறோம். இவை இரண்டும் குடிப்பிறந்தார்கண் இயல்பாய் அமைந்திருக்கும் எனக் குறள் பேசுகிறது. பரதனிடம் இவை அமைந்துள்ளனவெனில் அவன் பிறந்த குடியும் (தாய் தந்தையரும்) உயர்ந்ததாகவே இருத்தல் வேண்டும். எனவே, கைகேயி சிறந்தவள் என்று இராமன் முதல் அனைவரும் கருதப் பரதனுடைய பண்பாடு இடந்தருகிறது.

மேற்கூறிய அனைத்தையும் மனத்துட் கொண்டு பரதனை நோக்கினால், 'சால்பு' என்று வள்ளுவர் குறித்த பண்பாட்டின் ஆணி வேராய் அவன் இலங்கக் காண்கிறோம்.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்." *(திரு. 983)*

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்துந்தாம் 'சால்புடைமை' என்ற பாரத்தைத் தாங்கும் தூண்களாம். ஆம்; பரதனிடம் இவ்வைந்தும் குடிபுகுந்துள்ளன. பரதன் ஒருவன் இருக்கக் கூடுமானால், அதுவே 'இராமராச்சியம்' எனப்படும். தான் என்ற பொருளை முற்றிலும் அழித்துக்கொண்டு, தொண்டு குறிக்கோள் என்பவற்றிற்கே வாழ்பவன், மனிதனாய்ப் பிறந்தாலும் தேவன் ஆகிறான். இவ்வுண்மையை உலகிற்குக் காட்டவே பரதன் படைக்கப்பட்டான்.

□□□

திரு. — திருக்குறள்.
கம்பன் — சென்னை கம்பன் கழகப் பதிப்பு (1976)



கங்கை

Printed by: ELANGOVAN PRINTERS, Madras-14